Registered as Newspaper

# உதயன்

பக்கங்கள் - 24 | விலை 30 செய்தி: 021 493 0000 விளம்பரம்: 021 493 1111

சுடர் :35 கதிர் :249 ஆடி 20ஆம் நாள் புதன்கிழமை 05 ஓகஸ்ட் 2020 வள்ளுவர் ஆண்டு 2051



# இலங்கையில் சின்மயா மிஷன்

■ சுவாமி சின்மயானந்தர்

சின்மயா மிஷன் இதன் சேவை உலகெங்கிலும் 340 மையங்களில் துறவிகளின் வழிநடத்தலில் அமைதியாக, செம்மையாக இயங்கி வருகின்றது. இந்துப் பாரம்பரியத்தின் குரு சீட பரம்பரைக்கு மீண்டும் புத்துயிர் தந்திட்ட மகா புருஷர் சுவாமி சின்மயானந்தர் இதன் தாபகர் ஆவார். சாஸ்திரங்கள் எனும் தாய் தந்த நல்லதோர் வீணையாகி அதில் உலகு நலம் பெற கீதை என்ற நாதத்தை எழுப்பியவர் இதனால் “கீதா பிரசாரகர்” எனும் நாமத்தை தம்மோடு இணைத்துக் கொண்டவர் சுவாமி சின்மயானந்தர். அவரைத் தொடர்ந்து சுவாமி தேஜோமயானந்தர், சுவாமி ஸ்வரூபானந்தா என குருபரம்பரை தொடர்வதை நாம் காண்கிறோம். சாஸ்திர ஞானத்தில் தேர்ந்து உண்மையை உணர்ந்த சுவாமி சின்மயானந்தர், இன்றைய உலகிற்கு, வாழும் வழியைக் காட்டிட வல்ல ஆசானாக விளங்கும் அரிய பொக்கிஷம் பகவத்கீதையே என்றுணர்ந்து, அதை அல்லலுறும் மக்களிடையே உபதேசிக்க ஆவல் கொண்டார்.

இமயத்தில் ஊற்றெடுத்து, கல்லையும் மலையையும் கடந்து சமவெளிகளைப் பயிர் விளையும் பூமியாக்கி எத்தனை உயிர்களை வாழ வைக்கும் கங்கையைப் போல், தான் பெற்றதை மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ளும் போதே வாழ்வு நிறைவு பெறுகிறது என்பதை உணர்ந்தார். உயர்ந்த இமயத்தில் தனிப்பட்ட ஆன்ம நிறைவை அனுபவிப்பதை விட “யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்” என மக்கள் வாழ்வை ஒளிபெறச் செய்வது கடன் எனத் துணிந்தார். சுவாமி சின்மயானந்தர் ஆரம்பித்த, இந்து மத சாஸ்திரங்கள் தரும் மெய்யறிவை மக்களுடன் பகிர்ந்து அவர்களது அக மாற்றத்துக்கு உறுதுணையாக இருக்கும் இப்புனிதமான பணியே இன்று சின்மயா மிஷன் எனும் பாரியதோர் விருட்சமாக உலகெங்கும் வளர்ந்து வருகிறது. இலங்கையில் சின்மயா மிஷனின் செயற்பாடுகள் 1979ல் சுவாமி சின்மயானந்தரின் வருகையுடன் ஆரம்பமாகியது.





1982ம் ஆண்டு சின்மயா மிஷன் இலங்கையில் தாபிக்கப்பட்டது. தொடர்ந்த சில ஆண்டுகள் நாட்டின் உள்நாட்டுப்போர்களால் மக்கள் அல்லல்பட்டமை நாட்டின் வளர்ச்சியைப் பல வழிகளிலும் அழித்து அமைதி இழக்கச்செய்தது. எனினும் 1990களில் வருகை தந்த இளம் துறவி ரமண சைதன்யா அவர்களின் உத்வேகமான செயற்பாடுகள் தமிழ் மக்களிடம் பெரும் ஆதரவைப்பெற்றன. மிஷனின் பணிகள் போர்ச்சூழலால் ஸ்தம்பித்துப்போக நேரிட்ட போதிலும் 1997ம் ஆண்டு ஒளிக்கீற்றாக ஸ்ரீ பக்த ஹனுமான் ஆலயத்திற்கான பூமி பூஜை இடம் பெற்றது. 2001ம் ஆண்டு ரம்பொடையில் ஸ்ரீ பக்த ஹனுமான் ஆலய மஹா கும்பாபிஷேகம் பூஜ்ய குருஜி சுவாமி தேஜோமயானந்தர் அவர்கள் தலைமையில் இடம் பெற்றது. இந்தியாவில் மஹாபலிபுரத்தில் தனிக் கல்லில் செதுக்கப்பட்ட 16 அடி உயரமான பக்த ஹனுமான் சிலை கொழும்புத் துறைமுகத்திற்கு கப்பல் மூலம் கொண்டுவரப்பட்டு ஊர்வலமாக ரம்பொடையை வந்தடைந்தமை குறிப்பிடதக்க விடயமாகும்.

**கொழும்பில் சின்மயாமிஷன்**

இலங்கையிலும் கொழும்பிலும் பணிகளை மேலும் சிறப்பாகச் செய்வதற்காக இலங்கை சின்மயா மிஷனின் கொழும்பு நிலையம் 1999ல் ஆரம்பிக்கப்பட்டது. 2007ல் கொழும்பில் இலங்கை சின்மய மிஷனின் தலைமயகத்தையும் கொழும்பு நிலையத்தையும் கொண்ட சின்மயா மிஷனுக்குச் சொந்தமான சின்மய பிரகதி கட்டட அங்குரார்ப்பணம் இடம் பெற்றது. 2008ல் மிஷனின் செயற்பாடுகளைப் பொறுப்புடன் நடாத்துவதற்கென இலங்கையைத் தாயகமாகக் கொண்ட இரு துறவிகள் பிரம்மச்சாரி தர்ஷன் சைதன்யா மற்றும் ஜாக்ரத சைதன்யா ஆகியோர் தமது பயிற்சியை முடித்து சேவகர்களாய் நியமிக்கப்பட்டனர். அவர்களில் பிரம்மச்சாரி தர்ஷன் சைதன்யா (சுவாமி குணாதீதானந்தா) கொழும்பில் செவ்வனே தமது சேவைகளை ஆற்றி வருகிறார்.

கொழும்பில், கொட்டாஞ்சேனையில் கட்டடத்துடன் கூடிய காணி ஒன்று அண்மையில் மிஷனுக்கு அன்பளிப்பு செய்யப்பட்டுள்ளமை மக்கள் அதன் பணிகள் மீது வைத்திருக்கும் நம்பிக்கையைக் காட்டுவதுடன் அதன் செயற்பாடுகளை மேலும் விரிவுபடுத்தவும் உதவிடும் என்பதில் ஐயமில்லை .

**யாழ்ப்பாணத்தில் சின்மயா மிஷன்** சின்மயா மிஷனின் செயற்பாடுகள் யாழ்ப்பாணத்தில் 2011ல் ஆரம்பிக்கப்பட்டது. பிரம்மச்சாரி ஜாக்ரத சைதன்யா (சுவாமி சிதாகாஷனந்தா அங்கு சேவை புரிய நியமனம் பெற்றார்.

2012ல் சின்மயா மிஷனின் யாழ்ப்பாண நிலையம் நல்லூரில் ஆரம்பிக்கப்பட்டது. 2014ல் சின்மய ஞானவேல் மண்டபம் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

அதனைத்தொடர்ந்து 2016ல் சின்மயா மிஷனின் பணிகளுக்கான அங்கீரகாரமாகவும், யாழ். மண்ணில் சின்மயா மிஷனின் பணிகளைத் மேலும் சிறப்பாகத் தொடர்வதற்காகவும் சொந்தமான ஆசிரமத்தை அமைப்பதற்காக சின்மயா மிஷனுக்கு நல்லூரில் காணி அன்பளிப்பாகக் கிடைக்கப்பெற்றது. 2020ல் மிஷனின் செயற்பாடுகளுக்கு பெரும் பங்கு ஆற்றிய சுவாமி சிதாகஷானந்தா சுயமாக செயற்பட தீர்மானித்து சின்மயா மிஷனிலிருந்து விலகியதைத் தொடர்ந்து சுவாமி குணாதீதானந்தா சின்மயா மிஷனின் ஆன்மிக செயல்த்திட்டங்களை யாழில் தற்பொழுது முன்னெடுத்து வருகிறார்.

**திருக்கோணமலையில் சின்மயா மிஷன்**

திருக்கோணமலையில் சின்மயா மிஷனின் செயற்றபாடுகள் 2008 இல் ஆரம்பிக்கப்பட்டது. 2010ல் இலங்கை சின்மயா மிஷன் வரலாற்றில் முதல் பெண் துறவியான பிரம்மச்சாரிணி மஹிமா சைதன்யா அவர்கள் திருக்கோ ணமலையில் சேவை புரிய நியமிக்கப்பட்டார். 2011ல் திருக்கோணமலையில் சின்மயா மிஷன் நிலையம் ஆரம்பிக்கப்பட்டது.

திருக்கோணமலையில் கிட்டத்தட்ட பத்து வருட சேவையைப் பூர்த்தி செய்துள்ள நிலையில், 2020ல் திருக்கோணமலையில் சின்மயா மிஷனுக்குச் சொந்தமான 'சின்மய தக்ஷிணகைலாஷ் உருவாகி உள்ளது. அழகிய, அமைதியான சூழலில் அமைந்துள்ள சின்மய தக்ஷிணகைலாஷ் சின்மய குடும்பத்தினரின் கடும் உழைப்பினாலும், குருதேவரின் பெரும் கருணையினாலுமே சாத்தியமானது என்பதை ஒரு சிலரே உணர்வார்.

2013ல் இலங்கையைச் சேர்ந்த மேலும் மூன்று துறவியர் சேவையில் இணைந்து கொண்டனர். கிளிநொச்சியில் பிரம்மச்சாரி சிவேந்திர சைதன்யாவும் (2015), கண்டியில் பிரம்மச்சாரி கார்த்திக் சைதன்யாவும் (2017), றம்பொடையில் பிரம்மசசாரிணி தன்வி சைதன்யாவும் சின்மய ஆன்மிகப் பணிகளை சிறப்பாக முன்னெடுத்து வருகின்றனர். 2020 இல் இலங்கை சின்மயா மிஷன் சேவையில் அர்ப்பணிப்புடன் சேவைபுரியும் துறவிகள் தொகை மேலும் இருவரால் அதிகரிக்கப்படவுள்ளது. சின்மயா மிஷனின் ஆன்மிக செயற்பாடுகளை நோக்கின் :

1. சிஷு விஹார் சிறு வயதிலிருந்தே ஆன்மீகக் கல்வியை பயிற்றுவிப்பதற்காக சின்மயா மிஷனால் புத்தம் புதிதாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ள சிஷுவிஹார் என்பது 4 வயதுக்கு கீழேயுள்ள சிறுவர்களிற்கான மன்றமாகும்.

2. பாலவிஹார் பாலவிஹார் என்பது வாராந்த சிறுவர் கூட்டமாகும். வயது ஐந்திலிருந்து பதினைந்து வரையிலான சிறுவர்கள் சின்மய மிஷன் நிலையங்களில் அல்லது தனியார் வீடுகளில் பயிற்சி பெற்ற ஆசிரியர்களின் கண்காணிப்பின் கீழ் நடைபெறும் கூட்டங்களில் கலந்துகொள்ளலாம். உடல், மன, அறிவு மற்றும் ஆன்மிக வளர்ச்சியினூடாக சிறுவர்களின் மொத்த வளர்ச்சியை நோக்காகக் கொண்டுள்ளது பாலவிஹார்.

3.சின்மய யுவகேந்திரா இயக்காற்றல் மிக்க ஆன்மிக இயல்பின் மூலம் இளைஞர்களின் ஆற்றல்களை வழிப்படுத்தல் இதன் முக்கிய நோக்கமாகும். கற்றல், ஆழமான சிந்தனை மற்றும் பல்வேறு வகையான செயற்பாடுகளினூடாக அவர்களின் திறமைகளை வெளிப்படுத்தவும் தலைமைத்துவப் பண்புகளை உண்டுபண்ணவும் சின்மய யுவகேந்திரா அர்ப்பணிப்புடன் இயங்கி வருகிறது.

4. சேதுகாரிகள் சின்மய சேதுகாரிகள் எனும் இவ்வமைப்பு இளவயதினருக்கும் முதியவர்க ளுக்குமான செயற்பாடுகள் இருப்பதைப்போல் நடுத்தர வயதினருக்குப் பொருத்தமான சின்மயாமிஷனின் செயற்பாடுகளுக்காக உருவாக்கப்பட்டது.

5. படிப்புக்குழு மற்றும் தேவிக்குழு ஐந்திலிருந்து பதினைந்து அங்கத்தவர்களைக்கொண்ட குழு ஒன்று வாரம் ஒருமுறை கூடுவது படிப்புக்குழு ஆகும். பெண்களுக்காகவே உருவாக்கப்பட்டது தேவிக்குழு ஆகும். சாஸ்திரங்கள் படிப்பது, பக்திப்



பாடல்கள் பாடுவது, பல்வேறு சமூக மற்றும் கலாசார செயற்பாடுகளை மேற்கொள்வது போன்றவை தேவிக்குழுச் செயற்பாடுகள் ஆகும்.

6. **சின்மய வானப்பிரஸ்தம்:** இது 60 வயதுக்கு மேற்பட்ட முதியவர்களுக்கான சின்மயா மிஷனின் பிரிவாகும். முதியவர்கள் தமது வாழ்க்கையின் இறுதி ஆன்மிக குறிக்கோளைக் அடைவதற்கு இங்கு பெரிதும் ஊக்குவிக்கப்படுவர். (22ஆம் பக்கம் பார்க்க)

Registered as Newspaper

# உதயன்

பக்கங்கள் - 24 | விலை 30 | செய்தி: 021 493 0000 | விளம்பரம்: 021 493 1111

சுடர் : 35 கதிர் : 249 ஆடி 20ஆம் நாள் புதன்கிழமை 05 ஓகஸ்ட் 2020 வள்ளுவர் ஆண்டு 2051

## 9ஆவது நாடாளுமன்றத் தேர்தல்

# வாக்களிப்பு இன்று ஏற்பாடுகள் பூர்த்தி

- வடக்கில் 858, 868பேர் வாக்களிக்கத் தகுதி
- 13 ஆசனங்களுக்கு 735 வேட்பாளர்கள் போட்டி
- 968 வாக்களிப்பு நிலையங்கள்
- 14,076 அதிகாரிகள் பணியில்
- 650 சுகாதார அதிகாரிகள் களத்தில்



யாழ்ப்பாணம், ஓக. 5

இலங்கையின் ஒன்பதாவது நாடாளுமன்றத் தேர்தலுக்கான வாக்களிப்பு இன்று புதன்கிழமை இடம்பெறவுள்ளது. வாக்களிப்பு நிலையங்களுக்கான வாக்குப் பெட்டிகள் நேற்றுக் காலை 8 மணி முதல், பொலிஸ் பாதுகாப்புடன் வாக்களிப்பு நிலையங்களுக்கு எடுத்துச் செல்லப்பட்டன. அவை பி.ப. 3 மணிக்கு முன்னர் வாக்களிப்பு நிலையங்களைப் பெரும்பாலும் சென்றடைந்துள்ளன. சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி வாக்களிப்புக்கான ஏற்பாடுகள் அனைத்தும் முழுமைப்படுத்தப்பட்டுள்ளன. 4 ►

## தயார் நிலையில் எஸ்.ரி.எவ்!

கொழும்பு, ஓக.5

பொதுத் தேர்தலுக்கான வாக்களிப்பு இன்று நடைபெறவுள்ள நிலையில், வன்முறைகள் ஏற்படலாம் என்று அடையாளம் காணப்பட்ட பகுதிகளில் கடமையில் ஈடுபடத் தயார் நிலையில் சிறப்பு அதிரடிப் படையினர் உள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

வன்முறை 4 ►

## குளவி கொட்டி முதியவர் சாவு

வவுனியா, ஓக.5

குளவிக் கொட்டுக்கு இலக்காகி வவுனியா மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட முதியவர் சிகிச்சை பயனின்றி நேற்று உயிரிழந்தார். அநுராதபுரம் கெப்பிற்றிக்கொலாவ பகுதியைச் சேர்ந்த 86 வயதுடைய முதியவரே உயிரிழந்துள்ளார்.

நேற்று முன்தினம் குளவி 11 ►

## அச்சம் ஏதுமின்றி வாக்களியுங்கள்!

கொழும்பு, ஓக.5

அளிக்கப்படும் வாக்குகள் யாருக்கு செலுத்தப்பட்டுள்ளன என்பதை யாராலும் இனம் காணமுடியாது. அவ்வாறான பரப்புரைகள் உண்மைக்குப்புறம்பானவை. அதனால் வாக்காளர்கள் அச்சமின்றி சுதந்திரமாக வாக்களிக்கலாம்.

இவ்வாறு பப்ரல் அமைப்பின் நிறைவேற்று பணிப்பாளர் ரோஹண ஹெட்டியாரச்சி தெரிவித்துள்ளார். 4 ►

## முறையாக வாக்களிப்பது எவ்வாறு?

கொழும்பு, ஓக.5

நீங்கள் விரும்பும் கட்சி அல்லது சுயேச்சைக் குழுவின் சின்னத்துக்கு முன்பாக புள்ளடியிடுங்கள். வேறு குறியீடுகளை இட வேண்டாம். கட்சியின் சின்னத்துக்கு ஒன்றை விட அதிக புள்ளடிகள் இருந்தால் உங்கள் வாக்கு நிராகரிக்கப்படும் என்று 4 ►

## வாக்களிக்கும் உரிமையை எவரும் தடுக்கவே முடியாது

### குழப்பவாதிகளுக்கு எதிராகக் கடும் நடவடிக்கை என்கிறார் தேசப்பிரிய

கொழும்பு, ஓக.5

வாக்களிப்பு மக்களின் ஜனநாயக உரிமை. அதை எவரும் தடுக்கவே முடியாது. பொதுத்தேர்தல் தினத்தில் வாக்களிப்பதைத் தடுத்து குழப்ப நடவடிக்கைகளில் எவராவது ஈடுபட்டால் அவர்களுக்கு எதிராகக் கடும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

இவ்வாறு தேர்தல்கள் ஆணைக்குழுவின் தவிசாளர் மஹிந்த தேசப்பிரிய எச்சரிக்கை விடுத்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

கொரோனா வைரஸ் பரவலால் ஒத்திவைக்கப்பட்டிருந்த நாடாளுமன்றத் தேர்தலை சுகாதார வழிகாட் 4 ►

## கொரோனா நேற்று 6

யாழ்ப்பாணம், ஓக.5

கொரோனாத் தொற்றுக்குள்ளான 6 பேர் நேற்று அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று சுகா 11 ►

## உதவித் தேர்தல்கள் ஆணையாளர் மீதான குற்றச்சாட்டு ஆதாரமற்றது

### தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஓக.5

யாழ்ப்பாணம் உதவித் தேர்தல்கள் ஆணையாளர் முறைதவறி இயங்குகின்றார் என்று முன்னாள் உதவித் தேர்தல் அதிகாரி கருணாநிதி தெரிவித் 4 ►

## இலங்கைக்கு கடத்தவிருந்த கடலட்டைகள் பறிமுதல்!

ராமேஸ்வரம், ஓக்.5

மன்னார் வளைகுடா ஊடாக இலங்கைக்குக் கடத்தப்படவிருந்த சுமார் 50 கிலோ கடலட்டைகள் இந்திய வனத்துறை அதிகாரிகளால் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. இந்தச் சம்பவம் தொடர்பாக ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

மண்டபம் வனத்துறை அதிகாரிகளுக்குக் கிடைத்த 11 ►

## காலையிலேயே வாக்களியுங்கள்

### யாழ்.தெரிவத்தாட்சி அலுவலர் அறிவுறுத்து

யாழ்ப்பாணம், ஓக. 5

வாக்காளர்கள் காலையிலேயே வாக்களிப்பு நிலையங்களுக்குச் சென்று வாக்களித்துவிடுங்கள் என்று யாழ்ப்பாண மாவட்டச் செயலரும் தெரிவத்தாட்சி அலுவல 4 ►

செலான் வங்கியிடமிருந்து
உங்கள் தங்கப் பவுணின் கரட் எதுவாயினும் அதிகூடிய முற்பணம்

அதிகபட்ச முற்பணத் தொகை
ரூ.66,000/-
0.79% மாதாந்த வட்டி வீதம் மட்டுமே

- அதிகபட்ச இரகசியத் தன்மை
- சிநேகபூர்வமான உடனடி சேவை
- சிறந்த பாதுகாப்பு

இச்சலுகை வரையறுக்கப்பட்ட காலத்திற்கு மட்டுமே

சந்தை நிலைவரங்களின் அடிப்படையில் குறிப்பிட்ட முற்பணமானது முன்னறிவித்தலின்றி மாற்றப்படலாம்.
மேலதிக விபரங்களுக்கு அருகிலுள்ள செலான் வங்கியை நாடுங்கள் அல்லது,

செலான் தங்கக் கடன் 011 200 88 88 செலான் வங்கி

Brand Finance Rating "A +" Fitch Rating: "A" (lka) கம்பனிப் பதிவிலக்கம் PQ 9
இலங்கை மத்திய வங்கியின் கீழ் பதிவு செய்யப்பட்ட வர்த்தக வங்கி



## முறையாக...

அறிவுறுத்தியுள்ளார் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தவிசாளர் மஹிந்த தேசப்பிரிய.

முறையாக வாக்களிப்பது எவ்வாறு என மக்களுக்குத் தெளிவூட்டும் வகையில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் தெரிவித்துள்ளதாவது

நீங்கள் விரும்பும் கட்சி அல்லது சுயேச்சைக் குழுவின் சின்னத்துக்கு முன்பாக புள்ளடியிடுங்கள். வேறு குறியீடுகளை இட வேண்டாம். கட்சியின் சின்னத்துக்கு ஒன்றை விட அதிக புள்ளடிகள் இருந்தால் உங்கள் வாக்கு நிராகரிக்கப்படும்.

விருப்பு இலக்கங்களுக்கு வாக்களிக்க விரும்பினால், உதாரணமாக 71 ஆம் இலக்கத்துக்கு வாக்களிக்க விரும்பினால் 71 ஆம் இலக்கத்தின் மீது புள்ளடியிடுங் கள்.

நீங்கள் இன்னுமொரு வேட்பாளருக்கு வாக்களிக்க விரும்பினால் அந்த இலக்கம் 81 ஆக இருந்தால் 81 ஆம் இலக்கத்தின் மீது புள்ளடியிடுங்கள்.

உங்களுக்கு இன்னுமொருவருக்கு வாக்களிக்க முடியும். அந்த இலக்கம் 91 ஆக இருந்தால் அந்த இலக்கத்தின் மீது புள்ளடியிடுங்கள். ஆகக் கூடுதலாக மூவருக்கே உங்களால் விருப்பு வாக்கை அளிக்க முடியும். ஒருபோதும் உங்கள் விருப்பு வாக்குகளை மூவரை விட அதிகமானவர்களுக்கு அளிக்க வேண்டாம். விருப்பு வாக்குகளை அளிக்காவிட்டாலும் உங்கள் வாக்கு நிராகரிக்கப்பட மாட்டாது. எனினும், கட்சிக்கு அல்லது சுயேச்சைக்குழுவுக்கு வாக்களிக்காமல் விருப்பு வாக்குகளை மாத்திரம் அளித்தால் உங்கள் வாக்கு நிராகரிக்கப்படும். முதலில் வாக்கையும் இரண்டாவதாக விருப்பு வாக்கையும் அளியுங்கள்- என்றார். (எ)

## வாக்களிப்பு...

வடக்கில் யாழ்ப்பாணம் மற்றும் வன்னித் தேர்தல் மாவட்டங்களில் உள்ளடங்கும் 968 வாக்களிப்பு நிலையங்களுக்கும் நேற்றுக் காலை வாக்கெண்ணும் நிலையங்களிலிருந்து வாக்குப் பெட்டிகள் அனுப்பி வைக்கப்பட்டன.

யாழ்ப்பாண மாவட்டத்தில் 508 வாக்களிப்பு நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. 7 ஆயிரத்து 795 அலுவலர்கள் கடமையில் ஈடுபட்டுள்ளனர். வாக்களிப்பு நிலையங்களுக்கான பெட்டிகள் 125 பேருந்துகளில் நேற்றுக் காலை 8 மணிக்கு யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியிலிருந்து அனுப்பி வைக்கும் பணிகள் ஆரம்பமாகின. மதியம் 12.30 மணியளவில் அந்தப் பணிகள் நிறைவுக்கு வந்தன. நெடுந்தீவுக்கான வாக்குப் பெட்டி குறிகாட்டுவான் துறை முகத்தில் வைத்து கடற்படையினரிடம் ஒப்படைக்கப்பட்டது. இன்று நடக்கும் தேர்தலில் யாழ்ப்பாண மாவட்டத்தில் 4 லட்சத்து 79 ஆயிரத்து 584 பேர் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர்.

கிளிநொச்சி மாவட்டத்தில் 107 வாக்களிப்பு நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. ஆயிரத்து 745 அலுவலர்கள் கடமைகளில் ஈடுபட்டுள்ளனர். வாக்களிப்பு நிலையங்களுக்கான பெட்டிகள் 48 பேருந்துகளில் பழைய மாவட்டச் செயலகத்தலிருந்து அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. கிளிநொச்சி மாவட்டத்தில் 92 ஆயிரத்து 260 பேர் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர்.

யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சியை உள்ளடக்கிய யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டத்தில் 7 ஆசனங்களுக்காக 330 பேர் தேர்தலில் போட்டியிடுகின்றனர்.

வன்னித் தேர்தல் மாவட்டத்தின் வவுனியா மாவட்டத்தில் 141 வாக்களிப்பு நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. ஆயிரத்து 550 அலுவலர்கள் கடமைகளில் ஈடுபட்டுள்ளனர். வாக்களிப்பு நிலையங்களுக்கான வாக்குப் பெட்டிகள் 37 பேருந்துகளில் அனுப்பி வைக்கப்பட்டன. வவுனியா மாவட்டத்தில் ஒரு லட்சத்து 19 ஆயிரத்து 811 பேர் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் 136 வாக்களிப்பு நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. ஆயிரத்து 834 அலுவலர்கள் கடமைகளில் ஈடுபட்டுள்ளனர். வாக்களிப்பு நிலையங்களுக்கான வாக்குப் பெட்டிகள் 48 பேருந்துகளில் நேற்றுக் காலை அனுப்பி வைக்கப்பட்டன. முல்லைத்தீவு மாவட்டத்தில் 78 ஆயிரத்து 371 பேர் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர்.

மன்னார் மாவட்டத்தில் 76 வாக்களிப்பு நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. ஆயிரத்து 202 அலுவலர்கள் கடமைகளில் ஈடுபட்டுள்ளனர். வாக்களிப்பு நிலையங்களுக்கான வாக்குப் பெட்டிகள் 30 பேருந்துகளில் அனுப்பி வைக்கப்பட்டன. மன்னார் மாவட்டத்தில் 88 ஆயிரத்து 842 பேர் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர்.

வன்னித் தேர்தல் தொகுதியில் 6 பேரைத் தெரிவு செய்வதற்காக 405 பேர் போட்டியிடுகின்றனர்.

இதேவேளை இந்தத் தேர்தலில் கொரோனாத் தொற்று அச்சம் காரணமாக சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றுவதற்காக வடக்கு மாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்துக்கு உட்பட்ட பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் மற்றும் குடும்பநல மருத்துவ மாதுக்கள் என்று 650 பேர் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் என்று வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவ கலாநிதி ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார். (ஒ.5.6.110)

## வாக்களிக்கும்...

டல்களுடனும், கடுமையான பொலிஸ் பாதுகாப்புடனும் இன்று நடத்தவுள்ளோம். இதற்கு சகல தரப்பினரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும். முக்கியமாக ஒவ்வொரு கட்சிகளின் வேட்பாளர்களும் ஆதரவாளர்களும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

வாக்களிப்பு மக்களின் ஜனநாயக உரிமை. அதை எவரும் தடுக்கவே முடியாது. பொதுத் தேர்தல் தினத்தில் மக்கள் வாக்களிப்பதைத் தடுத்துக் குழப்ப நடவடிக்கைகளில் எவராவது ஈடுபட்டால் அவர்களுக்கு எதிராகக் கடும் நடவடிக்கை எடுக்கப்படும்.

அதேவேளை, வாக்காளர்களுக்குப் பொதுப்போக்குவரத்து வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. அதில் கட்சி சார்ந்த எவரும் தலையிட முடியாது.

தாம் விரும்பும் கட்சியையும் தாம் விரும்பும் வேட்பாளர்களையும் சுதந்திரமாகத் தெரிவு செய்யும் உரிமை ஒவ்வொரு வாக்காளர்களுக்கும் உண்டு. அதில் எவரும் அழுத்தங்களைப் பிரயோகிக்க முடியாது. இயலுமானவரை பொதுத்தேர்தல் சுதந்திரமாக அமைதியாக நீதியாக நடைபெற அனைத்து ஏற்பாடுகளையும் மேற்கொண்டுள்ளோம்என்றார். (எ-22)

## காலையிலேயே...

ருமான க.மகேசன் அறிவுறுத்தியுள்ளார்.

இன்று நடைபெறவுள்ள தேர்தல் தொடர்பில் மாவட்டச் செயலகத்தில் அவர் நேற்று நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேற்கண்டவாறு அறிவுறுத்தினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

வாக்காளர்கள் காலையிலேயே சென்று வாக்களிக்க வேண்டும். சுகாதார நடைமுறை மற்றும் தனியாள் இடைவெளியைப் பேணி முகக் கவசம் அணிந்து வாக்களிக்கமுடியும். தேர்தலுக்கான சகலஏற்பாடுகளும்முடிவடைந்துள்ளன.

வாக்களிப்பு நிலையங்களுக்கு வாக்குப் பெட்டிகளுடன் சிரேஷ்ட தலைமை தாங்கும் அலுவலர்களும் தேர்தல் மத்திய நிலையத்திலிருந்து வாக்களிப்பு நிலையங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

சுகாதார நடைமுறைகளை கவனிப்பதற்கான பணிகளில் சுமார் 450 அலுவலர்கள் அமர்த்தப்பட்டுள்ளனர். சிறப்புத் தேவையுடையோர் வாக்களிக்கவும் அந்தந்த வாக்களிப்பு நிலையங்களில் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

நெடுந்தீவுப் பகுதி வாக்குப்பெட்டி வழமைபோன்று வான் மார்க்கமாக எடுத்து வருவதற்குரிய நடவடிக்கையை தேர்தல்கள் திணைக்களம் முன்னெடுத்துள்ளது. அதேபோல ஏனைய தீவுப் பகுதிகளுக்கான வாக்குப் பெட்டிகளும் கடற்படையினரின் உதவியுடன் எடுத்து வருவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது- என்றார். (கு-20)

## தயார்...

கள் இடம்பெறும் என்று எதிர்பார்க்காத போதும் பொலிஸார் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக சிறப்பு அதிரடிப்படையினரைக் கடமையில் ஈடுபடுத்துமாறு வேண்டுகோள் விடுத்துள்ளனர் என தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

ஆனால் தேர்தல் நடவடிக்கைகளுக்கு பொலிஸ் உத்தியோகத்தர்களே பயன்படுத்தப்படுவர் என்றும், படையினரை பயன்படுத்தப்போவதில்லை என்றும் தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

அதேவேளை கடந்த தேர்தல்களின் போது இருந்த நிலைமையைக் கருத்தில் கொண்டு, குருநாகல், ஹம்பாந்தோட்டை, அம்பாறை, நாவலப்பிட்டி, புத்தளம் போன்ற பகுதிகளில் முக்கிய இடங்களாக அடையாளம் காணப்பட்டுள்ளன.

இந்த இடங்களில் கண்காணிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள சிறப்பு குழுக்கள் நிலைநிறுத்தப்பட்டுள்ளன என்று பப்ரல் அமைப்பு அறிவித்துள்ளது. (எ)

## உதவித்...

துள்ள குற்றச்சாட்டு, இதுவரை ஆதாரமற்றது என்று தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

மீள் குடியேற்ற அமைச்சின் 2019 ஆம் ஆண்டு நிதி ஒதுக்கீட்டில் 150 லட்சம் ரூபாவில் யாழ்ப்பாணம் மீனவர்களின் வாழ்வாதார மேம்பாட்டுக்காக கடற்றொழில் உபகரணங்கள் விநியோகம் மேற்கொள்ளுவதற்காக ஒரு கட்சியினர் முயற்சித்தனர். அந்த அரசியல்வாதி தற்போது ஓர் வேட்பாளராக உள்ளநிலையில் அவற்றை வழங்கப் பிரதேச செயலாளர் கோரிய அனுமதிக்கு உதவித் தெரிவத்தாட்சி அலுவலகர் அனுமதி வழங்கியதில் மோசடியாக செயல்பட்டுவிட்டார் என முன்னாள் உதவித் தேர்தல் அதிகாரி நேற்றுப் பகிரங்கமாக குற்றஞ்சாட்டியிருந்தார்.

இது தொடர்பாக ஆணைக்குழுவின் உறுப்பினர்களில் ஒருவரான இரட்ணஜீவன் ஹூல் மற்றும் உதவித் தேர்தல் ஆணையாளர் அமல்ராஜ் ஆகியோர் கருத்துத் தெரிவித்தபோதே மேற்கண்டவாறு தெரிவித்தனர்.

அவர்கள் தெரிவித்ததாவது:

இந்த நடவடிக்கையானது கடந்த 6ஆம் மாதத்தின் ஆரம்பத்தில் தேர்தல் நடக்குமா என்ற நிலைமை இருந்த காலத்தில் பிரதேச செயலாளர் விண்ணப்பித்த சமயம் அனுமதிக்கப்பட்டது. அவை ஓர் மீனவ அமைப்பிடமே வழங்கப்பட்டன. அந்த அமைப்பு இன்னுமோர் அமைச்சின் கீழ் வருவதால் அமைச்சின் கூற்றின் பிரகாரம் அவை வழங்கப்பட்டன என்று கூறப்படுகின்றது.

இவ்வாறு மாறுபட்ட கூற்றுக்கள் உள்ள போதும் இந்த விடயத்தை ஆராய்ந்து ஆணைக்குழுவுக்கு அறிக்கை சமர்ப்பிக்க கருணாநிதி உட்பட மூவர் நியமிக்கப்பட்டனர். எனினும் விசாரணையும் முடியவில்லை. ஆணைக்குழுவுக்கு இந்த விடயம் தொடர்பில் எந்த அறிக்கையும் சமர்ப்பிக்கவில்லை. இவ்வாறான மாறுபட்ட கருத்தை ஏன் இன்று (நேற்று) அவசரமாகத் தெரிவித்தார் என்பது எமக்கு புரியவில்லை- என்றனர். (ஏ)

## அச்சம்...

வாக்களிப்பு மத்திய நிலையங்களில் அளிக்கப்படும் வாக்குகள் யார் எந்தக் கட்சிக்கு வாக்களித்தனர் என்பது தொடர்பில் அறிந்துகொள்ளலாம் என தெரிவித்து வாக்காளர்கள் சில இடங்களில் அச்சுறுத்தப்பட்டுள்ளனர் என்று வெளியான தகவல்கள் தொடர்பில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது;

வாக்களிப்பு மத்திய நிலையங்களில் அளிக்கப்படும் வாக்குகள் யார் எந்த கட்சிக்கு தனது வாக்கை அளித்தார் என்பதை தங்களால் அறிந்துகொள்ள முடியும். அதனால் வேறு கட்சிகளுக்கு வாக்களித்து மாட்டிக்கொள்ள வேண்டாம் என ஒரு சில வேட்பாளர்கள் வாக்காளர்களை அச்சுறுத்தும் வகையில் செயற்பட்டுள்ளனர். முக்கியமாகத் தேர்தல் பரப்புரைக் காலங்களில், தேர்தல் பரப்புரை மேடைகளில் இவ்வாறு பகிரங்கமாகத் தெரிவித்துள்ளனர்.

வாக்களிப்பு நிலையங்களில் மிகவும் பாதுகாப்பான சுகாதார நடைமுறைகளை பின்பற்றுவதற்கு தேர்தல்கள் ஆணைக்குழுவும் சுகாதாரப் பிரிவினரும் நடவடிக்கை எடுத்துள்ளன. அதேபோன்று அளிக்கப்படும் வாக்காளர்களின் இரகசியத்தன்மை நூறுவீதம் பாதுகாக்கப்பட்டுள்ளது. வாக்காளர்களால் அளிக்கப்படும் வாக்கு, யாருக்கு அளிக்கப்பட்டது என்பதை யாரும் அறிந்துகொள்ள முடியாது.

அவ்வாறு அறிந்துகொள்ளலாம் என தெரிவிப்பது, உண்மைக்கு புறம்பானது என்பதுடன் வாக்காளர்களை பயமுறுத்துவதற்காக மேற்கொள்ளப்படும் செயலாகும். அதனால் அவ்வாறான எந்த அச்சுறுத்தலுக்கும் அஞ்சாமல் வாக்காளர்கள் அச்சமின்றி சுதந்திரமாக தங்களது வாக்குகளை அளிப்பதற்கான பாதுகாப்பு உறுதி செய்யப்பட்டிருக்கின் றது.

வாக்களிக்கச் செல்லும்போது செல்லுபடியாகும் அடையாள அட்டையைக் கொண்டு செல்லத் தவறக்கூடாது. அதேபோன்று உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டை கிடைக்காதவர்கள் 2019 வாக்காளர் பட்டியலில் தங்களது பெயர் பதிவு செய்திருப்பதை உறுதிப்படுத்திக் கொண்டு அங்கீகரிக்கப்பட்ட அடையாள அட்டையுடன் சென்று வாக்களிக்கலாம். அதற்கான அனுமதியை தேர்தல்கள் ஆணைக்குழு வழங்கியிருக்கின்றது- என்றார். (எ)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## நாடாளுமன்றத் தேர்தலும் தமிழ் மக்களின் எதிர்காலமும்

இன்று நாடாளுமன்றத்தேர்தல். ஜனநாயகம் என்பது, மக்களால் மக்களுக்காகத் தெரிவு செய்யப்படும் மக்களின் அரசியல் அதிகாரம் எனக் கோட்பாட்டு ரீதியாக கருத்துகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

இலங்கையைப் பொறுத்தவரையில், நாடாளுமன்றத் தேர்தல் என்பது தமது ஆட்சியாளர்களைத் தெரிவு செய்வதற்கு ஐந்து வருடத்துக்கு ஒருமுறை வழங்கப்படும் வரப்பிரசாதம் என்றே கருதப்படுகிறது. அவ்வகையில் சிங்கள மக்கள் தங்களின் ஆட்சியாளர்களை வாக்களிப்பின் மூலம் தாங்களே தெரிவு செய்கின்றனர்.

ஆனால் தமிழ் மக்களுக்கு இலங்கை சுதந்திரம் பெற்ற காலத்திலிருந்து இன்று வரை அத்தகைய ஒரு சுதந்திரம் கிடைக்கவில்லை. தமிழ், முஸ்லிம், மலையக மக்களென இலங்கையில் வாழும் சிறுபான்மை மக்கள் அனைவரையும் ஆட்சி செய்பவர்களை சிங்கள மக்களே தெரிவு செய்கின்றனர். எனவே உலகம் பரந்த ஜனநாயகக் கோட்பாடு இலங்கையில் தமிழ் மக்களுக்கு எட்டாக்கனியாகவே உள்ளது.

எனினும் தமிழ் மக்களுக்கு தங்கள் நாடாளுமன்றப் பிரதிநிதிகளைத் தெரிவு செய்யும் உரிமையுண்டு. ஆனால் அப்பிரதிநிதிகள் ஆட்சியதிகாரம் கொண்டவர்களாகவோ, தேசிய அரசியலைத் தீர்மானிப்பவர்களாகவோ என்றும் இருந்ததில்லை; இனியும் இருக்கப்போவதில்லை. ஒரு சிலர் ஆட்சியில் பங்காளிகளாக தமிழ் மக்களின் விருப்பத்துக்கு விரோதமாக இணைந்து கொண்டாலும், அவர்கள் ஆட்சியாளர்களின் இலக்குகளைச் செயற்படுத்தும் பகடைக் காய்களாக விளங்க முடியுமே ஒழிய, தமிழ் மக்களின் அபிலாசைகளை நிறைவு செய்யும் வகையில் செயற்பட்டதுமில்லை; செயற்படவும் முடியாது.

ஆனால் தமிழ் மக்களின் பிரதிநிதிகளால் எதுவுமே செய்யமுடியாதெனச் சொல்லிவிட முடியாது. தமிழ் மக்களின் அபிலாசைகளை நிறைவேற்றுவதை நோக்கி முன் செல்ல இரு வாய்ப்புகள் உள்ளன.

பெரும்பான்மை இனக்கட்சியொன்று ஆட்சியமைப்பதற்கு நாடாளுமன்ற உறுப்பினர்களின் தொகை போதாத போது தமிழ்ப் பிரதிநிதிகளின் ஆதரவை வேண்டி நிற்பார்கள். அப்படியான சந்தர்ப்பங்களில் நாம் உறுதியாக நின்று பேரம்பேசி எமது உரிமைகளை முடிந்தளவு பெற்றுக் கொள்ளலாம்.

இரண்டாவது நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமக்கு இருக்கக்கூடிய உரிமைகளை முழுமையாகப் பயன்படுத்தி எமது உரிமைகளைப் பெறுவதற்கான முயற்சிகளை மேற்கொண்டும், தொடர்ச்சியான ஜனநாயகப் போராட்டங்களைத் தலைமையேற்று நடத்தியும், இராஜதந்திர நடவடிக்கைகளை தந்திரோபாய அடிப்படையில் கையாண்டும் ஆட்சியாளர்களுக்கு அழுத்தம் கொடுத்து பேரம் பேசுவதற்கான சக்தியை உருவாக்கலாம்.

இவ்விரண்டு வழிமுறைகளையும் வெற்றிகரமாகக் கையாள்வதாயின், நாம் பலம் பெற்ற சக்தியாக இருக்க வேண்டும். அதாவது தமிழ் மக்கள் ஒரே தலைமையின் கீழ் ஒன்றுதிரண்டு சக்தி மிக்கவர்களாக அரசியல் அரங்கில் முன்னெடுப்புகளை மேற்கொள்ளவேண்டும். பல்வேறு கட்சிகள், பல்வேறு அமைப்புகளைச் சேர்ந்த பிரதிநிதிகளைத் தெரிவு செய்வதன் மூலம் தமிழ் மக்களின் பலத்தைச் சிதைத்து பேரம் பேசும் சக்தியை உருவாக்குவதற்கான வாய்ப்புகளை மழுங்கடித்து விடக்கூடாது.

எனவே தமிழ் மக்கள் நேரடியாக இலங்கையின் ஆட்சியதிகாரத்தில் பங்குபற்றி எமது உரிமைகளை நிலைநாட்ட முடியாதென்பதைப் புரிந்துகொண்டு ஆட்சியதிகாரத்தில் உள்ளவர்களுக்கு அழுத்தங்களைக் கொடுப்பதன் மூலம் எமது உரிமைகளைப் பெறும் வாய்ப்பை உருவாக்குவதற்கு எம்மை நாம் முதலில் பலப்படுத்த வேண்டும். அதற்கு நாம் ஒரே தலைமையின் கீழ் ஒன்றிணைந்து செயற்படுவதைத் தவிர வேறு வழி இல்லையென்பதை எமது மக்கள் தெளிவாகப் புரிந்து கொண்டு, தவறாது அனைவரும் வாக்களிக்க வேண்டும்.



# புத்தளத்தில் வாக்களிப்பு வாக்கு எண்ணல் வவுனியாவில்!

**மன்னார், ஓக. 5**

**மன்னாரிலிருந்து புத்தளத்துக்கு இடம்பெயர்ந்த மக்கள் புத்தளத்தில் வாக்களித்தவுடன் வாக்குப் பெட்டிகள் பலத்த பாதுகாப்புடன் வவுனியாவிலுள்ள வாக்கு எண்ணும் நிலையத்துக்கு எடுத்து வரப்படும் என்று மன்னார் மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலர் சி.ஏ.மோகன்றாஸ் தெரிவித்தார்.**



மன்னாரில் புதிதாக அமைக்கப்பட்ட வாக்கு எண்ணும் நிலையமான மன்னார் புனித சவேரியார் ஆண்கள் தேசியபாடசாலையில் வைத்து நேற்று செவ்வாய்க்கிழமை மதியம் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

மன்னார் மாவட்டத்தில் இம்முறை 88 ஆயிரத்து 842 வாக்காளர்கள் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர். அவர்களில் புத்தளத்துக்கு இடம்பெயர்ந்துள்ள 5 ஆயிரத்து 807 வாக்களர்களுக்கு புத்தளத்தில் வாக்களிக்க ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

புத்தளத்தில் 12 விசேட வாக்களிப்பு நிலையங்களில் இடம்பெயர்ந்த மன்னார் மாவட்ட வாக்காளர்கள் வாக்களிக்க முடியும்.

மன்னார் மாவட்டத்தில் 76 வாக்களிப்பு நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. வாக்கு எண்ணும் நிலையங்கள் 15 அமைக்கப்பட்டுள்ளன.

இன்று காலை 7 மணிக்கு வாக்களிப்பு ஆரம்பமாகும். வாக்களிப்பு மாலை 5 மணிவரை இடம்பெறும். வாக்களிப்புநிறைவடைந்தவுடன் வாக்குப்பெட்டிகள் வாக்கு எண்ணும் நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ள மன்னார் புனித சவேரியார் ஆண்கள் தேசிய பாடசாலைக்கு கொண்டு வரப்படும் - என்றார். (ஓ,5,56)

## வாக்கெண்ணும் நிலையங்கள் 2,773

கொழும்பு,ஓக.5

பொதுத் தேர்தலுக்கான வாக்கு எண்ணும் பணிகள் இரண்டாயிரத்து 773 நிலையங்களில் இடம்பெறும் என்று மேலதிக தேர்தல்கள் ஆணையாளர் ரஸித்த பீரிஸ் தெரிவித்துள்ளார்.

அதிகளவான சாதாரண வாக்கு எண்ணும் நிலையங்கள் கம்பஹா மாவட்டத்தில் அமைக்கப்பட்டுள்ளன. அங்கு 289 நிலையங்கள் ஸ்தாபிக்கப்பட்டுள்ளன. அதேவேளை தபால்மூல வாக்கு எண்ணும் நிலையங்கள் அதிகளவில் குருநாகல் மாவட்டத்தில் அமைக்கப்பட்டுள்ளன. அங்கு 40 நிலையங்கள் ஸ்தாபிக்கப்பட்டுள்ளன என்று மேலதிக தேர்தல்கள் ஆணையாளர் ரஸித்த பீரிஸ் மேலும் தெரிவித்துள்ளார். (க)

## சுகாதார வழிகாட்டலுடன் இறுவட்டு வெளியீடு

கொழும்பு, ஓக.5

மாணவர்களுக்காக தயாரிக்கப்பட்ட சுகாதார வழிகாட்டிகள் அடங்கிய இறுவட்டு பாடசாலைகளுக்கு உத்தியோகபூர்வமாக வழங்கும் நிகழ்வு நேற்று கல்வி அமைச்சில் நடைபெற்றது.

கொவிட் வைரஸ் தொற்று பரவுவதைத் தடுப்பது தொடர்பாக பாடசாலை சமூகத்தினரை தெளிவுபடுத்துவதற்காக கல்வி அமைச்சால் சுகாதார அதிகாரிகளின் ஆலோசனை மற்றும் வழிகாட்டிகளுக்கு அமைவாக சுற்றறிக்கைகள் வெளியிடப்பட்டுள்ளன.

இதேபோன்று வழிகாட்டி ஆலோசனைகளும் பாடசாலைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இதற்கு அமைவாக கொவிட் 19 ஐ தடுப்பது தொடர்பான பாடசாலை வழிகாட்டிகளை உள்ளடக்கிய இறுவட்டுகளும் பாடசாலைகளுக்கு வழங்கப்படவுள்ளன. இதற்கான உத்தியோகபூர்வ நிகழ்வே நேற்று நடைபெற்றது.

இந்த இறுவட்டு பாடசாலைகள் ஆரம்பிப்பதற்கு முன்னர் வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதேவேளை இந்த இறுவட்டின் மூலம் வழங்கப்பட்டுள்ள ஆலோசனைகளை கல்வி அமைச்சின் உத்தியோகபூர்வ இணையத்தளமான www.moe.gov.lk மூலம் பெற்றுக்கொள்ளமுடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## மடுத்திருவிழா நாளை ஆரம்பம்

மன்னார்,ஓக.5

மடுத் திருத்தலத்தின் ஆவணி மாத திருவிழாவுக்கான கொடியேற்றம் நாளை வியாழக்கிழமை மாலை 5.45 மணிக்கு நடைபெறும்.

மடுத் திருத்தலத்தின் பரிபாலகர் அருட்தந்தை எஸ்.ஜே.பெப்பி சோசை அடிகளாரின் தலைமையில் கொடியேற்ற நிகழ்வு இடம் பெறும்.

அதனைத்தொடர்ந்து தினமும் நவநாள் ஆராதனைகள் மற்றும் திருப்பலியும் ஒப்புக்கொடுக்கப்படும்.

எதிர்வரும் 15 ஆம் திகதி சனிக்கிழமை காலை 6.15 மணிக்கு மன்னார் மறை மாவட்ட ஆயர் பேரருட்திரு இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகையின் தலைமையில் திருவிழா நடைபெறும். ஆயர்கள் குருக்கள் இணைந்து திருவிழாத் திருப்பலியை கூட்டுத்திருப்பலியாக ஒப்புக் கொடுக்கவுள்ளனர். (க)

## அகற்றப்பட்டன சோதனை சாவடிகள்!

மன்னார், ஓக. 5

மன்னார் மாவட்டத்தின் பல பகுதிகளிலும் நேற்றுமுன்தினம் வரை காணப்பட்ட பாதுகாப்புத் தரப்பினர்களது சோதனைச் சாவடிகள் அகற்றப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்படுகின்றது.

மன்னார் பெரிய பாலத்தில் அமைக்கப்பட்டிருந்த சோதனைச் சாவடி உட்பட அனைத்து பெரிய மற்றும் சிறிய சோதனைச் சாவடிகள் நேற்றையதினம் அகற்றப்பட்டுள்ளன. இதனால் பொதுமக்கள் சிரமமின்றி பயணங்களை மேற்கொள்வதை அவதானிக்க முடிகின்றது.

**இந்தச் சோதனைச் சாவடிகள் தேர்தலுக்காக மாத்திரம் அகற்றப்படாமல் நிரந்தரமாக அகற்றப்பட்டால் நல்லது என்று மக்கள் தெரிவித்தனர். (ஓ;5)**

# நிறைவேற்று அதிகாரம் கொண்ட 30 பேருக்கு வரியற்ற சம்பளம் வழங்க அரசு தயாராகிறது

## 'எக்கொனோமி நெக்ஸ்ற்' அறிக்கை சுட்டிக்காட்டுகின்றது

கொழும்பு, ஓக. 5

**கொழும்பு துறைமுக நகரத் திட்டத்தில் பணியாற்றும் நிறைவேற்று அதிகாரம் கொண்ட 30 பேருக்கு வரியற்ற சம்பளத்தைக் கொடுக்க இலங்கை அரசு தயாராகி வருவதாக 'எக்கொனோமி நெக்ஸ்ற்' என்ற அறிக்கை உறுதிப்படுத்தியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.**

வெளிநாடுகளிலிருந்து வந்து துறைமுக நகரத் திட்டத்தில் பணியாற்றும் ஊழியர்களுக்கே வரியற்ற சம்பளத்தை வழங்க அரசு தயாராவதாக அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

துறைமுக நகரத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படும் காலத்தில் நிறைவேற்று அதிகாரிகள் 30 பேருக்கு வரியற்ற சம்பளத்தை வழங்க அரசு தயாராவது வர்த்தமானி ஊடாக அறிவிக்கப்பட்ட அபிவிருத்தி திட்ட சட்டங்களுக்கு அமைவாகவே என்றும் அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

அதற்கமைய குறித்த ஊழியர்கள் உழைக்கும் போது அவர்கள் வழங்கும் வரி மற்றும் தனியார் வருமான வரி நீக்கப்படவுள்ளது.

வெளிநாட்டவர்களுக்கு இந்தளவுக்கு வரியற்ற சம்பளத்தை வழங்குவதற்கு அரசு தயாராவது எதனை இலக்கு வைத்து என்பது தெளிவாகவில்லை என்றும் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

கிழக்கு ஆசியாவில் விரைவாக அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளின் அபிவிருத்திச் செயற்றிட்டங்களுக்காக வெளிநாட்டவர்கள் வரும்போது அவர்கள் சகலரும் வரி செலுத்துவதாக கண்காணிப்பாளர்கள் கூறுகின்றனர்.

சிங்கப்பூரில் அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்ட காலத்தில் 2ஆயிரத்து 500 வெளிநாட்டவர்கள் ஊழியர்களாக வருவதற்கு அந்த நாட்டில் இடமளிக்கப்படவில்லை என்பதுடன் எவரேனும் ஒருவர் அதிக சம்பளத்தைப் பெறுவாரானால் அவர் நிரந்தர வதிவிடத்தைப் பெற்றவராக இருக்க வேண்டும் என்றும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (த)





அனலைதீவு நயினாகுளம் ஹரிகரபுத்திர ஐயனார் கோவில் வருடாந்தப் பெருந்திருவிழாவின் தீர்த்தத் திருவிழா நேற்றுமுன்தினம் சிறப்பாக நடைபெற்றது. (த)

# ஷானி அபேசேகரவின் உதவியாளரான உப பொலிஸ் பரிசோதகருக்கும் மறியல்

கொழும்பு, ஓக. 5

பொய் சாட்சியம் வழங்கியமை தொடர்பில் கைதுசெய்யப்பட்ட குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தின் முன்னாள் பணிப்பாளர் ஷானி அபேசேகரவின் உதவியாளராக செயற்பட்ட உப பொலிஸ் பரிசோதகரை எதிர்வரும் 7 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க நீதிமன்று உத்தரவிட்டது.

கம்பஹா நீதிவான் மஞ்சுள கருணாரத்ன முன்னிலையில் சந்தேகநபர் நேற்று முற்படுத்தப்பட்டார். அதன்போதே விளக்கமறியல் உத்தரவு நீடிக்கப்பட்டது.

எம்பிலிப்பிட்டிய பொலிஸ் நிலையத்தில் கடைமையாற்றிய உப பொலிஸ் பரிசோதகர் சுகத் மோஹன மென்டிஸ் கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவினரால் நேற்றுமுன்தினம் கைதுசெய்யப்பட்டிருந்தார்.

2014 ஆம் ஆண்டு முன்னாள் பிரதிப் பொலிஸ்மா அதிபர் வாஸ் குணவர்தனவுக்கு எதிரான வழக்கு விசாரணை தொடர்பில் துப்பாக்கிகளை அடையாளம் காட்டி போலி சாட்சியம் வழங்கியமை தொடர்பாக உப பொலிஸ் பரிசோதகரான சுகத் மோஹன மென்டிஸ் கைது செய்யப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கொழும்பு குற்றத்தடுப்புப் பிரிவில் சரணடைந்த தமது கட்சிக்காரரிடம் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்ட சந்தர்ப்பத்தில் குற்றத்தடுப்பு பிரிவின் உதவி பொலிஸ் அத்தியட்சகர் நெவில் என்ற அதிகாரி அவரை அச்சுறுத்தியதாக சந்தேகநபர் சார்பில் முற்பட்ட சட்டத்தரணி சமிந்த அத்துகோரள மன்றில் நேற்றுத் தெரிவித்தார்.

அதற்கமைய சந்தேகநபர் நீதிவான் முன்னிலையில் இரகசிய வாக்குமூலம் வழங்குவதற்கு அனுமதி வழங்குமாறு சட்டத்தரணி மன்றில் வேண்டுகோள் விடுத்தார். இதனையடுத்து சந்தேகநபர் நீதிவான் முன்னிலையில் இரகசிய வாக்குமூலமளித்தார்.

குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தின் முன்னாள் பணிப்பாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஷானி அபேசேகர, பொலிஸ் இன்ஸ்பெக்டர் நிஷாந்த டி சில்வா, பொலிஸ் சார்ஜனாகக் கடமையாற்றிய சுகத் மோஹன மென்டிஸ் உள்ளிட்ட மேலும் சில அதிகாரிகள் கம்பஹா - கலகெட்டிஹேன பகுதியில் வீடொன்றில் துப்பாக்கிகளை மறைத்துவைத்து பின்னர் அவற்றைக் கைப்பற்றினர் என்றும் குறித்த துப்பாக்கிகள் முன்னாள் பிரதி பொலிஸ் மா அதிபர் வாஸ் குணவர்தனவுக்குச் சொந்தமானவை என்றும் உண்மைக்குப் புறம்பான விதத்தில் அறிக்கை சமர்ப்பித்துள்ளனர் என்று கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவு மன்றில் அறிவித்துள்ளது.

மொஹமட் சியாமின் கொலைக்குப் பயன்படுத்தப்பட்ட துப்பாக்கியும் கைப்பற்றப்பட்ட துப்பாக்கிகளில் அடங்குகின்றதா என்று நீதிவான் இதன்போது கேள்வியெழுப்பினார்.

மொஹமட் சியாமை கொலை செய்வதற்கு பயன்படுத்தப்பட்ட துப்பாக்கி குறித்த துப்பாக்கிகளில் இருக்கவில்லை எனவும் அந்தத் துப்பாக்கி இதுவரை பொலிஸாரால் கைபற்றப்படவில்லை எனவும் குற்றத்தடுப்புப் பிரிவு நீதிமன்றத்தில் தெரிவித்தது.

இந்தச் சம்பவம் தொடர்பில் ஏற்கனவே கைது செய்யப்பட்ட குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தின் முன்னாள் பணிப்பாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஷானி அபேசேகர எதிர்வரும் 7 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (த)

## சிறைச்சாலைக்குள் போதைப் பொருள் கடத்தல் தடுக்க மாற்று வழிகள் பற்றி ஆராய்வு

கொழும்பு, ஓக.5

சிறைச்சாலைக்குள் போதைப் பொருள்களைக் கொண்டுசெல்வதற்காக பயன்படுத்தப்படும் மாற்று வழிகளை தடுப்பது தொடர்பில் சிறைச்சாலைகள் திணைக்களம் அவதானம் செலுத்தியுள்ளது.

பூனையொன்றின் மூலமாக கொழும்பு வெலிக்கடைச் சிறைச்சாலைக்குள் போதைப்பொருள் அனுப்பப்பட்ட சம்பவம் கண்டறியப்பட்டதை அடுத்து, இவ்வாறு அவதானம் செலுத்தப்பட்டுள்ளதுஎன்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிறைச்சாலைக்குள் போதைப் பொருள்களை கொண்டுசெல்வதை தடுப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ள நிலையில், அதனுடன் தொடர்புடையவர்களே இவ்வாறான மாற்று வழிகளைப் பயன்படுத்தி சிறைச்சாலைக்குள் போதைப் பொருள்களைக் கடத்துகின்றனர் என்றும் அவ்வாறான நடவடிக்கையைத் தொடர அனுமதிக்க முடியாது என்றும்

ஆணையாளர் நாயகம் துஷார உப்புல்தெனிய தெரிவித்துள்ளார். (த)

## மாத்தறை மாவட்ட முடிவே முதலில்

கொழும்பு, ஓக. 5

பொதுத் தேர்தலில் வாக்குகள் எண்ணும் பணி ஆரம்பிக்கப்பட்டதும், முதலாவது பெறுபேறாக மாத்தறை மாவட்டத்தின் பெறுபேற்றை வெளியிட முடியும் என்று தாம் எதிர்பார்க்கின்றோம் என்று தேர்தல்கள் ஆணைக்குழுவின் தவிசாளர் மகிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

இலங்கையின் 9 ஆவது நாடாளுமன்றத்துக்கான புதிய உறுப்பினர்களை தெரிவு செய்வதற்கான பொதுத் தேர்தல் வாக்களிப்பு இன்று காலை 7 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.

இந்த முறை பொதுத்தேர்தலில் வாக்களிப்பதற்காக ஒரு கோடியே 62 லட்சத்து 63 ஆயிரத்து 885 வாக்காளர்கள் தகுதி பெற்றுள்ளனர்.

இன்று வாக்களிப்பு நடவடிக்கை நிறைவடைந்த பின்னர் நாளை 6 ஆம் திகதி காலை 8 மணி முதல் அந்தந்த மாவட்டங்களில் வாக்கெண்ணும் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

நாட்டில் கொவிட் 19 தொற்று பரவலுக்கு மத்தியில் விசேட சுகாதார வழிமுறைகளுக்கு அமைய இந்த முறை பொதுத் தேர்தல் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த)

# பொதுத்தேர்தல் பணிகளுக்காக 1,459 அரச பேருந்துகள் சேவையில்

**யாழ்ப்பாணம், ஓக.5**
**பொதுத்தேர்தல் பணிகளுக்காக 1,459 அரச பேருந்துகள் சேவையில் இணைத்துக்கொள்ளப்பட்டுள்ளதாக அரச போக்குவரத்துசபை பிரதிப் பொதுமுகாமையாளர் ஏ. எச். பண்டுக தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவித்ததாவது;
'நாடாளுமன்ற பொதுத் தேர்தல் இன்று நடைபெறவுள்ளது.
நாடு தழுவியுள்ள வாக்களிப்பு மத்திய நிலையங்களில் பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஈடுபடவுள்ள பொலிஸ் மற்றும் சிவில் பாதுகாப்பு தரப்பினர்களது போக்குவரத்து நடவடிக்கைகளுக்கு 192 பேருந்துகள் இணைத்துக்கொள்ளப்பட்டுள்ளன.
பொதுத்தேர்தல் பணிகளுக்கான போக்குவரத்து நடவடிக்கைகள் அனைத்தும் முழுமை பெற்றுள்ளன.
தூர பிரதேசங்களில் உள்ள வாக்களிப்பு மத்திய நிலையங்களுக்கு வாக்காளர்கள் செல்வதற்கு 800 பேருந்துகள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன.
வாக்குப்பதிவு நடைபெற்றதன் பின்னர் வாக்குப் பெட்டிகளை பாதுகாப்பான முறையில் வாக்கு எண்ணும் மத்திய நிலையங்களுக்கு எடுத்து செல்வதற்கும் மேலதிகமாக 61 பேருந்துகள் சேவையில் ஈடுபடுத்தப்படவுள்ளன.
வாக்குச்சாவடிகளுக்கு வாக்காளர்கள் செல்வதற்கு நாடு தழுவிய ரீதியில் உள்ள அனைத்து அரச பேருந்து டிப்போக்களிலுமிருந்து பேருந்துகள் சேவையில் ஈடுபடுத்தப்படவுள்ளன.
எந்நிலையிலும் போக்குவரத்துச் சேவையில் கால தாமதம் இடம்பெறாது என்றார்.
யாழ்ப்பாண மாவட்டத்தில் தேர்தல் பணிக்காக 50 பேருந்துகள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக வடமாகாண பிரதிப் பிராந்திய முகாமையாளர் எஸ். அமீன் தெரிவித்தார். (ஐ-159)

# வாக்களிப்பு நிலையங்களில் போதைப்பொருள் பாவனைக்கு தடை

கொழும்பு, ஓக. 5
வாக்களிப்பு மத்திய நிலையங்களில் இரவு வேளையில் தங்கியிருக்கும் தேர்தல் அதிகாரிகள் புகைத்தல், மதுபானம் பாவித்தல் வேறு எந்தவித போதைப் பொருள்கள் மற்றும் லைற்றர் முதலானவற்றை எடுத்துச்செல்லுதல் முழுமையாகத் தடை செய்யப்பட்டிருப்பதாக தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.
இதேவேளை தேர்தல் மத்திய நிலையங்களில் சுகாதார பாதுகாப்பு உறுதி செய்யப்பட்டிருப்பதால் தேர்தல் கடமைகளை மேற்கொள்ளும் அதிகாரிகள் மற்றும் வாக்காளர்கள் இது தொடர்பில் எந்த வித அச்சமும் கொள்ளத் தேவையில்லை என்றும் தேர்தல் ஆணைக்குழு அறிவித்துள்ளது. (ஐ)

# பிரபல திரைப்பட நடிகரிடம் பண மோசடி

கொழும்பு, ஓக.5
இலங்கையின் பிரபல திரைப்பட நடிகரான டபிள்யூ. ஜயசிறி என்பவருக்கு லொத்தர் சீட்டெடுப்பில் 85,000 அமெரிக்க டொலர்கள் பணப்பரிசு கிடைத்துள்ளது எனத் தெரிவித்து அவரது பணம் கொள்ளையடிக்கப்பட்டுள்ளது.
85,000 அமெரிக்க டொலர்கள் பணப்பரிசு கிடைத்துள்ளதாகக் கூறி அவரது 12 லட்சம் ரூபாக்கும் அதிக பணத்தை மோசடியான முறையில் ஏமாற்றிய இளைஞன் கைதுசெய்யப்பட்டுள்ளார். இந்தச் சம்பவம் தொடர்பில் பாணந்துறை ஹிரண பிரதேசத்தைச் சேர்ந்த நடிகரால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.
இந்த முறைப்பாட்டிற்கமைய விசாரணை மேற்கொண்ட பொலிஸார் சந்தேகநபர் ஒருவரை கைது செய்துள்ளனர்.
ஐ.சி.சி. நிறுவனத்தின் அனுசரணையுடன் ஏற்பாடு செய்யப்பட்ட உலகக் கிண்ண போட்டிக்காக இந்த லொத்தர் சீட்டிழுப்பு மேற்கொள்ளப்பட்டதாகக் கூறி பணம் மோசடி செய்யப்பட்டுள்ளது. இந்த மோசடி தொடர்பில் கைது செய்யப்பட்ட சந்தேகநபர் இதுபோன்ற மோசடிகளில் பல தடவைகள் ஈடுபட்டுள்ளமை தெரியவந்துள்ளது என குற்ற விசாரணைப் பிரிவு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (ரி-3)

# வாழைப்பழத்தின் விலை அதிகரிப்பு


யாழ்ப்பாணம், ஓக.5
யாழ்ப்பாண குடாநாட்டில் வாழைப்பழத்தின் விலை நாளுக்கு நாள் அதிகரித்துச் செல்வதாக நுகர்வோர் தெரிவித்துள்ளனர்.
ஆலயங்களில் திருவிழாக்கள் இடம்பெற்று வருவதுடன், இந்த மாதம் விரதகாலம் என்பதாலும் வாழைப்பழத்தின் பாவனை அதிகரித்துள்ளது.
இதன் காரணமாக வாழைப்பழத்தின் விலை அதிகரித்துள்ளதோடு அவற்றுக்கு பற்றாக்குறையும் ஏற்பட்டுள்ளது.
கதலிவாழைப்பழம் கிலோ 160 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுகிறது.
குறிப்பாக நீர்வேலி வாழைக்குலை விற்பனை சந்தையில் வாழைக்குலை விற்பனை சூடு பிடித்தும் காணப்படுகின்றது.
சந்தைக்கு வாழைக்குலைகள் தினமும் குறைந்தளவே விற்பனைக்கு வந்து சேர்கின்றன என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ-17)

# நாடு முழுவதும் விசேட பாதுகாப்பு

கொழும்பு, ஓக. 5
நாட்டில் விசேட பாதுகாப்புத் திட்டம் நடைமுறையில் இருக்கும் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகருமான ஜாலிய சேனாரத்ன தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
'நாடாளுமன்றத் தேர்தலுக்கான வாக்குப் பெட்டிகளை வாக்களிப்பு நிலையங்களுக்கு நேற்றுக் கொண்டு செல்லும்போது கூடுதல் பாதுகாப்பு வழங்கப்பட்டது. நேற்றிலிருந்து தேர்தல் கடமைகள் முடியும் வரை ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கையிலான சோதனைச் சாவடிகள் நாடு முழுவதும் இயங்கும்.
வாக்குப்பதிவு இன்று காலை 7 மணிக்கு ஆரம்பமாகின்றது. மாலை 5 மணியளவில் வாக்களிப்பு நிலையங்களின் பணிகள் முடிவுக்குக் கொண்டு வரப்படும். அதன்பின்னர் வாக்கெண்ணும் நிலையங்களுக்கு வாக்குப் பெட்டிகள் கொண்டு செல்லப்படும். இதன்போதும் கூடுதல் பாதுகாப்பு வழங்கப்படும்' - என்றார். (ம-22)

## *சர்வதேச ஊடகங்களின்*
# தலைப்புச் செய்திகளில் இடம்பிடித்தது போதைப்பொருளுடன் பிடிக்கப்பட்ட பூனை

கொழும்பு, ஓக.5
வெலிக்கடை சிறையில் போதைப்பொருளுடன் பிடிக்கப்பட்ட பூனை சிறையிலிருந்து தப்பிய சம்பவம் சர்வதேச ஊடகங்களில் தலைப்பு செய்தியாக வெளியிடப்பட்டுள்ளது.



ஒரு கிராம் ஹெரோய்ன், தொலைபேசிக்கான சிம் அட்டைகள் மற்றும் மெமரி காட் என்பவை கட்டப்பட்ட நிலையில் இந்த பூனை கடந்த ஞாயிற்றுக்கிழமை வெலிக்கடை சிறைச்சாலைக்கு வெளியில் இருந்து பிடிக்கப்பட்டது.
பிடிக்கப்பட்ட பூனை சிறைச்சாலையில் அடைத்து வைக்கப்பட்டிருந்தது. எனினும் அது அங்கிருந்து தப்பிச்சென்று விட்டதாக சிறைச்சாலை அதிகாரிகள் தெரிவித்திருந்தனர்.
இது தொடர்பான செய்தி நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை உள்ளூர் ஊடகங்களில் வெளியாகியிருந்த நிலையில், இந்தச் செய்தியானது நேற்று முதல் சர்வதேச ரீதியாக பல பிரபல ஊடகங்களின் தலைப்புச் செய்தியாக வெளியிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ரி-3)

# யாழ். போதனாவில் குருதித் தட்டுப்பாடு



யாழ்ப்பாணம், ஓக.5
யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் உள்ள இரத்த வங்கியில் எல்லா வகை குருதிகளுக்கும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக மருத்துவமனைப் பணிப்பாளர் த. சத்தியமூர்த்தி தெரிவித்தார்.
நாளொன்றுக்கு சராசரியாக குருதி வங்கியில் இருந்து 40 தொடக்கம் 50 பைந்த் குருதி விநியோகிக்கப்படுகிறது.
ஆகவே இதனைக் கருத்திற்கொண்டு ஏற்கனவே குருதிக் கொடை செய்து 4 மாதங்கள் நிறைவடைந்த குருதிக்கொடையாளர்களும், புதிதாக குருதித்தானம் செய்ய விரும்புப் வர்கமும் மருத்துவமனையின் குருதி வங்கிக்கு சமூகமளிக்குமாறு அறிவித்துள்ளார்.
அத்துடன் குருதி முகாம்களை ஏற்பாடு செய்து உயிர்காக்கும் உன்னத பணிக்கு ஒத்துழைப்பு வழங்குமாறும் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.
மேலதிக விவரங்களைப் பெற 0772105375 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பை ஏற்படுத்துமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

பொதுத்தேர்தலை முன்னிட்டு

# நாடளாவிய ரீதியில் 69 ஆயிரம் பேர் பாதுகாப்பு நடவடிக்கைகளில்!

கொழும்பு, ஓக. 5

**நடைபெறவுள்ள பொதுத்தேர்தலின் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கு நாடளாவிய ரீதியில் பொலிஸ் மற்றும் சிவில் பாதுகாப்பு தரப்பினர் உட்பட 69 ஆயிரம் பேர் பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஈடுபடவுள்ளனர் என தேர்தல் நடவடிக்கைகளுக்கு பொறுப்பான பொலிஸ் அதிகாரியான சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் பிரியந்த வீரசூரிய தெரிவித்துள்ளார்.**

அரசாங்க தகவல் திணைக்களத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்;

அமைதியான முறையில் தேர்தலை நடத்துவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. சட்ட ஒழுங்கைப் பாதுகாக்க அதிகாரத்தை முழுமையாகச் செயற்படுத்த ஒருபோதும் பின்வாங்கமாட்டோம். வாக்களிப்பு மத்திய நிலையங்கள், வாக்களிப்பு சூழல் மற்றும் வாக்கு எண்ணும் நடவடிக்கைகள் உட்பட வீதிப்போக்குவரத்து மற்றும் பாதுகாப்பு ஆகியவற்றுக்குப் பொலிஸார் மற்றும் சிவில் பாதுகாப்பு தரப்பினர் சேவையில் ஈடுபடவுள்ளார்கள். மொத்தமாக 69 ஆயிரம் பேர் நாடு முழுவதும் பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுவார்கள்.

தேர்தல் தொடர்பான பாதுகாப்பு மற்றும் சிவில் பாதுகாப்பு நடவடிக்கைகளில் இராணுவத்தினர் இணைத்துக்கொள்ளப்படவில்லை. பொலிஸ் நிலைய மற்றும் வீதி காவலரண் பாதுகாப்புகளுக்கு மாத்திரமே இராணுவத்தினர் இணைத்துக் கொள்ளப்படவுள்ளார்கள்.

தேர்தல் வன்முறை மற்றும் தேர்தல் சட்ட மீறல் உள்ளிட்ட குற்றச்சாட்டு களுக்கு கட்சி பேதமின்றி வேட்பாளர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளார்கள்.

அவர்களுக்கு எதிராக உரிய சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். ஜனநாயக ரீதியில் தேர்தல் இடம்பெறுவதற்கு பொறுப்புடன் செயற்படுவோம். சட்ட ஒழுங்கைப் பாதுகாப்பதற்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தை முழுமையாகச் செயற்படுத்த ஒருபோதும் பின்வாங்கமாட்டோம் - என்றார். (ரி3)



கிளிநொச்சியில்

## ஹெரோய்னுடன் ஒருவர் கைது

கிளிநொச்சி, ஓக.5

கிளிநொச்சி திருவையாறு, சாந்தபுரம் பகுதியில் போதைப்பொருளுடன் சந்தேகநபர் ஒருவர் நேற்று முன்தினம் கைதுசெய்யப்பட்டுள்ளார். கிளிநொச்சி மாவட்ட பொலிஸ் மதுஒழிப்பு பிரிவினருக்கு கிடைக்கப்பெற்ற தகவலுக்கமைய இவர் கைதுசெய்யப்பட்டார். கைது செய்யப்பட்டவர் பருத்தித்துறையைச் சேர்ந்த 31 வயதுடைய நபர் ஆவார். அவரிடமிருந்து 10 -12 கிராம் 100 மில்லிகிராம் ஹெரோய்ன், ஒரு மோட்டார் சைக்கிள் மற்றும் கைத்தொலைபேசி ஒன்றும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது. சந்தேகநபர் கிளிநொச்சி மாவட்ட பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளதுடன், மேலதிக விசாரணைகளை கிளிநொச்சி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர் என மது ஒழிப்புப் பிரிவு பொறுப்பதிகாரி டி.எம் சதுரங்க தெரிவித்தார். (ரி113,6)

## குற்றவியல் விசாரணை திணைக்களத்தின் அதிகாரிகள் கைது

கொழும்பு, ஜூலை 5

கொலைச் சம்பவம் தொடர்பாக மரண தண்டனை விதிக்கப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ள முன்னாள் பிரதிப் பொலிஸ்மா அதிபர் வாஸ் குணவர்தனவின் துப்பாக்கிகள் சம்பந்தமான விசாரணைகளை நடத்திய குற்றவியல் விசாரணை திணைக்களத்தின் அதிகாரிகள் சிலர் கைதுசெய்யப்படவுள்ளனர் என சிங்கள ஊடகமொன்று செய்தி வெளிவிட்டுள்ளது.

வாஸ் குணவர்தனவுக்கு சொந்தமான ரி56 ரக துப்பாக்கி உட்பட துப்பாக்கிகள் கைப்பற்றப்பட்டன என பொய்யான தகவலை நீதிமன்றத்தில் முன்வைத்த குற்றச்சாட்டில் அண்மையில் கைதுசெய்யப்பட்ட குற்றவியல் விசாரணை திணைக்களத்தின் முன்னாள் பணிப்பாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஷானி அபேசேகர தற்போது விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

இந்தத் துப்பாக்கிகள் கைப்பற்றிய சம்பவம் தொடர்பாக ஷானி அபேசேகரவுடன் விசாரணைகளை நடத்திய உதவி பொலிஸ் அத்தியட்சகர் உட்பட சிலர், நீதிமன்றத்திற்கு பொய்யான தகவலை வழங்கி, பொய்ச் சாட்சியத்தை உருவாக்கிய குற்றச்சாட்டில் கைதுசெய்யப்படவுள்ளனர் என அந்தச் செய்தியில் மேலும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ரி3)

## உலகில் மிகச் சிறந்த ஆணைக்குழு மனித உரிமை ஆணைக்குழுவே

தீபிகா உடுகம சுட்டிக்காட்டு

கொழும்பு, ஓக.5



மனித உரிமை ஆணைக்குழு உலகில் மிகவும் சிறந்த ஆணைக்குழுக்களில் ஒன்றாக தரப்படுத்தப்பட்டிருக்கிறது எனவும், இது தொடர்பில் மனித உரிமை ஆணைக்குழுவுக்குப் பாராட்டுக்களைத் தெரிவிக்கின்றேன் எனவும் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைவர் தீபிகா உடுகம, அரசமைப்புப் பேரவைக்கு சுட்டிக்காட்டியிருந்தார்.

அரசமைப்பு பேரவையின் 82 ஆவது கூட்டத் தொடரானது அதன் தலைவர் கரு ஜயசூரிய தலைமையில் கூடந்த ஞாயிற்றுக்கிழமை சபாநாயகரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் இடம்பெற்றது.

இதன்போதே அவர் இதனைச் சுட்டிக் காட்டியுள்ளார். இதன்போது, பொதுச்சேவைகள் ஆணைக்குழு, மனித உரிமை ஆணைக்குழு மற்றும் இழப்பீடு தொடர்பான அலு வலகம் ஆகியவற்றில் காணப்படும் வெற்றிடங்களை நிரப்புவது குறித்து அரசமைப்பு பேரவை கவனம் செலுத்தியதுடன், இவற்றை நிரப்புவது குறித்த இறுதித்தீர்மானத்தை அடுத்த கூட்டத்தில் எடுப்பதற்கும் முடிவு செய்யப்பட்டது.

அத்துடன், நிதி ஆணைக்குழு, எல்லை நிர்ணய ஆணைக்குழு, கணக்காய்வு சேவை ஆணைக்குழு மற்றும் தேசிய கொள்வனவு ஆணைக்குழு ஆகியவற்றிடமிருந்து கிடைக்கப்பெற்ற காலாண்டு அறிக்கைகள் பற்றியும் அரசமைப்பு பேரவை கவனம் செலுத்தியது.

மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைவர் பதவியிலிருந்து விலகுவதாக தீபிகா உடுகம வழங்கியுள்ள இராஜினாமா கடிதம் குறித்து அவதானம் செலுத்தியிருந்த அரசமைப்பு பேரவை, மனித உரிமைகள் ஆணைக்குழுவை உயர்ந்த இடத்துக்கு கொண்டுசெல்ல அவர் வழங்கிய தலைமைத்துவத்தையும் பாராட்டியிருந்தது. (ரி2)

## தப்பிச் சென்றதாக கூறப்பட்ட பூனை தொடர்ந்தும் சிறை வளாகத்துக்குள்

கொழும்பு, ஓக. 5

வெலிக்கடை சிறைச்சாலையில் இருந்து தப்பிச்சென்றதாகக் கூறப்பட்ட பூனை தொடர்ந்தும் சிறைச்சாலை வளாகத்துக்குள் இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒரு கிராம் ஹெரோய்ன், தொலைபேசிக்கான சிம் அட்டைகள் மற்றும் மெமரி காட் என்பன கட்டப்பட்ட நிலையில் இந்த பூனை கடந்த ஞாயிற்றுக்கிழமை வெலிக்கடை சிறைச்சாலைக்கு வெளியில் இருந்து பிடிக்கப்பட்டது.

பிடிக்கப்பட்ட பூனை சிறைச்சாலை யில் அடைத்து வைக்கப்பட்டிருந்தது. எனினும் அது அங்கிருந்து தப்பிச்சென்று விட்டதாக நேற்று செய்திகள் வெளியாகி இருந்தன. இந்நிலையிலேயே இந்தப் பூனை தொடர்ந்தும் சிறைச்சாலை வளாகத்துக்குள் சுதந்திரமாகத் சுற்றித் திரிகின்றது என சிறைச்சாலையின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார். (ரி3)

## பார்வைக் குறைபாடுடையோர் வாக்களிக்க விசேட முறைமை

கொழும்பு, ஓக.5

பார்வைக் குறைபாடுடைய வாக்காளர்கள் வாக்களிப்பதற்காக, விசேட முறைமையொன்றை அறிமுகப்படுத்துமாறு கோரியுள்ள இலங்கை பார்வைக் குறைபாடானவர்களின் சங்கம், அவர்களின் இரகசியத்தைப் பாதுகாப்பதற்கு நடவடிக்கைகளை எடுக்குமாறும் கோரியுள்ளது.


பார்வைக் குறைபாடுடைய வாக்காளர்கள் வாக்குகளை அளிப்பதற்காக, உதவியாளர் ஒருவர் நியமிக்கப்படுவார்.

எனினும், இங்கு இரகசியத் தன்மை குறித்தும், வாக்காளரால் குறிப்பிடப்படும் சின்னத்துக்கும், விருப்பிலக்கங்க ளுக்கும் மிகச் சரியாக வாக்களிக்கப்படுகிறதா என்பது தொடர்பில், உறுதிப்படுத்த முடியாதுள்ளது என அச்சம் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ரி2)

# பெய்ரூட் நகரில் பெரும் வெடிப்பு

பெய்ரூட், ஓக.5

லெபனான் தலைநகர் பெய்ரூட்டில் பட்டாசுத் தொழிற்சாலையில் பெரும் வெடிப்பு சம்பவம் ஒன்று நேற்று நடந்துள்ளது.



இரண்டு தடவை இடம்பெற்ற வெடிப்புச் சம்பவத்தில் பலத்த சேதம் ஏற்பட்டிருக்கலாம் என்று அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

சம்பவ இடத்துக்கு மீட்புப் படையினர் விரைந்துள்ளனர் என்றும், அங்கு மீட்புப் பணிகள் துரித கதியில் நடைபெறுகின்றன என்றும் அந்த நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

அந்தப் பகுதியில் பெரும் புகைமண்டலம் சூழ்ந்துள்ள நிலையில், உயிரிழப்புக்கள் மற்றும் பாதிப்புக்கள் தொடர்பான தகவல்கள் எவையும் வெளியாகவில்லை.

பிற்பகலில் நடந்த குண்டுவெடிப்பு தலைநகரின் பல பகுதிகளில் எதிரொலித்தது. அத்துடன் நகர மையப் பகுதியில் கரும்புகை சூழ்ந்திருந்தது. சில உள்ளூர் தொலைக்காட்சி நிலையங்கள் பெய்ரூட்டின் துறைமுகத்தில் குண்டுவெடிப்பு நடந்தது என்று செய்தி வெளியிட்டுள்ளன.

துறைமுகத்தில் இருந்து நூறு அடி தூரத்தில் உள்ள கட்டடங்கள் சேதம் அடைந்துள்ளன என்றும், குண்டு வெடிப்பை அடுத்து நகரத்தில் ஒரு கரும் புகை கிளம்பியது என்றும் அங்குள்ள குடியிருப்பு வாசிகள் தெரிவித்தனர். இந்த சம்பவத்தில் பலர் காயமடைந்திருக்கலாம் என்று அஞ்சப்படுகின்றது. (எ)

## பிலிப்பைன்ஸை மீளவும் முடக்கியது கொரோனா

மணிலா, ஓக.5

கொரோனா வைரஸ் (கொவிட்19) தொற்று அதிகரித்து வருவதால், சுகாதார அமைப்புகள் தடுமாற்றத்தை எதிர்கொள்ள நேரிடும் என்று மருத்துவர்கள் எச்சரித்ததை அடுத்து, பிலிப்பைன்ஸில் பல்லாயிரக்கணக்கான மக்கள் மீண்டும் முடக்கநிலையின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளனர்.

வைரஸ் பரவுவதைக் கட்டுப்படுத்தும் முயற்சியில் முடக்கநிலை கட்டுப்பாடுகளை கடுமையாக்குமாறு 80 மருத்துவ சங்கங்கள், ஜனாதிபதி ரோட்ரிகோ டூர்ட்டேவிடம் அறிக்கையொன்றை சமர்பித்திருந்ததை அடுத்து இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன் பொதுப் போக்குவரத்து இடைநிறுத்தப்பட்டுள்ளது என்றும் உள்நாட்டு விமான சேவைகள் நிறுத்தப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டது. அதே நேரத்தில் உணவகங்கள், உணவுப் பொதிகளை விநியோகிப்பதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளன. மணிலாவிலும், லுசோன் தீவில் சுற்றியுள்ள நான்கு மாகாணங்களிலும் இரண்டு வாரங்களாக மக்கள் வீட்டிலேயே இருக்க அறிவுறுத்தும் விதி தற்போது நடைமுறையில் உள்ளது. எனினும், ஜூன் மாதத்தில் முடக்கநிலை சற்று எளிதாக்கப்பட்டது. ஆனால் தற்போது வைரஸ் தொற்று ஐந்து மடங்கு உயர்வடைந்துள்ளது.

அதைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர மருத்துவர்கள் போராடி வருகின்றனர். அங்கு கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை ஒரு இலட்சத்தைக் கடந்துள்ளது. (எ)

## புதையலுக்காக 5 மாதச் சிசுவை பலி கொடுக்க முயன்ற கொடூரம்

சென்னை, ஓக.5

புதையல் எடுப்பதற்காக நள்ளிரவு 5 மாதக் குழந்தை ஒன்றை நரபலி கொடுக்க முயன்ற கொடூரச் சம்பவம் தமிழகத்தின், நெல்லை மாவட்டத்தில் நடந்துள்ளது என்று இந்திய நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

அந்த மாவட்டத்தில் வசிக்கும் 70 வயதுடைய பார்வதி என்பவர் மாந்திரீகம் போன்றவற்றில் நம்பிக்கை உடையவர். அவரது மகனுக்குத் திருமணமாகி 3 குழந்தைகள் உள்ளன. மூன்றாவது குழந்தைக்கு இப்போது 5 மாதங்கள் வயதாகின்றது.

பார்வதி சாமியார் ஒருவரின் ஆலோசனையின்படி வீட்டில் பூசைகள் செய்வது வழமை. அந்த வீட்டில் புதையல் உள்ளது என்று கூறியுள்ள அந்தச் சாமியார், தனக்கு 2 இலட்சம் ரூபா (இந்திய நாணய மதிப்பு) தந்தால் புதையலை எடுத்துத் தருவதாகக் கூறியுள்ளார்.

பார்வதி அதை நம்பி அந்தச் சாமியாருக்குப் பணம் கொடுத்துள்ளார். அதையடுத்து பார்வதியின் வீட்டில் சிறப்புப் பூசை ஒன்றை அந்தச் சாமியார் ஏற்பாடு செய்துள்ளார். அந்தப் பூசையில் பலி கொடுப்பதற்குக் கறுப்புப் பூனை ஒன்றையும் கொண்டு வந்துள்ளார்.

அந்தப் பூனை இறுதி நேரத்தில் தப்பியோடியுள்ளது. எங்கு தேடியும் அந்தப் பூனை கிடைக்காததால் 5 மாதக் குழந்தையைப் பலி கொடுக்கலாம் என்று அந்தச் சாமியார் தெரிவித்துள்ளாராம். அதற்குப் பார்வதி, குழந்தையும் தந்தையும் சம்மதிக்க குழந்தையின் தாயுக்கு மயக்க மருந்து கொடுத்து விட்டு, குழந்தையைப் பலிகொடுக்கத் திட்டமிட்டுள்ளனர்.

அதைக் கண்டு உசாரான குழந்தையின் தாய், குழந்தையைக் தூக்கிக் கொண்டு வீதிக்கு ஓடி வந்து குக்குரலிட்டுள்ளார். அதைக் கேட்டு ஒன்று கூடிய அயலவர்கள் விடயத்தை அறிந்து பொலிஸாருக்கு தெரிவித்துள்ளனர். சம்பவ இடத்துக்கு வந்த பொலிஸார் பார்வதியையும், மகனையும், சாமியாரையும் கைது செய்தனர் என்று அந்த நாட்டு ஊடகங்களில் செய்தி வெளியாகியுள்ளது. (எ)

## திடீர் இறப்பு விசாரணை அதிகாரிகளுக்கு 'ரை'

கொடிகாமம், ஓக. 5

திடீர் இறப்பு விசாரணை அதிகாரிகள் சங்கத்தின் தீர்மானத்துக்கு அமைய இலங்கையிலுள்ள திடீர் இறப்பு விசாரணை அதிகாரிகளுக்கு கழுத்துப்பட்டி வழங்கப்பட்டு வருகிறது வடக்கு மாகாணத்தில் உள்ள திடீர் இறப்பு விசாரணை அதிகாரிகள் இறப்பு விசாரணை அதிகாரிகள் சங்கத்தின் செயலாளர் தொடர்புகொண்டு 750 ரூபா பணம் செலுத்தி கழுத்துப்பட்டியை (ரை) பெற்றுக் கொள்ள முடியும் என்று தெரிவிக்கப்படுகின்றது. (த-159)

## தத்தளிக்கிறது தென்கொரியா

சியோல், ஓக.5

தென் கொரியாவில் தொடர்ச்சியாக 42 நாள்களாகப் பெய்துவரும் கன மழையால் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கில் சிக்கி 14 பேர் உயிரிழந்துள்ளனர். 13 பேர் காணாமல் போயுள்ளனர் என்று அந்த நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

ஏழு ஆண்டுகளின் பின்னர் அங்கு கடும் மழை பெய்து வருகின்றது. தலைநகர் சியோல் மற்றும் அதை அண்டிய மாகாணங்களில் பெய்யும் கடும் மழையால் பல பகுதிகளில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டுள்ளது.

இந்த வெள்ளப் பெருக்கால் ஆயிரம் பேர் வரையில் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்கள் வீடுகளில் இருந்து இடம்பெயர்ந்துள்ளனர். அவர்கள் தற்காலிக இடங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர் என்று அந்த நாட்டு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

வெள்ளப் பெருக்கால் 5 ஆயிரம் ஏக்கருக்கும் அதிகமான விவசாய நிலங்கள் அழிவடைந்துள்ளன. வீதிகள், நெடுஞ்சாலைகள், வர்த்தக நிலையங்கள் சேதமடைந்துள்ளன என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (எ)



# வாக்களிக்கத் தவறுவது மடைமைத் தனம்!

## பொது அமைப்புகளின் ஒன்றியம் சுட்டிக்காட்டு

**வவுனியா,ஓக.5**

**வாக்களிப்பது அனைவரினதும் கடமை. வாக்களிக்காதிருப்பது மடைமை என்று தெரிவித்துள்ள வவுனியா மாவட்ட பொது அமைப்புகளின் ஒன்றியம், அனைவருமே சென்று வாக்களியுங்கள் என்று கோரியுள்ளது.**
**இது பற்றி ஒன்றியம் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:**

ஆள்பவனைத் தீர்மானிக்க வேண்டியது ஆளப்படுபவனே. அவ்வாறு தீர்மானிப்பதற்கு உள்ள ஒரே ஒரு வாய்ப்பு தேர்தலே. இந்தத் தேர்தலில் உங்களிடம் உள்ள ஜனநாயகஆயுதம் வாக்கே. அந்த ஆயுதத்தைப் பயன்படுத்தி உங்களை ஆளப்போகின்றவர்களை நீங்கள் தெரிவு செய்வதற்காக வாக்களிக்கும் நிலையத்துக்குச் செல்லாவிட்டால் அதன் கருத்து உங்களைஆளப்போகின்றவர்களை நீங்கள் அல்லாது வேறு ஒருவர் தீர்மானிப்பதற்கு அனுமதிக்கப்போகின்றீர்கள் என்பதாகும். அதாவது உங்கள் உரிமையை நீங்களே மறுக்கின்றீர்கள் என்பதேயாகும். ஆகவே வாக்களிப்பு நிலையத்துக்குக்கட்டாயம்சென்று வாக்களியுங்கள். என்றுள்ளது. (த-110)

## 5,309 வாக்குப்பெட்டிகள் வாக்களிப்பு நிலையங்களுக்கு


கொழும்பு,ஓக.5
நாடு முழுவதிலும் உள்ள 44 பொலிஸ் பிரிவுகளில் அமைக்கப்பட்டுள்ள பொதுத் தேர்தல் வாக்களிப்பு மத்திய நிலையங்களுக்கான வாக்குப்பெட்டிகள் பாதுகாப்பாக எடுத்துச் செல்லப்பட்டுள்ளன என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளரும், சிரேஷ்ட பொலிஸ் அத்தியகட்சகருமான ஜாலிய சேனாரத்ன தெரிவித்தார்.
பொலிஸ் தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற செய்தியாளர்களுடனான சந்திப்பில்



அவர் இதனைத் தெரிவித்தார்.
5 ஆயிரத்து 309 வாக்குப்பெட்டிகள் பாதுகாப்பான முறையில் வாக்களிப்புநிலையங்களுக்கு அனுப்பப்பட்டுள்ளன.
இதற்கு மேலதிகமாக நேற்றுக் காலை முதல் பொலிஸ் பாதுகாப்பு நடமாடும் சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்தார். (க)

## கிரனைட்டுகள் மீட்பு

கிளிநொச்சி, ஓக. 5
கிளிநொச்சி மருதநகர் வாய்க்கால்கரைப் பகுதியின் அருகாமையில் காணப்பட்ட, 40 மில்லி மீற்றர் கிரனைட் லோஞ்சருக்குப் பயன்படுத்தப்படும் கிரனைட்டுகள் மீட்கப்ப ட்டுள்ளன.
இதனை அடுத்து சம்பவ இடத்துக்குச் சென்ற கிளிநொச்சி பொலிஸார் வெடிபொருளை அடையாளப்படுத்தியுள்ளனர். அதனை மீட்டு செயலிழப்பு செய்வதற்காக கிளிநொச்சி நீதிவான் மன்றில் அனுமதி பெறப்பட உள்ளதுடன் மேலதிக விசாரணைகளையும் கிளிநொச்சி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஓ.5,6)



# கொரோனாப் பெருந்தொற்றை கட்டுப்படுத்தியதாக கருதலாம்

## தொற்றுநோய் தடுப்புப் பிரிவு அறிவிப்பு

கொழும்பு, ஓக.5
நாட்டில் கொரோனாப் பெருந்தொற்று கட்டுப்படுத்தப்பட்டுள்ளது என்று கருதலாம் என்று தெரிவித்துள்ளார் தொற்றுநோய் தடுப்புப் பிரிவின் மருத்துவர் சுதத் சமரவீர.
இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:
தற்போது நிலவும் புதிய தொழிநுட்பத் திறமைய கொரோனாத் தொற்றைப் பரிசோதிப்பதற்கு புதிய உபகரணம் ஒன்று வழங்கப்பட வேண்டும் என சுகாதார நிபுணர்கள் குழு தெரிவித்துள்ளது. இவ்வாறான உபகரணங்கள் வழங்கப்பட்டால் குறைந்தளவான காலப்பகுதியில் பரிசோதனைகளை நிறைவு செய்ய முடியும். இதேவேளை



கொரோனா வைரஸ் காரணமாக நாடு திரும்ப முடியாமல் இருக்கும் வெளிநாட்டில் உள்ள இலங்கையர்களை அழைத்து வரும் நடவடிக்கை கைவிடப்படவில்லை என ஜனாதிபதியின் மேலதிக செயலாளர் தெரிவித்துள்ளார். ஒட்டுமொத்தமாகப் பார்க்கையில் கொரோனா வைரஸ் நாட்டுக்குள் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது என்று கொள்ளலாம் - என்றார். (ம)

## தேர்தல் விதிமீறல்களை முறையிட இலக்கங்கள்

கொழும்பு, ஓக. 5
தேர்தல் சட்டங்களை மீறும் சம்பவங்கள் தொடர்பில் முறைப்பாடுகளை முன்வைப்பதற்கு மாகாண மட்டத்தில் தொலைபேசி இலக்கங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.
பொதுத் தேர்தலைநியாயமானதாகவும் சுதந்திரமானதாகவும் நடத்துவதை நோக்காகக் கொண்டு தொலைபேசி இலக்கங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது என்று தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. (ம)

## ஹெரோய்ன் மீட்பு

சாவகச்சேரி, ஓக. 5
மட்டுவில் பகுதியில் ரோந்து சென்ற பொலிஸாரைக் கண்டு ஓட முயன்ற இருவரைப் பிடித்து சோதனையிடும்போது அவர்களிடம் ஹெரோய்ன் பொதிகள் இருந்ததாக பொலிஸார் தெரிவித்தனர். அவர்களிடமிருந்து 175 மில்லி கிராம் ஹெரோய்ன் பொதிகள் மீட்கப்பட்டுள்ளன.
இருவரையும் கைதுசெய்து நேற்றுமுன்தினம் சாவகச்சேரி நீதிவான் முன்னிலையில் முற்படுத்தியபோது இருவரையும் எதிர்வரும் 14 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (ஓ.5,9)

## சம்பாயோவுக்கு மீண்டும் மறியல்

கொழும்பு,ஓக.5
சிறைக்கைதிகளுக்கு விசேட வசதிகளை வழங்கிய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட நீர்கொழும்பு முன்னாள் சிறைச்சாலை அதிகாரி அநுருத்த சம்பாயோ மற்றும் மூவரையும் எதிர்வரும் 18 ஆம் திகதிவரை மீண்டும் விளக்கமறியல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.
பிடியாணை பிறப்பிக்கப்பட்ட நிலையில், குருணாகலில்வைத்து அநுருத்தசம்பாயோ பொலிஸாரால் கைது செய்யப்பட்ட பின்னர், குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தினரிடம் ஒப்படைக்கப்பட்டார்.
அதனைத் தொடர்ந்து, நேற்றுமுன்தினம் நீர்கொழும்பு பதில் நீதவான் முன்னிலையில் முன்னிலைப்படுத்தப்பட்டார். நேற்று வரை விளக்கமறியல் வைக்கப்பட்டார்.
நேற்று மீண்டும் நீதிமன்றில் முற்படுத்தப்பட்ட போது, விளக்கமறியல் உத்தரவு பிறப்பிக்கப்ட்டுள்ளது. (க)

## மதுபோதையில் சாரத்தியம் 5 பேருக்கு தண்டம்

சாவகச்சேரி, ஓக. 5
மதுபோதையில் வாகனம் செலுத்திய ஐந்து பேருக்கு சாவகச்சேரி நீதிமன்றில் நேற்று தலா 25 ஆயிரம் ரூபா வீதம் தண்டம் விதிக்கப்பட்டது.
சாவகச்சேரி பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு நேற்று தனித்தனியாக விசாரணைக்கு எடுக்கப்பட்டன.
சாரதிகள் குற்றத்தை ஒப்புக்கொண்டதையடுத்து தலா 25 ஆயிரம் ரூபா வீதம் தண்டம் விதிக்கப்பட்டது. (ஓ.5,9)





இமையாணன் ஸ்ரீ முருகன் ஆலய வருடாந்த பெருந்திரு விழாவின் தேர்த்திருவிழா நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை சிறப்பாக நடைபெற்றது. (ஐ-108)

## சிறுவர் நாடக விழாவுக்கு விண்ணப்பம் கோரல்

காரைநகர், ஒக. 5

கலாசார அலுவல்கள் திணைக்களம், இலங்கை கலைக்கழகம் மற்றும் அரச சிறுவர் நாடக ஆலோசனைக்குழு ஆகியன ஒன்றிணைந்து நடத்தும் அரச சிறுவர் நாடக விழாவுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இதில் பாடசாலைகள், கலைமன்றங்கள், ஆர்வமுடைய கலைஞர்கள் பங்குபற்ற முடியும். பங்குபற்ற விரும்புவர்கள் காரைநகர் பிரதேச கலாசாரப் பிரிவில் விண்ணப்பப் படிவம் மற்றும் சுற்றறிக்கை என்பனவற்றை பெற்று எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 9 ஆம் திகதிக்கு முன்னர் தங்களின் விண்ணப்பப் படிவம் மற்றும் மூன்று நாடகப் பிரதிகளையும் கலாசாரப் பிரிவில் சமர்ப்பிக்குமாறு பிரதேச செயலர் அறிவித்துள்ளார். (ஐ)

★ ★ ★ ★

காரைநகர், ஒக. 5

கலாசார அலுவல்கள் திணைக்களம், இலங்கை கலைக்கழகம் மற்றும் அரச சிறுவர் நாடக ஆலோசனைக்குழு ஆகியன ஒன்றிணைந்து நடத்தும் அரச சிறுவர் நாடக விழாவுக்கான விண்ணப்பங்கள் கரவெட்டி பிரதேச செயலகத்தால் கோரப்பட்டுள்ளன.

பிரதேச செயலக கலாசாரப் பிரிவில் விண்ணப்பப் படிவம் மற்றும் சுற்றறிக்கை என்பனவற்றைப் பெற்று எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 7 ஆம் திகதிக்கு முன்னர் ஆக்கங்களை சமர்ப்பிக்குமாறு பிரதேச செயலர் ஈ.தயாரூபன் அறிவித்துள்ளார். (ஐ)

## நல்லூர் ஆலய சூழலில் தொற்று நீக்கும் செயற்பாடு

யாழ்ப்பாணம், ஒக.5

நல்லூர் ஆலய சுற்றாடல் பகுதியில் தொடர்ந்தும் தொற்று நீக்கி மருந்து விசிறும் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

கொரோனா தொற்றுக் காரணமாக ஆலய சுற்று வீதியை சுற்றி இந்த தொற்று நீக்கி மருந்து சுகாதாரப் பிரிவினரால் விசிறப்பட்டு வருகின்றது.

சுகாதாரப் பரிசோதகர்கள், சுகாதாரத் தொண்டர்கள் ஆகியோர் இணைந்து ஆலய சுற்று வீதியில் சுகாதார நடைமுறைகளைக் கண்காணித்து வருகின்றனர். (ஐ-17)





கொழும்புத்துறை மேற்கு விநாயகர் ஆலய வருடாந்தப் பெருந்திருவிழாவின் தேர்த்திருவிழா கடந்த ஞாயிற்றுக்கிழமை சிறப்பாக நடைபெற்றது. (ஐ- 17)



நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தின் 11 ஆம் நாள் திருவிழா நேற்று மாலை இடம்பெற்றது. முருகன் வீதியுலா வருவதைப் படத்தில் காணலாம்.




### நல்லாட்சி புரிகின்ற நல்லூரான்

ஆறுமுகங் கொண்டு நம்மை ஆள்பவன்
ஆறுபடை வீடு தனில் உறைபவன்
வேல்கொண்டு வினையாவும் தீர்ப்பவன்
மயில் ஏறி எமையாவும் காப்பவன்
ஓம் என்னும் பிரணவத்தில் ஒலிப்பவன்
ஓங்காரமாய் பிரம்மனையே எதிர்த்தவன்
நல்லை எனும் நகரிலே உதித்தவன்
நல்லாட்சிதனை புரியவே வந்தவன்

*லிங்கேஸ்வரன் ஜனார்த்தனன்*
*மறவன்புலோ மத்தி*

### கொரோனாவின் கொடிய நிலை

கொரோனாவின் கொடிய நிலை
கொழுந்துவிட்டு எரியாமல்
பார்போற்றும் பரவசத்தை(ப்)
பக்தர் தமக் கீந்திடையா

கந்தாவுன் காலடியில்
காலாதி காலமெல்லாம்
நொந்து நொடியாகாமல்
நோன்பு கொன வைத்திடையா

*கலாபூஷணம்*
*கூத்தாடி வி.சி.குஞ்சிதபாதம்*

### நல்லூரானை வணங்குவோம்

கைதொழுது போற்று நல்லைப் பதிவாழும்
வேலவனை நினைந்துருகி வணங்குவமே

திருமிகு நற்பதி எங்கள் நல்லை மண்ணை
உருக்கு மொழி தமிழால் பாடுவமே

நிரை நின்று தொழுகின்ற இடைவெளியும்
நீ கூறும் உபதேசம் எனக் கொள்வமே

வகையறியா மொழிகின்ற உன் அருளை
நகை முகத்தால் துதித்து நாம் வணங்குவமே

சித்தமிசை நித்தமெமை வழி நடத்தும்
ஏற்றபதி நல்லையம் பதி என்போமே

*தேஜஸ்வராலயா சுபாஷினி*

### முருகா உன் திருநாமங்கள்

முருகா உன் திருநாமங்கள்– எம்
நாவினில் இசைத்திடவே
நெஞ்சமெல்லாம் இனிக்குதையா!
மால் மருகா நின்னை நினைக்கையிலே
சித்தமெல்லாம் குளிருதையா!
கார்த்திகை மைந்தா நினை கண்ணாரக்
காண்கையிலே கவலைகள் எல்லாம்
கரைந்தோடுதையா!

*அரியாலையூர்*
*மிஷாந்தி செல்வராஜா*

## கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனையின்


# ஒட்சிசன் கருவிகளுக்குள் மண் இட்ட விஷமிகள்

**கிளிநொச்சி, ஓக. 5**

**கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனையில் உள்ள ஒட்சிசன் உற்பத்திக் கருவிகளுக்குள் மணல் இடப்பட்டுள்ள சம்பவம் தொடர்பில் கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.**

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:
கடந்த வாரம் மருத்துவமனையில் பிராணவாயு உற்பத்தி மையத்திலுள்ள அதீத விலைமதிப்புள்ள கருவிகளின் உள்ளே சிலரால் மணல் வீசப்பட்டு அந்த மையம் செயலிழக்கச் செய்யப்பட்டுள்ளது. வடக்கில் இரண்டே இரண்டு மருத்துவமனைகளிலேயே இவ்வாறான உற்பத்தி மையம் காணப்படுகிறது
அத்துடன் 2011ஆம் ஆண்டிலிருந்து செயற்பட்டு வரும் இந்த மையத்திலிருந்தே மாவட்டத்தில் உள்ள அனைத்து மருத்துவமனைகளுக்கும் ஒட்சிசன் வாயு பெற்றுக் கொள்ளப்படுகிறது. இந்த நிலையில் குறித்த ஒட்சிசன் வாயு உற்பத்தி கருவிகளுக்குள் மணல் இடப்பட்டு அவை செயலிழக்கச் செய்யப்பட்டுள்ளமை பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது. இது தொடர்பில் மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. (ம-214.6)

## இலங்கை வங்கியின் 81 ஆவது ஆண்டு விழா





யாழ்ப்பாணம், ஓக. 5
இலங்கை வங்கியின் 81 ஆவது ஆண்டு நிகழ்வு இலங்கை வங்கி யாழ்ப்பாணம் அதிமேற்தரக் கிளையின் ஏற்பாட்டில் அதன் பிரதான முகாமையாளர் கு.சிவஞானசுந்தரம் தலைமையில் நேற்று நடைபெற்றது.
இந்த நிகழ்வில் வடபிராந்திய செயற்பாட்டு முகாமையாளர் சி.ஆனந்தராஜா, ஓய்வுபெற்ற வங்கியாளர் சங்கத் தலைவர் இ.பிறேமராஜன் மற்றும் வாடிக்கையாளர்கள் கலந்துகொண்டனர்.
இலங்கை வங்கியில் 18+ (+)கணக்கைப் பேணிய மூன்று வாடிக்கையாளர்கள் திருமண நாளன்று வழங்கப்படும் தங்க நாணயப் பரிசினை இதன்போது பெற்றுக்கொண்டனர் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## நோயுற்ற மீனவருக்கு உதவிய கடற்படையினர்

கொழும்பு,ஓக.5
நடுக்கடலில் மாரடைப்பால் அவதிப்பட்ட மீனவர், இலங்கைக் கடற்படையினரின் விரைவான செயற்பாட்டால் காப்பாற்றப்பட்டார்.
காலி மீன்வளத் துறைமுகத்தில் இருந்து புறப்பட்ட 'யசிரு புத்தா' என்ற பல நாள் மீன்பிடிக்கப்பலில் மீனவர் ஒருவர் மாரடைப்பால் அவதிப்பட்டார்.
இதனையடுத்து கடற்படைத் தலைமையகத்தில் உள்ள கடல்சார் மீட்பு ஒருங்கிணைப்பு மையத்துக்கு மீன்பிடி மற்றும் நீர்வளத் திணைக்களத்தால் தகவல் வழங்கப்பட்டது.
உடனடியாக இலங்கைக் கடற்படையின் தெற்குக் கடற்படை கட்டளைக்குச் சொந்தமான துரித தாக்குதல் படகு மீனவரை கரைக்குக் கொண்டு வர அனுப்பப்பட்டது.
காலியில் இருந்து சுமார் 50 மைல் (92 கி.மீ) தொலைவில் தென் கிழக்குக் கடல் பகுதியில் கண்டுபிடிக்கப்பட்ட கப்பலில் அவதிப்பட்ட மீனவர் மீட்கப்பட்டார்.
நோயாளியை மீட்ட கடற்படையின் மருத்துவ குழுவினர் முதலுதவிகளை அளித்து, கடற்படை படகின் மூலம் காலி துறைமுகத்துக்குக் கொண்டு வந்தனர்.
மீனவர் மேலதிக சிகிச்சைக்காக உடனடியாக கராப்பிட்டிய போதனா மருத்துவமனைக்கு அனுப்பப்பட்டார். (க)

## இன்றும் நாளையும் மதுச்சாலைகள் பூட்டு

கொழும்பு,ஓக.5
நாடு தழுவிய ரீதியில் உள்ள அனைத்து மதுபானசாலைகளும் இன்றும், நாளையும் மூடப்படும். இதற்கு எதிராகச் செயற்படும் மதுபான உரிமையாளர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படுவதுடன், விற்பனை நிலைய அனுமதிப் பத்திரமும் இரத்துச் செய்யப்படும்.
பொதுமக்கள் இது தொடர்பான முறைப்பாடுகளை 1913 இலக்கத்தின் ஊடாக முன்வைக்க முடியும் என்று மதுவரித் திணைக்களம் அறிவித்துள்ளது.
இன்று பொதுத்தேர்தல் இடம்பெறவுள்ள நிலையில், பாதுகாப்பைப் பலப்படுத்த உரிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.
வன்முறைச் சம்பவங்கள் தோற்றம் பெறுவதைத் தவிர்ப்பதற்கு இரண்டு நாள்கள் மதுபானசாலைகள் மூடப்பட வேண்டும் என்று தேர்தல்கள் ஆணைக்குழு மதுவரித் திணைக்களத்துக்கு எழுத்து மூலமாக அறிவித்ததைத் தொடர்ந்து இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. (க)

## சிறைகளைக் கண்காணிக்க விசேட அதிரடிப்படையினர்

கொழும்பு,ஓக.5
கொழும்பு சிறைச்சாலைகளின் பாதுகாப்புக் கடமைகளுக்காக பொலிஸ் விஷேட அதிரடிப்படையினரை ஈடுபடுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
இது தொடர்பான உத்தியோபூர்வ வேண்டுகோளை சிறைச்சா லைகள் ஆணையாளர் நாயகம் துஷார உபுல்தெனிய பாதுகாப்பு அமைச்சிடம் முன்வைத்துள்ளார்.
வெலிக்கடை, மகசின், கொழும்பு மற்றும் விளக்கமறியல் சிறைச்சாலைகளுக்கும், பெண்கள் சிறைப்பிரிவுகளுக்கும் விசேட பாதுகாப்பு ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.
இதேவேளை புஸ்ஸ மற்றும் அகுனுகொலபெலஸ்ஸ சிறைச்சாலை களில் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கு பொலிஸ்விசேடஅதிரடிப்படையினர்ஈடுபடுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (க)

## "இலங்கைத் தமிழும் தமிழரும்" ஆய்வரங்கில் இன்று

யாழ்ப்பாணம், ஓக. 5
யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்கமும் தமிழ்நாடு மதுரை உலகத் தமிழ்ச்சங்கமும் இணைந்து சூம் (Zoom) செயலி வாயிலாக 20 நாள்களுக்கு இலங்கையில் தமிழும் தமிழரும் என்ற பொருளில் இணையவழியில் ஆய்வு மாநாட்டை முன்னெடுத்து வருகின்றன.
இதன் எட்டாவது நாளாகிய இன்று புதன்கிழமை நடைபெறும் நிகழ்வில் மாலை 4 மணி தொடக்கம் 5 மணி வரை முனைவர் ந. அரங்கராசன் இலங்கையில் தொல்காப்பிய சங்க இலக்கியக் கற்கை என்ற பொருளில் ஆய்வுரை ஆற்றவுள்ளார்.
இணைய வழியில் பங்கேற்க விரும்பும் ஆர்வலர்கள் பின்வரும் கடவுச்சொல்லைப் பயன்படுத்திக் கலந்து பயன்பெற முடியும் எனத் தமிழ்ச்சங்கத்தினர் தெரிவித்துள்ளனர்.
Zoom meeting ID :
477 159 8996
pass word : wts

## வாய்க்கால்கள் துப்புரவு


யாழ்ப்பாணம், ஓக.5
யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம் கொழும்புத்துறை பிரதேசத்தில் உள்ள வெள்ள வாய்க்கால்களை துப்புரவு செய்யும் பணியை ஆரம்பித்துள்ளது.
எதிர்வரும் மாரி காலத்துக்கு முன்பாக வெள்ள வாய்க்கால்கள் துப்புரவு செய்யப்படவுள்ளன.
கொழும்புத்துறை பிரதேசத்தை அண்டிய சுண்டிக்குழி ஈச்சமோட்டை போன்ற பகுதிகளில் உள்ள வெள்ள வாய்க்கால்கள் துப்புரவு செய்யப்பட்டு வருகின்றன.
அனேகமான வாய்க்கால்களில் திண்மக்கழிவுகள் காணப்படுகின்றன. சிரமங்களுக்கு மத்தியில் அவற்றை அகற்றும் பணியில் மாநகர சபை ஊழியர்கள் ஈடுபட்டுள்ளனர்.
எனவே வாய்க்கால்களில் கழிவுகளைக் கொட்டுவதை மக்கள் தவிர்த்துக்கொள்ளுமாறு யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம் கேட்டுக்கொண்டுள்ளது. (ஐ-17)

# சுதந்திரமான தேர்தல் இன்று நடக்கும்!!!

## தவிசாளர் மஹிந்த தேசப்பிரிய தகவல்

**கொழும்பு, ஓக. 5**

**பொதுத்தேர்தலை நீதியாகவும், சுதந்திரமாகவும், பாதுகாப்பாகவும் நடத்துவதற்கான அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன. எனவே, அச்சமின்றிச் சென்று வாக்குரிமையை பயன்படுத்துமாறு தேர்தல் ஆணைக்குழுவின் தவிசாளர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்தார்.**



கம்பஹா மாவட்டத்தில் தேர்தலுக்காக முன்னெடுக்கப்படும் பணிகளை நேற்றுக் காலை கண்காணிப்பதற்கு சென்றிருந்த தேர்தல் ஆணைக்குழுவின் தவிசாளர், அதன்பின்னர் ஊடகங்களிடம் கருத்து வெளியிடுகையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

தேர்தல் பரப்புரைகளின்போது இம்முறை வன்முறைச்சம்பவங்கள் எதுவும் பதிவாகவில்லை. தேர்தல் விதிமுறைகளை மீறும் வகையிலான சில சம்பவங்கள் பதிவாகியிருந்தன. கடந்த காலங்களுடன் ஒப்பிடுகையில் இது மிகவும் குறைவாகும். தேர்தல் பாதுகாப்புப் பணிகளில் பொலிஸார் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். பிரச்சினைகள் ஏற்படக்கூடும் என்று கருதப்படும் பகுதிகளுக்கு பதில் பொலிஸ்மா அதிபரின் ஆலோசனையின் பேரில் விசேட அதிரடிப் படை பாதுகாப்பும் வழங்கப்பட்டுள்ளது. கலகம் அடக்கும் பொலிஸாரும் தயார் நிலையிலேயே இருக்கின்றனர்.

இவ்வாறு தேர்தலை நீதியாகவும், சுதந்திரமாகவும், சுகாதாரப் பாதுகாப்பு ஏற்பாடுகளுடனும் நடத்துவதற்கு அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன. எனவே, வாக்காளர்கள் அச்சமின்றி வாக்களிப்பு நிலையங்களுக்குச்சென்று வாக்களிக்கலாம். தேர்தல் முடிவுகளை நாளை 6 ஆம் திகதி நள்ளிரவுக்குள்ளும், விருப்பு வாக்கு விவரங்களை 7 ஆம் திகதி நள்ளிரவுக்குள்ளும் வழங்குவதற்கு எதிர்பார்க்கின்றோம். தேசியப்பட்டியல் விவரம் கிடைத்துவிட்டால் ஒகஸ்ட் 10 ஆம் திகதியளவில் எல்லா விவரங்களும் வர்த்தமானி அறிவித்தலில் வெளிவந்துவிடும். அதாவது தேர்தல் மற்றும் அதன் பின்னர் இடம்பெறவேண்டிய அனைத்து பணிகளையும் 10 ஆம் திகதியளவில் நிறைவு செய்வதற்கு திட்ட மிட்டுள்ளோம்- என்றார். (ஓ.5,44)

## சமூக ஊடகங்களில் சட்டவிரோத பரப்புரை

கொழும்பு, ஓக. 4

தேர்தல் பரப்புரைகள் கடந்த ஞாயிற்றுக்கிழமை நள்ளிரவு 12 மணியுடன் நிறைவடைந்த நிலையில் தேர்தல் சட்டங்களை மீறிய வகையில் சமூக ஊடகங்கள் மூலம் மேற்கொள்ளப்பட்ட பரப்புரை நடவடிக்கைகள் தொடர்பாக 940 முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன என பவ்ரல் அமைப்பு தெரிவித்துள்ளது.

ஊடக சந்திப்பில் கலந்துகொண்ட அந்த அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹண ஹெட்டியாராச்சி மேலும் தெரிவித்ததாவது:

கடந்த இரண்டு மாதங்களில், சமூக வலைத் தளங்களில் தேர்தல் சட்டங்களை மீறிய 3 ஆயிரத்து 444 சம்பவங்கள் தொடர்பாக முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. சுகாதார சட்டங்களை மீறி தேர்தல் பரப்புரைகளில் ஈடுபட்டமை தொடர்பாக 2 ஆயிரத்து 483 முறைப்பாடுகளும் வெறுக்கத்தக்க பேச்சு தொடர்பாக 30 முறைப்பாடுகளும் கிடைக்கப்பெற்றன.

75 துன்புறுத்தல் சம்பவங்கள் மற்றும் 45 பெண் வேட்பாளர்கள் தவறாக சித்திரிக்கப்பட்டமை தொடர்பிலும் முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றன என்று அவர் குறிப்பிட்டுள்ளார். (ஓ.5)

## பேஸ்புக் விளம்பரங்களுக்கு வாரியிறைத்த வேட்பாளர்கள்

கொழும்பு, ஓக. 5

நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களும் அவர்களைச் சார்ந்த கட்சிகளும் ஆதரவாளர்களும் பெரும்தொகையான பணத்தை விளம்பரங்கள் உட்பட தேர்தல் செலவுகளுக்காக செலவிட்டுள்ளனர். இதில் பேஸ்புக் விளம்பரங்களுக்காக உத்தியோகபூர்வமாக செலவிட்ட மொத்தத்தொகை பற்றிய விவரங்கள் வெளியாகியுள்ளன.

கடந்த மே மாதம் முதல் தேர்தல் பரப்புரைகள் நிறைவுக்கு வந்த இறுதித்தினமான ஓகஸ்ட் 2 ஆம் திகதிவரை 28 ஆயிரத்து 510 விளம்பரங்களுக்காக 4 லட்சத்து 78 ஆயிரத்து 545 அமெரிக்க டொலர்களை அதாவது 8 கோடியே 87 லட்சத்து 83 ஆயிரத்து 939 ரூபா 47 சதத்தைச் செலவிட்டுள்ளனர்.

இவர்களில் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவரும் கொழும்பு மாவட்ட வேட்பாளருமான சஜித் பிரேமதாஸ 111 பேஸ்புக் விளம்பரங்களுக்காக 20 ஆயிரத்து 81 அமெரிக்க டொலர்களை அதாவது 37 லட்சத்து 25 ஆயிரத்து 574 ரூபாவை செலவிட்டுள்ளார். அவருக்கு அடுத்த நிலையில் அங்கஜன் இராமநாதன் செலவிட்டுள்ளார். அவர் 26 லட்சத்து 88 ஆயிரத்து 204 ரூபாவை இதற்காகச் செலவிட்டுள்ளார். (ஓ.5)

## ஒகஸ்ட் 20இல் முதல் அமர்வு

### சிறப்பு வர்த்தமானி வெளியீடு

கொழும்பு, ஓக. 5

இன்று நடைபெறும் நாடாளுமன்றத் தேர்தலின் பின்னர் புதிய நாடாளுமன்றம் 2020ஆம் ஆண்டு ஒகஸ்ட் 20ஆம் திகதி கூட்டப்படவுள்ளது. அரசமைப்பின் மூலமும் நாடாளுமன்றத் தேர்தல் சட்டத்தின் மூலமும் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவால் இந்தத் தீர்மானம் பெறப்பட்டுள்ளது.

இது பற்றி அறிவிக்கும் விசேட வர்த்தமானி அறிவித்தல் நேற்று முன்தினம் நள்ளிரவு வெளியிடப்பட்டுள்ளது. (ஓ.5)

## பொதுத்தேர்தலை முன்னிட்டு விசேட சேவையில் தபால் அலுவலகங்கள்

கொழும்பு, ஓக.5

பொதுத்தேர்தலை முன்னிட்டு நாடளாவிய ரீதியிலுள்ள தபால் அலுவலகங்களை இன்று மேலதிகமாக சில மணித்தியாலங்கள் திறப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மாவட்டத் தேர்தல் தெரிவத்தாட்சி அலுவலகர்களால் பெயர் குறிப்பிடப்பட்டுள்ள, பிரதான மற்றும் உப தபால் அலுவலகங்கள் திறக்கப்படும் என்று தபால் மா அதிபர் ரஞ்சித் ஆரியரத்ன குறிப்பிட்டுள்ளார். (ரி2)

## யாருக்கு வாக்களித்தீர்கள்? ஒருபோதும் கண்டறியமுடியாது!

### உதவித் தேர்தல்கள் ஆணையாளர் திட்டவட்டம்

யாழ்ப்பாணம், ஓக. 5

வாக்களிப்பின்போது யாருக்கு வாக்களித்தீர்கள் என்பதை ஒரு போதும் கண்டறிந்துகொள்ளவே முடியாது. வாக்காளர்கள் எந்த அச்சமும் இன்றி வாக்களிக்கலாம் என்று யாழ்ப்பாண மாவட்ட தேர்தல் ஆணைக்குழுவின் உதவி ஆணையாளரும் உதவித் தெரிவத்தாட்சி அலுவலருமான இ.கி.அமல்ராஜ் தெரிவித்தார்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் போட்டியிடும் வேட்பாளர் ஒருவர், தொலைபேசியூடாக பொதுமக்களைத் தொடர்புகொண்டு, தமக்கு வாக்களிக்க வேண்டும் என்று கோரியுள்ளார்.

தேர்தலில் நீங்கள் யாருக்கு வாக்களித்தீர்கள் என்பதைக் கண்டறிவோம் என்றும் கூறியுள்ளார். இந்த நிலையில், இவ்வாறான கூற்று தவறானது எனவும், தேர்தலை நடத்துவது தேர்தல்கள் ஆணைக்குழுதான், அரசியல்வாதிகள் அல்லர் என்றும் தெரிவித்த அமல்ராஜ், எந்தவொரு சந்தர்ப்பத்திலும் யாருக்கு வாக்களித்தீர்கள் என்பதை எந்த வொரு அதிகாரிகளோ அல்லது எந்த வொரு தரப்பினராலோ கண்டறிய முடியாது என்று குறிப்பிட்டார்.



மக்கள் பயம் இன்றி வாக்களிக்க முடியும். அனைவரும் வாக்களிக்க வேண்டும். முடிந்தவரை நேரத்தோடு வாக்களிக்க வேண்டும். சுகாதார நடைமுறைகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. அச்சப்படத் தேவையில்லை.

இவற்றையும் தாண்டி வாக்காளர்களுக்கு அழுத்தம் பிரயோகித்தால் முறையிடலாம். முறைப்பாடுகள் தொடர்பிலும் இரகசியம் காக்கப்படும்,- என்றார். (ஓ.5)

## 2 ஜனாதிபதிகள், 2 பிரதமர்களின் மகன்மார்கள் தேர்தலில் போட்டி!

### ஜனாதிபதி பதவி வகித்த இருவரும் களத்தில்

கொழும்பு, ஓக. 5

நடைபெறவுள்ள பொதுத்தேர்தலில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் 208 பேர் போட்டியிடுகின்றனர். இவர்கள் ஒரு தடவையேனும் நாடாளுமன்ற உறுப்பினராகப் பதவி வகித்துள்ளனர். முன்னாள் ஜனாதிபதிகள் இருவர், முன்னாள் பிரதமர், முன்னாள் ஜனாதிபதிகளின் இரு புதல்வர்கள் ஆகியோரும் இதில் உள்ளடங்குகின்றனர்.

மஹிந்த ராஜபக்ஷ, மைத்திரிபால சிறிசேன ஆகியோர் முன்னாள் ஜனாதிபதிகளாவர் என்பதுடன், சஜித் பிரேமதாச, நாமல் ராஜபக்ஷ ஆகியோர் முன்னாள் ஜனாதிபதிகளின் புதல்வர்களாவர். ரணில் விக்கிரமசிங்க முன்னாள் பிரதமராவார். அத்துடன், முன்னாள் பிரதமர்களான திமு ஜயரத்ன, ரத்னசிறி விக்கிரமநாயக்க ஆகியோரின் புதல்வர்களும் போட்டியிடுகின்றனர். (ஓ,5,44)

# நீண்டகால கண்ணோட்டத்தில் பொறுப்புடன் வாக்களியுங்கள்!

## தவத்திரு வேலன் சுவாமிகள் அறிவுறுத்தல்

கொழும்பு, ஓக. 5

தமிழ் மக்கள் நீண்டகாலக் கண்ணோட்டத்தில் சிந்தித்து இந்தத் தேர்தலில் தமது வாக்குகளைப் பயன்படுத்த வேண்டும். அறிவுபூர்வமாகவும் பொறுப்புணர்வோடும் தமது வாக்குரிமையைப் பயன்படுத்த வேண்டும் என்று தெரிவித்தார் தவத்திரு வேலன் சுவாமிகள்.



இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் குறிப்பிட்டுள்ள தாவது:

இந்த வருடம் இடம்பெறும் பொதுத் தேர் தலானது வடக்கு கிழக்கில் வாழும் தமிழ் உறவுகள் அனைவரும் தமது இருப்பிற் காக, நீதிக்காக தமது பலத்தை வெளிப் படுத்த வேண்டிய வரலாற்று முக்கியத்து வம் வாய்ந்ததாக அமைந்துள்ளது. தமிழ் மக்கள் இந்தத் தேர்தலை நீண்ட காலக் கண்ணோட்டத்தில் உற்றுநோக்கி உங்கள் வாக்குரிமையை அறிவுபூர்வ மாகவும் பொறுப்புணர்வோடும் பிரயோ கிக்க வேண்டும்.

ஜனநாயக நாட்டில் இடம்பெறும் தேர் தல்களில் வாக்காளர்கள் யாவரும் வாக்களிக்க வேண்டியது தார்மீகக் கட மையும் உரிமையும் ஆகும். எனவே கொரோனாவிற்குப் பயந்தோ அல்லது 'யார் தெரிவு செய்யப்பட்டால் எமக்கு என்ன?' எனும் விரக்தியினாலோ வாக் களிக்காமல் இருக்க வேண்டாம். உங்க ளுக்குரிய மக்கள் பிரதிநிதிகளைத் தெரிவுசெய்யும் சந்தர்ப்பத்தை சரியா கப் பயன்படுத்துங்கள். மனச்சாட்சிப்படி சரியானவர்களை, சிந்தித்துத் தெரிவு செய்யுங்கள். தேர்தல் தொடர்பான நெறிமுறைகளைப் பின்பற்றி நடந்து கொள்ளுங்கள்.

நேரத்துக்கே காலையில் சென்று வாக் களியுங்கள். வாக்களிக்கச் செல்லும் போது சுகாதார நடைமுறைகளைச் சரி யாகப் பின்பற்றுங்கள். அதேபோன்று ஏனையவர்களையும் வாக்களிப்பதற்கு ஊக்கப்படுத்துங்கள். தேர்தல் நேர்மை யாக, சுமுகமாக நடைபெறவும், அதன் மூலம் தமிழ் மக்கள் வாழ்வில் மலர்ச்சி ஏற்படவும் ஆசி வேண்டிப் பிரார்த்திக்கி றோம் - என்றுள்ளது. (ம)

ஜம்மியத்துல் உலமா சபைக்கு

## ஹலால் சான்றிதழால் 15 லட்சம் வருமானம்

கொழும்பு, ஓக. 5

ஹலால் சான்றிதழ்களை வழங்குவதன் மூலம் அகில இலங்கை ஜம்மியத்துல் உலமா சபை மாதாந்தம் 15 லட்சம் ரூபா வருமானத்தைப் பெறுகின்றது என்று உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான விசாரணைகளை நடத்தி வரும் ஜனாதி பதிஆணைக்குழுவின் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

தேசிய புலனாய்வு சேவையின் முன் னாள் பணிப்பாளர் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் நிலந்த ஜயவர்தன அண்மையில் ஆணைக்குழுவில் சாட்சி யமளிக்கும் போது இந்தத் தகவலை வெளியிட்டுள்ளார். 4 ஆயிரத்து 500 உணவு பொருள்களுக்கு ஹலால் சான் றிதழ் வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார். (ம)

## குற்றப் புலனாய்வுப் பிரிவுக்கு மாற்றப்பட்டது அங்கொட லொக்காவின் இறப்பு விசாரணை

கொழும்பு, ஓக. 5

இலங்கையின் பிரபல போதைப்பொருள் கடத்தல் குழுவின் முக்கியஸ்தரான அங்கொட லொக்காவின் உயிரிழப்பு தொடர்பான விசா ரணைகள் குற்றப்புலனாய் வுப் பிரிவுக்கு மாற்றப்பட்டுள் ளன.

சர்வதேச போதைப்பொருள் கடத்தல்காரராக தேடப்பட்டு வரும் மதுமா சந்தன லசந்த பெரேரா என்ற அங்கொட லொக்கா மீது (வயது 35) கொலை, கடத்தல் குற்றச் சாட்டுக்களும் உள்ளன. கடந்த சில வருடங்களாக தலைமறைவாகியிருந்த இவர், இந்தியாவின் தமிழகத் தின் கோவையில் வசித்தார் என்றும், அண்மையில் உயி ரிழந்தார் என்றும் இவரது உடல் மதுரையில் தகனம் செய்யப்பட்டது என்றும் செய் திகள் வெளியாகியிருந்தன.

அந்தத் தகவல்களின்படி, கடந்த சில ஆண்டுகளுக்கு முன்னர் கோவைக்கு தப்பி வந்த அவர், பிரதீப் சிங் என்ற பெயரில் போலி அடை யாள அட்டை உள்ளிட்ட ஆவ ணங்களைத் தயார் செய்து தங்கியுள்ளார்.

அங்கொட லொக்கா போலி ஆவணங்களைப் பெறுவ தற்கு மதுரையில் வசிக்கும் இலங்கையைச் சேர்ந்த பெண்ணான சிவகாமி சுந் தரி என்பவரும், திருப்பூரில் வசிக்கும் ஈரோட்டைச் சேர்ந்த தியானேஸ்வரன் என்பவரும் உதவியுள்ளனர்.

அங்கொட லொக்காவின் காதலியான கொழும்பைச் சேர்ந்த அமானி தாஞ்சி என்ற பெண்ணும் இலங்கை யிலிருந்து கடந்த மார்ச் மாதம் கோவை சென்று, அவருடன் வசித்து வந்துள்ளார். பின் னர், கொரோனா பொது முடக் கம் காரணமாக நாடு திரும்ப முடியாமல் இருந்த அமானி தாஞ்சி, இலங்கை குடி யுரிமை கொண்டுதான் வசித் துள்ளார் என்பதும் தெரிய வந்துள்ளது.

இதையடுத்து சிவகாமி சுந் தரி, அமானி தாஞ்ஜி, தியா னேஸ்வரன் ஆகிய 3 பேரை யும் பொலிஸார் கைது செய் தனர். அத்துடன் அவர்கள் மீது சதித் திட்டம் தீட்டியமை, போலி ஆவணங்களைத் தாக்கல் செய்தமை, மோசடி உள்ளிட்ட 10 பிரிவுகளின் கீழ் வழக்குப்பதிவு செய்யப் பட்டது. தற்போது இலங்கை பொலிஸார், கோவை பொலி ஸாரின் உதவியை நாடியுள் ளனர். மேலும், உயிரிழந்தது அங்கொட லொக்காதானா என அறிவியல் ரீதியாக நிரூ பணம் செய்வதற்கான பணி யில் ஈடுபட்டுள்ளனர்.

உடல் தகனம் செய்யப்பட்டா லும், கோவை அரசு வைத்தி யக்கல்லூரி வைத்தியசாலை யில் பிரேத பரிசோதனை செய்யப்பட்டுள்ளதால், அந்த அறிக்கைக்காக காத்திருக் கின்றனர். இந்நிலையில், இது இரு நாடுகள் சம்பந்தப் பட்ட வழக்கு என்பதால் மாந கர பொலிஸாரிடமிருந்து சிபிசிஐடிக்கு வழக்கு மாற்றப் பட்டுள்ளது. (ம)

## தாமதிக்கும் நிலையில் விமான நிலையங்களின் திறப்பு

கொழும்பு, ஓக. 5

வெளிநாட்டவர்களுக்காக ஓகஸ்ட் முதல் வாரத்தில் விமான நிலையத்தை திறப்பதற்கு முன்னர் தீர்மா னிக்கப்பட்ட போதும் தற் போது நாட்டின் விமான நிலையங்களை மீண்டும் திறப்பதற்கான முடிவு அர சால் இன்னும் எடுக்கப்பட வில்லை.

விமான நிலையங்களை எப்போது திறப்பது என்று அரசாங்கம் இன்னும் முடிவு செய்யவில்லை என விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் நிறுவ னத்தின் தலைவர் மேஜர் ஜெனரல் ஜீ.ஏ.சந்திரசிறி தெரிவித்துள்ளார்.

கொரோனாத் தொற் றினை தொடர்ந்து நாட்டின் சுற்றுலாத் துறையை மீட் டெடுக்க ஓகஸ்ட் முதலாம் திகதி முதல் பண்டார நா யக்க சர்வதேச விமான நிலையத்தையும் மத்தள சர்வதேச விமான நிலை யத்தையும் மீண்டும் திறக்க அரசாங்கம் முன்ன தாக திட்டமிட்டிருந்தது. எனினும் சுற்றுலாவிக ளுக்காக விமான நிலை யங்களைத் திறப்பதில் மேலும் தாமதமாகும் என்று தற்போது அறிவிக் கப்பட்டுள்ளது. (ம)

## தனிமைப்படுத்தல் மையத்திலிருந்து திரும்பியவருக்கு கொரோனா?

கொழும்பு, ஓக. 5

தனிமைப்படுத்தல் மையத்திலிருந்து வீடு திரும்பிய ஒருவர் கொரோனா அறி குறிகளுடன் நேற்றுமுன்தினம் இரவு சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளார்.

ஹோமாகம, நியதகல பகுதியைச் சேர்ந்த 54 வயதான ஒருவரே மருத்து வமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

சீஷெல்ஸில் கப்பல்துறையில் பணியாற் றிய இவர், கடந்த 11ஆம் திகதி இலங்கை திரும்பியிருந்தார். மொரட்டுவ பல்க லைக்கழகத்தில் 14 நாள்கள் தனிமைப் படுத்தப்பட்ட பின்னர் வீடு திரும்பி, ஹோமாகமவின் நியதகல பகுதியில் வசித்து வந்தார்.

இந்த நிலையில் காய்ச்சல் உள்ளிட்ட சில கொரோனா அறிகுறிகள் தென்பட் டமையை அடுத்து, அவர் நேற்றுமுந்தி னம் இரவு மருத்துவமனையில் சேர்க் கப்பட்டுள்ளார். அவரது மனைவி மற்றும் இரண்டு மகள்கள் வீட்டில் சுய தனி மைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ள னர். (ம)


## இந்தியா-இலங்கை இடையே பாதுகாப்பை மேம்படுத்த முடிவு

கொழும்பு, ஓக. 5

இந்தியா-இலங்கை இடையே பாதுகாப்புத்துறை ஒத்து ழைப்பை மேலும் வலுப்படுத்த இரு நாடுகளும் முடிவுசெய்துள் ளன.

இலங்கையில் உள்ள இந்திய தூதரகம் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இந்த விட யம் தொடர்பாக மேலும் குறிப் பிட்டுள்ளதாவது:

இலங்கையில் உள்ள இந்திய தூதரகத்தின் பாதுகாப்பு ஆலோ சகரும் இந்திய கடற்படையின் தலைவருமான விகாஸ் சூட், முன்னாள் பாதுகாப்புச் செயலா



ளர் கமால் குணரத்னவை கடந்த ஜூலை 27ஆம் திகதியும் இலங்கை கடற்படையின் துணைத் தலைவர் நிஷந்தா உல்கிடேனியை ஜூலை 29ஆம் திகதியும் சந்தித்துக் கலந்துரை யாடினார்.

இதன்போது இரு நாட்டு பாது காப்புத்துறையில் மேற்கொள் ளப்பட வேண்டிய ஒத்துழைப்பு குறித்து விரிவாக விவாதிக்கப் பட்டது.

இந்தியாவில் பயிற்சி அளிக்கப் படும் வெளிநாட்டு இராணுவப் படை வீரர்களில் 50 சதவீதத் துக்கும் அதிகமானோர் இலங்கை இராணுவத்தினர். இது இந்தியா - இலங்கை இடையே பாதுகாப்பு ஒத்து ழைப்பு வலுவாக உள்ளதைக் காட்டுகிறது. இலங்கையில் கொரோனாவைத் தடுக்க மருத் துவ உதவிகளை இந்தியா கடந்த சில மாதங்களாக வழங்கி வருகிறது - என்றுள்ளது. (ம)

### போதைப்பொருள் கடத்தலுக்கு துணைபோன

# அதிகாரிகளின் சொத்துக்கள்; அரசுடைமையாக்கத் தீர்மானம்

**கொழும்பு, ஓக. 5**

**போதைப்பொருள் கடத்தலுடன் தொடர்புடைய போதைப்பொருள் ஒழிப்பு பணியகத்தின் அதிகாரிகளுடைய சொத்துக்களை அரசுடைமையாக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. குறித்த அதிகாரிகள் முறையற்ற வகையில் திரட்டிய பணத்தால் சேகரித்த சொத்துக்களையே அரசுடைமையாக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.**

நிதி தூய்தாக்கல் சட்டத்தின் பிரகாரம் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதற்குத் தேவையான தகவல்கள் தற்போது திரட்டப்படுகின்றன எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

போதைப்பொருள் கடத்தல் தொடர்பில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள 13 அதிகாரிகளும் நேற்று நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர். ஏனைய 8 உத்தியோகத்தர்கள் தொடர்ந்தும் தடுப்புக்காவலில் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

போதைப்பொருள் ஒழிப்பு பணியகத்தின் களஞ்சிய அறையிலிருந்து பெறப்பட்ட போதைப்பொருள் தொடர்பான அறிக்கையை பொதுத் தேர்தலின் பின்னர் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கவுள்ளதாக அரச இரசாயன பகுப்பாய்வுத் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

போதைப்பொருள் கடத்தலுக்காக பயன்படுத்தப்பட்டதாகக் கூறப்படும் 8 வாகனங்கள் குறித்தும் நீதிமன்றத்திற்கு அறிக்கை சமர்ப்பிக்கவுள்ளதாக அரச இரசாயனப் பகுப்பாய்வு திணைக்களத்தின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். இந்த விடயம் தொடர்பான விசாரணைகள் மிக இரகசியமாக மேற்கொள்ளப்படுகின்றன என்றும் அவர் குறிப்பிட்டார். (ம)



யாழ். 52ஆவது படைப்பிரிவால் நடத்தப்பட்ட 'ஜப்னா கொட் ரலன்ட் 2020' நிகழ்வின் இறுதிச் சுற்று கடந்த 2ஆம் திகதி இடம்பெற்றது. நிகழ்வில் வட மாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சாள்ஸ் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டார். (ம)

### 7ஆம், 9ஆம் திகதிகளில்

## ஐக்கிய அரபு இராச்சியத்தில் இருந்து இலங்கையர் சிலர் தாயகம் திரும்புவர்

கொழும்பு, ஓக. 5

எதிர்வரும் 7ஆம் மற்றும் 9ஆம் திகதிகளில் ஐக்கிய அரபு இராச்சியத்திலிருந்து இலங்கைக்கு ஒரு தொகுதி இலங்கையர்கள் நாடு திரும்புவார்கள் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. ஐக்கிய அரபு இராச்சியத்திற்கான இலங்கையின் தூதுவர் மல்ராஜ் டி சில்வா இந்த அறிவித்தலை விடுத்துள்ளார்.

கொரோனா பரவலைத் தடுப்பதற்காக ஐக்கிய அரபு இராச்சியத்திலிருந்து இலங்கைக்கான விமான சேவைகள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டிருந்தன. எனினும் வெளிநாடுகளில் சிக்கியுள்ள இலங்கையர்களை மீட்கும் பணிகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதன் ஒரு பகுதியாக ஐக்கிய அரபு இராச்சியத்தில் இருந்து எதிர்வரும் 7ஆம் மற்றும் 9ஆம் திகதிகளில் ஒருதொகுதி இலங்கையர்கள் நாடு திரும்பவுள்ளனர்.

ஐக்கிய அரபு இராச்சியத்திலுள்ள இலங்கைத் தூதரகம் மற்றும் துணைத் தூதரகங்களில் 21ஆயிரம் பேர் இலங்கைக்கு வருவதற்கு முன்பதிவு செய்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ம)

## அனுராதபுரம் மக்களுடைய இரத்தத்தில் ஈயம்!

அனுராதபுரம், ஓக. 5

அனுராதபுரம் மாவட்ட, கிராமமட்ட மக்களின் இரத்தத்தில் ஈயம் கலந்துள்ளதாக ஆய்வில் உறுதி செய்யப்பட்டுள்ளது என்று சுகாதார அமைச்சின் உணவு கட்டுப்பாட்டு பிரிவின் விசேட வைத்தியர் ஆனந்த ஜயலால் தெரிவித்துள்ளார்.

குறித்த பகுதிகளில் வாழும் மக்களின் இரத்தத்தில் டெசிலீட்டர் ஒன்றுக்கு 3-9 மைக்ரோகிராம் அளவு ஈயம் கலந்துள்ளதாக ஆய்வில் தெரியவந்துள்ளதாகஅவர் குறிப்பிட்டுள்ளார். இந்தப் பகுதி மக்களுக்கு நரம்பியல் கோளாறுகள், சிறுநீரக செயற்பாட்டில் தடை ஏற்படுதல், அதிக இரத்த அழுத்தம் போன்ற நோய்கள் ஏற்படுகின்றன என ஆய்வில் தெரியவந்துள்ளதாக வைத்தியர் சுட்டிக் காட்டியுள்ளார். ஈயம் இரத்தத்தில் உள்ளமையினால் பிள்ளைகளின் மூளை வளர்ச்சி மட்டம் குறைவடைவதாக உறுதியாகியுள்ளது. உணவு மற்றும்குடிக்கும்நீரில் ஈயம் உள்ளமையினால் இரத்தத்தில் ஈயம் கலந்துள்ளமை உறுதியாகியுள்ளதாக மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

## 24 மணித்தியாலங்களுக்குள் 196 முறைப்பாடுகள்

கொழும்பு, ஓக. 5

கடந்த 24 மணித்தியாலங்களில் தேர்தலுடன் தொடர்புடைய 196 முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளதாக தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இதில் 16 முறைப்பாடுகள் தேசிய தேர்தல்கள் முறைப்பாட்டு நிலையத்துக்கு கிடைக்கப்பெற்றவை என்று ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது. (ஓ.5)

## சட்டவிரோத செயலுடன் தொடர்புடைய சிறை அதிகாரிகள் குறித்து விசாரணை

கொழும்பு, ஓக. 5

சட்டவிரோத செயற்பாடுகளுடன் தொடர்புபட்டுள்ளனர் எனச் சந்தேகிக்கப் படும் சிறைச்சாலை அதிகாரிகள் குறித்து புலனாய்வுப் பிரிவு ஊடாகத் தகவல்களைப் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக சிறைச்சாலைகள் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

சந்தேகத்திற்கிடமான அதிகாரிகள் சட்டவிரோத செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ளனரா என்பது தொடர்பில் கடுமையாக விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன என சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் துஷார உபுல்தெனிய தெரிவித்துள்ளார்.

சிறைச்சாலை அதிகாரிகள் குற்றச் செயல்களில் ஈடுபட்டுள்ளமை உறுதி செய்யப்பட்டால், அவர்களுக்கு எதிராக கடும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் குறிப்பிட்டுள்ளார்.

அரச புலனாய்வுப் பிரிவினரும் சிறைச்சாலைகள் புலனாய்வுப் பிரிவினரும் இணைந்து விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். நாட்டிலுள்ள அனைத்து சிறைச்சாலைகளையும் மையப்படுத்தி இந்த விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன. (ம)

## 7 மாவட்டங்களில் டெங்கு அபாயம்!!



டெங்கு நோய் பரவும் அபாய முள்ள மாவட்டங்களாக இலங்கையின் ஏழு மாவட்டங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன.

இந்த விடயத்தை தேசிய டெங்கு நோய் தடுப்புப் பணியகத்தின் பணிப்பாளர் மருத்துவர் அருண தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாட்டில் தற்போது சீரற்ற காலநிலை நிலவி வருகின்றது. இந்த நிலையில் டெங்கு நோய்த் தாக்கம் அதிகரிக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது. கொழும்பு, கம்பஹா, களுத்துறை, காலி, இரத்தினபுரி, கேகாலை மற்றும் கண்டி ஆகிய மாவட்டங்களிலேயே டெங்கு நோய் பரவும் அபாயம் அதிகரித்துக் காணப்படுகிறது. மேலும் இந்த வருடத்தில் இதுவரையான காலப்பகுதியில் 23 ஆயிரத்து 934 பேர் டெங்கு நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்றார். (ம)

## சம்பளம் வழங்காமல் ஏமாற்றிய முதலாளி பொருள்களை திருடி விற்றார் தொழிலாளி

கொழும்பு, ஓக. 5

திரையரங்கில் வேலைசெய்யும் ஊழியர் ஒருவருக்கு சம்பளப் பணம் வழங்காததை அடுத்து, அந்த ஊழியர் திரையரங்கில் இருந்த பொருள்களைத் திருடிச் சென்று விற்றுள்ள சம்பவம் இடம்பெற்றுள்ளது.

கம்பளை மாவட்டத்திலேயே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

கம்பளை - நுவரெலியா வீதியில் அமைந்துள்ள குறித்த திரையரங்கு கொரோனா அச்சம் காரணமாக அரச அறிவித்தலுக்கமைய மூடப்பட்டிருந்தது. தற்போது அதனைத் திறப்பதற்குரிய நிலைமை உள்ளமையால் அதற்கான ஆயத்த வேலைகளைச் செய்யும் நோக்கில் திரையரங்கின் உரிமையாளர் சென்றபோதே திரையரங்கில் இருந்த பொருள்கள் திருடப்பட்டிருந்தமையை அறிந்து கம்பளை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

முறைப்பாட்டுக்கமைய பொலிஸார் மேற்கொண்ட விசாரணைகளில் அந்த திரையரங்கில் வேலைபார்க்கும் நபர் கைதுசெய்யப்பட்டார். தனக்கான ஊதியம் வழங்கப்படாததை அடுத்தே மேற்படி பொருள்களைத் திருடி விற்றேன் என்று அவர் ஒப்புதல் வாக்குமூலம் வழங்கியுள்ளார். கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர் எதிர்வரும் 11ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். அவரிடம் மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. (ம)

வடமராட்சி கடற்பரப்பில்

# கடலட்டைகள் பிடிப்பு; தடைவிதிக்க மன்று மறுப்பு

வடமராட்சி, ஓக. 5

வடமராட்சி கடற்பரப்பில் சட்டவிரோத கடற்றொழில் மற்றும் கடலட்டைகளைப் பிடிப்பதற்குத் தடை விதிக்குமாறு கோரி தாக்கல் செய்யப்பட்ட விண்ணப்பம் பருத்தித்துறை நீதிமன்றால் நேற்று நிராகரிக்கப்பட்டது.

வடமராட்சி கடற்பரப்பில் சட்டவிரோத கடற்றொழில் மற்றும் கடலட்டைகளைப் பிடிப்பதற்கு தடை உத்தரவை கடந்த வருடம் பெற்றிருந்த நிலையில், இவ்வருடம் மீண்டும் கடலட்டை தொழிலில் ஈடுபடுவதற்கு கடற்றொழில் நீரியல் வளத்துறை அமைச்சால் அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. இதனை எதிர்த்து மீண்டும் கடந்த மாதம் 19ஆம் திகதி நீதிமன்றில் மீள் தடை உத்தரவைப் பெறுவதற்காக சட்டத்தரணி எம்.ஏ சுமந்திரனால் இந்த மனுத் தாக்கல் செய்யப்பட்டது.

இந்த விண்ணப்பம் தொடர்பில் கடந்த வியாழக்கிழமை இரு தரப்பினரது சமர்ப்பணங்களும் முன்னெடுக் கப்பட்டன.

இந்த நிலையில் கட்டளை ஓகஸ்ட் 4ஆம் திகதி (நேற்று) வழங்கப்படும் என்று தவணையிட்ட நீதிமன்றம் வழக்கை ஒத்திவைத்தது. வழக்கு நேற்று செவ்வாய்க்கிழமை கட்டளைக்காக பருத்தித்துறை நீதிவான் காயத்திரி சைலவன் முன்னிலையில் எடுத்துக்கொள்ளப்பட்டது.

'கடற்றொழில் பிணக்குத் தொடர்பில் தீர்த்து வைக்கும் அதிகாரம் முழுமையாக கடற்தொழில் நீரியல் வள திணைக்களத்துக்கு உண்டு. மேலும் வடமராட்சியைச் சேர்ந்த மூன்று சங்கங்கள் தென்னிலங்கை மீனவர்கள் கடலட்டை தொழிலில் ஈடுபட அனுமதியை வழங்கியுள்ளன. அத்தோடு நீதிமன்றக் கட்டளையை மீறி தொழில் இடம்பெறுவது தொடர்பில் உரிய சாட்சியங்கள் நீதிமன்றில் முன்வைக்கப்படவில்லை' என்று சுட்டிக்காட்டிய நீதிமன்றம் விண்ணப்பத்தை நிராகரித்தது. (ம-26)

## வாக்குப்பெட்டிகளுடன் சென்ற பஸ் விபத்து!

கொழும்பு, ஓக. 5

நாடாளுமன்ற பொதுத்தேர்தலுக்காக காலி மாவட்டத்தின் உடுகம தேர்தல் மத்திய நிலையைத் துக்கு வாக்குப்பெட்டிகளை ஏற்றிச்சென்ற பஸ் விபத்துக் குள்ளாகியுள்ளது.

காலி உடுகம வீதியின் ஹியார் பிரதேசத்தில் வாக்குப் பெட்டிகளை ஏற்றிச் சென்ற பஸ்ஸூம் ஓட்டோ வொன்றும் மோதியதால் இந்த விபத்து இடம்பெற்றுள்ளதென அக்மீமன பொலிஸார் தெரிவித்தனர். ஓட்டோ சாரதி காயங்களுடன், கராப்பிட்டிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். (ம)

## வீடொன்றில் திருட்டு 17 பேர் கைதாகினர்

கட்டுநாயக்க பிரதேசத்தில் உள்ள வீடொன்றில் இருந்த உடைமைகள், வாகனங்களைத் திருடினார்கள் என்ற குற்றச்சாட்டில் 2 பெண்கள் உட்பட 17 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

நேற்றுமுன்தினம் இரவு இந்தத்திருட்டு இடம்பெற்றுள்ளது. நேற்றுமுன்தினம் இரவு வீட்டுக்குள் நுழைந்த திருடர்கள் இலத்திரனியல் சாதனங்களையும், வீட்டுக்குள் இருந்த ஏனைய பெறுமதியான பொருள்களையும் திருடிச் சென்றுள்ளனர்.

சம்பவம் இடம்பெற்ற போது, வீட்டில் யாரும் இருக்கவில்லையென, விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது. சம்பவம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்ட சீதுவ பொலிஸார், குளியாப்பிட்டி, உடுபத்த ஆகிய பகுதிகளைச் சேர்ந்த சந்தேகநபர்களை கைது செய்துள்ளனர். (ம)

## அவசரநிலையை எதிர்கொள்ள தனியான பிரிவு தயார் நிலை!

கொழும்பு, ஓக. 5

பொதுத் தேர்தலுக்கு அமைவாக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளில் எதிர்வரும் சில தினங்களில் அவசர இடர்நிலை ஏற்பட்டால் அதனை எதிர்கொள்வதற்கு 24 மணித்தியாலம் செயற்படக்கூடிய சிறப்புச் செயற்பாட்டுப் பிரிவு அமைக்கப்பட்டுள்ளது.

நாடு முழுவதிலும் உள்ள தேர்தல் அலுவலகங்கள் மற்றும் பாதுகாப்புப் பிரிவுகளை உள்ளடக்கி உடனடியாக செயற்படக்கூடிய விசேட திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டிருப்பதாக இடர் முகாமைத்துவ மத்திய நிலையத்தின் ஊடகப் பேச்சாளர் பிரதீப் கொடிப்பிலி தெரிவித்துள்ளார்.

அனர்த்தங்கள் தொடர்பாக இந்த விசேட பிரிவுகளுக்கு அறிவிப்பதற்காக விசேட தொலைபேசி இலக்கங்கள் அறிமுகப் படுத்தப்பட்டுள்ளன. 0702117117, 0113668031, 0113668032, 0113668087, 0113668016, 0113668025 என்பனவும், இதற்கு மேலதிகமாக துரித தொலைபேசி இலக்கமான 117 என்ற இலக்கமும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. (ம)

## தேர்தல் கடமைக்கு தெரிவுசெய்யப்பட்ட 10 பேர் நீக்கம்

கொழும்பு, ஓக. 5

நுவரெலியா மாவட்டத்தில் தேர்தல் கடமைகளுக்காக தெரிவுசெய்யப்பட்டிருந்த சிரேஷ்ட தேர்தல் அலுவலகர்கள் 10 பேர் அந்தக்கடமைகளில் இருந்து நீக்கப்பட்டுள்ளனர், அவர்களுக்கு எதிராக, விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இது தொடர்பில் நுவரெலியா மாவட்ட தெரிவத்தாட்சி அதிகாரி ரோஹன புஸ்பகுமார மேலும் தெரிவித்ததாவது:

இந்த அதிகாரிகள் 10 பேரும் அரசியல் கட்சியொன்றின் கூட்டங்களில் கலந்துகொண்டிருந்தமை உறுதிசெய்யப்பட்டுள்ளதால் அவர்கள் தேர்தல் கடமைகளிலிருந்து நீக்கப்பட்டுள்ளனர். இவ்வாறு நீக்கப்பட்டவர்கள் குறித்த பிரதேசத்திலிருந்து தெரிவு செய்யப்பட்ட ஆசிரியர்கள் 10 பேர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

## சிறைச்சாலை அதிகாரிகளுக்கு துப்பாக்கிகள் வழங்க முடிவு

கொழும்பு, ஓக. 5

உயிர் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ள சிறைச்சாலை அதிகாரிகளுக்கு துப்பாக்கிகள் வழங்க பாதுகாப்பு அமைச்சு தீர்மானித்துள்ளது.

அதற்கமைய இந்த அதிகாரிகளுக்காக 9 மில்லிமீற்றர் ரக துப்பாக்கிகள் வழங்கப்படவுள்ளன எனவும் தெரிவிக்கப்படுகின்றது. வெலிக்கட, மெகசின், கொழும்பு சிறைச்சாலை, நீர்கொழும்பு, பூஸா, அங்குணகொல பெலஸ்ஸ, பண்டாரவளை ஆகிய சிறைச்சாலைகளின் அதிகாரிகளுக்கும் புலனாய்வு பிரிவின் பிரதானிகளுக்கும் துப்பாக்கிகள் வழங்கப்படவுள்ளன என தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

# தெரிவாகும் மக்கள் பிரதிநிதிகள் ஒற்றுமைக்காக பாடுபட வேண்டும்!

## மட்டக்களப்பு சர்வமதப் பேரவையின் இணைப்பாளர் கோரிக்கை

கொழும்பு, ஓக. 5

இந்த நாடாளுமன்றத் தேர்தலின் மூலம் வரும் பெறுபேற்றின் அடிப்படையில் கிடைக்கப்பெறும் ஜனநாயக முடிவுகளை மக்கள் ஏற்றுக்கொள்ளும் அதே வேளை, தெரிவாகும் மக்கள் பிரதிநிதிகள் இனவாதம், மதவாதம் கடந்து வேற்றுமையில் ஒற்றுமை காண பாடுபட வேண்டும் என தேசிய சமாதானப் பேரவையின் மட்டக்களப்பு மாவட்ட சர்வமதப் பேரவை இணைப்பாளர் ஆர்.மனோகரன் தெரிவித்தார்.

இடம்பெறும் பொதுத்தேர்தல் பற்றியும் அதற்குப் பின்னரான சமூக நிலைமை கள் குறித்தும் அவர் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் மேலும் தெரிவித்ததாவது:

'மாவட்ட சர்வமதப் பேரவை மாவட்டத்தில் இன மத நல்லிணக்கத்தினூடாக ஐக்கியப்பட்ட சமூகத்தையும் அதன்வழி அபிவிருத்தியையும் அமைதியையும் அடைந்து கொள்வதற்கு முயற்சித்து வருகின்றது.

அந்தவகையில் மக்களின் கருத்துச் சுதந்திரம், சிந்தனைச் சுதந்திரம், பேச்சுச் சுதந்திரம், மதச் சுதந்திரம் என்பனவற்றை மதித்து தேர்தல் நடவடிக்கைகளில் ஈடுபடுமாறு நாம் விழிப்புணர்வுகளை அவ்வப்போது வழங்கி வந்திருக்கின்றோம்.

ஜனநாயகத்தை பாதுகாக்கின்ற ஓர் அம்சமாக தேர்தல்கள் விளங்குகின்றன. மனித உரிமைகளின் அடிப்படையில் ஒருவருக்குள்ள விருப்பத் தேர்வையும் அதன் மூலமாகத் தெரிவாகும் மக்கள் பிரதிநிதிகளையும் குறைத்து மதிப்பிட முடியாது. அதேவேளை தெரிவாகும் மக்கள் பிரதிநிதிகள் எந்த சமூக அரசியல் பின்னணிகளைக் கொண்டிருந்தாலும் அவர்கள் இனவாதம் மதவாதம் என்பனவற்றையும் வெறுப்புணர்வுகளையும் விதைக்காமல் சிறந்த சேவையாற்ற முன்வரவேண்டும் என்பதே எதிர்பார்ப்பாகும். பிரதேசத்தில் அனைத்து மதங்கள், அனைத்து இனங்களுக்கிடையில் நீடித்து நிலைத்து நிற்கக் கூடிய சகவாழ்வுக்கான செயற்றிட்டங்களில் தங்களை அர்ப்பணித்துக்கொள்ள தெரிவாகப் போகும் மக்கள் பிரதிநிதிகள் சிரத்தை எடுக்க வேண்டும்.

உள்ளூர் சமூகங்களுக்கிடையில் சமாதானத்திற்கான வழிவகைகளைக் கட்டியெழுப்பும் சந்தர்ப்பங்கள் நிறையவே உள்ளன. பிரதேசத்தில் இன, மத முரண்பாடு களை பின்புறத்தில் நின்று தூண்டிவிட்டு அழிவுகளை ஏற்படுத்தும் அறிவீனர்களாக தெரிவாகப்போகும் மக்கள் பிரதிநிதிகள் இருந்து விடக்கூடாது என்பதே மாவட்ட சர்வமதப் பேரவையின் எதிர்பார்ப்பாகும் - என்றார். (ம)

## கண்ணீர் காணிக்கை



ஏழாலை ஆரம்ப மருத்துவ பராமரிப்பு பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி **த. திலீபன்** அவர்களின் பாசமிகு தந்தை

**இராசா தணிகாசலம்**

அவர்கள் கடந்த (01.08.2020) சனிக் கிழமை காலமான செய்தி அறிந்து கவலையடைவதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஏழாலை — ஏழாலை ஆரம்ப மருத்துவ பராமரிப்பு பிரிவு உத்தியோகத்தர்களும், ஊழியர்களும்

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 19 . 08 . 1945



மறைவு 17 . 08 . 2019

**திருமதி பூரணம் கந்தசாமி (இலக்கணம்)**

திதி: 05.08.2020

ஆண்டு ஒன்றானதோ எம்
அன்னை எமைப் பிரிந்து
அன்புடன், பணிவுடன் எம்மை வழிநடத்திய
எம் ஆருயிர்த் தெய்வமே எப்போது
காண்போம் இனிய முகம்
ஆறாத் துயரினில் தவிக்கின்றோம்
மீண்டெழுந்து வரமாட்டீர்களா அம்மா

வீரபத்திரர் கோவிலடி, சாரையடி, புலோலி தெற்கு, புலோலி / என்றும் நினைவில் கணவர், பிள்ளைகள், குடும்பத்தினர்.

## 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு 14 . 08 . 1933



இறப்பு 29 . 07 . 2018

அமரர்

**செல்லத்துரை இராசரத்தினம் (J.P)**

(ஓய்வுபெற்ற நிர்வாக உத்தியோகத்தர் - யாழ். மாநகரசபை)

திதி: அபரபக்க துதியை

கண்முன்னே வாழ்ந்தகாலம்
கனவாகிப்போய் இரண்டு ஆண்டுகள் ஆனாலும்
ஈரவிழிகள் இன்னும் காயவில்லை அப்பப்பா!

உங்கள் கரம்பிடித்து நாம் நடந்த
பாதைகள் இன்று பூசொரிகின்றன
இனிவரும் காலங்களிலும் எம்மை வழிநடத்தி
- செல்வீர்கள் என
இறைவா உங்களை வேண்டி நிற்கின்றோம்.

75/1, கண்டி வீதி, யாழ்ப்பாணம். — குடும்பத்தினர்.

இரத்தினபுரி மாவட்ட

# மேல் நீதிமன்ற தீர்ப்புக்கு எதிராக மேன்முறையீட்டு மனு தாக்கல்

இரத்தினபுரி, ஓகஸ்ட் 5

இரத்தினபுரிமாவட்டமேல்நீதிமன்றத்தால் மரண தண்டனை விதிக்கப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ள முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், இரத்தினபுரி மாவட்ட ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன வேட்பாளருமான பிரேமலால் ஜயசேகர மற்றும் சப்ரகமுவ மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் அருண நிலாந்த ஜயகொடி, காவத்தை பிரதேசசபையின்தலைவர்வஜிர தர்ஷனசில்வாஆகியமூவருக்கும் வழங்கப்பட்ட தீர்ப்பு தொடர்பில் மீள் பரிசீலனை செய்வதற்கு மேன் முறையீட்டு மனு நாளை சட்டத்தரணிகளால் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட உள்ளதாக சட்டத்தரணி டி.எம்.ஜானக சுமேத தெரிவித்துள்ளார்.

இரத்தினபுரிமுந்துவபிரதேசத்தில் அமைந்துள்ள சப்ரகமுவ மாகாண சபையின் முன்னாள் அமைச்சர் ரஞ்சித் பண்டாரவின் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.


அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்பிரேமலால்ஜயசேகரவுக்கு நீதிமன்றத்தி னால் வழங்கப்பட்ட தீர்ப்பு இறுதிதீர்ப்பு அல்ல. இந்தத் தீர்ப்புக்கு எதிராக நீதிமன்றம் மற்றும் மேல் முறையீட்டு நீதிமன்னத்தில் மனுத்தாக்கல் செய்யமுடியும். நீதிமன்றத்தில் மீள்பரிசீலனை செய்வதற்காக மேன்முறையீட்டு மனுத்தாக்கல் செய்தபின், பிணை பெறுவதற்கான விண்ணப்பப்படிவத்தை முன்வைப்பதற்கு சட்டத்தரணிகள் என்ற ரீதியில் நாம் நடவடிக்கை எடுப்போம் என்று சட்டத்தரணிடி.எம்.ஜானகசுமேதமேலும் தெரிவித்துள்ளார்.

இதன்போது நடைபெறவுள்ள நாடாளுமன்றபொதுத்தேர்தலில் பிரேமலால் ஜயங் வெற்றி பெற்றால் நாடாளுமன்றம் செல்ல முடியுமா என சட்டத்தரணி டி.எம். ஜானகசுமேதவிடம்ஊடகவியலாளர் ஒருவர் கேள்வி எழுப்பினார். இதற்கு பதிலளித்த சட்டத்தரணி டி. எம். ஜானக சுமேத, நாடாளுமன்றகொள்கைச்சட்டத்தில்சத்தியப்பிரமாணம் செய்வது குறித்து குறிப்பிடப்படவில்லை. மனுத் தாக்கல் செய்தபின் பிரேமலால் ஜயசேகரசாதாரணசிறைக்கைதி என்றே கருத முடியும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

(ரி3)

# வாக்காளர் அட்டை பணம் கொடுத்து பெற முயன்ற இருவர் கைது!



கொழும்பு, ஓக. 5

பேருவளைப் பகுதியில், உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகளைப் பணம்கொடுத்துப்பெற்றுக்கொள்ள முயன்ற இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த நபர்கள் 5,000 ரூபா பணம் கொடுத்து வாக்காளர்அட்டைகளைப் பெற்றுக்கொள்ளமுற்பட்ட வேளை கைது செய்யப்பட்டுள்ளனர்.

மேலும் இருவர் தப்பிச் சென்றுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மேலும், இவர்கள் பயன்படுத்திய கார் ஒன்றும் பொலிஸாரினால் பறிமுதல்செய்யப்பட்டுள்ளது. (ரி2)

# பங்குச்சந்தை இன்று பூட்டு

கொழும்பு, ஓக. 5

கொழும்பு பங்குச் சந்தை இன்று பிற்பகல் 12.30 மணிக்கு மூடப்படவுள்ளது.

இன்றுநடைபெறவுள்ள நாடாளுமன்றத்தேர்தல் காரணமாகவே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது என்று கொழும்பு பங்குச் சந்தையின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)

## இலங்கைக்கு...

தகவலின் அடிப்படையில் மண்டபம் கடற்கரைப் பகுதியில்சோதனைகள் தீவிரப்படுத்தப்பட்டிருந்தன. கடற்கரையில் சந்தேகத்துக்கு இடமாக நடமாடிய ஒருவரைச் சோதனையிட முயன்றபோது, அந்த நபர் கையில் இருந்த மூடையை கடலில் வீசிவிட்டுத் தப்பியோட முயன்றுள்ளார். சந்தேகநபரை மடக்கிப் பிடித்த வனத்துறை அதிகாரிகள், கடலில் வீசப்பட்ட மூடையையும் கைப்பற்றியுள்ளனர். அந்த மூடைக்குள் உயிருடன் கடலட்டைகள் இருந்தன என்று வனத்துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்டவர் மண்டபம் பகுதியைச் சேர்ந்த 17 வயதுடையவர் என்றும், இந்தக் கடலட்டைகள் இலங்கைக்குக் கடத்தப்படவிருந்தன என்றும் விசாரணையில் தெரியவந்துள்ளது என்று வனத்துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

கடத்தலில் தொடர்புடைய ஏனையோரைக் கைது செய்யும் நடவடிக்கைகளை அந்த நாட்டுப் பொலிஸார் ஆரம்பித்துள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஏ)

வேலைக்கு ஆள் தேவை
கிறில் வகை சார்ந்த வார்ப்பு வேலை தெரிந்தவர்கள் உடனடி தேவை.
வேலைநாள்: வார இறுதிநாள் (சனி/ஞாயிறு)
076 600 3688

## கொரோனா...

தார அமைச்சு தெரிவித்தது. அதன்படி கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கை 2 ஆயிரத்து 834 பேராக உயர்ந்துள்ளது.

தொற்றுக்குள்ளாகி 299 பேர் மருத்துவமனைகளில் சிகிச்சை பெறுகின்றனர். கொரோனாதம் தொற்றுச் சந்தேகத்தில் 69 பேர் மருத்துவமனைகளில் கண்காணிப்பில் உள்ளனர். கொரோனா தொற்றுக்குள்ளான 2 ஆயிரத்து 524 பேர் சிகிச்சை பெற்று வீடு திரும்பியுள்ளனர். இதுவரை கொரோனாத் தொற்றால் நாட்டில் 11 பேர் உயிரிழந்துள்ளனர் என்று என்று சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. (து)

## குளவி...

கொட்டுக்கு இலக்காகிய முதியவர் உடனடியாகப் பதவியா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். அங்கிருந்து மேலதிக சிகிச்சைக்காக வவுனியா பொது மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார்.

அவர் சிகிச்சை பலனின்றி நேற்று உயிரிழந்தார். இந்தச் சம்பவம் தொடர்பாக கெப்பிற்றிகொல்லாவை பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

(எ-110)

ஓம் விராட் விஸ்வப் பிரமனே நமஹ

## மரண அறிவித்தல்



| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 16.05.1932 | 04.08.2020 |

### திருமதி பவளம் பொன்னுத்துரை


முல்லைத்தீவு, தண்ணீரூற்றை பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணம், நாச்சிமார் கோவிலடி, கே.கே.எஸ் வீதி, இலக்கம் 678/1ஐ வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பவளம் பொன்னுத்துரை நேற்று (04.08.2020) செவ்வாய்க்கிழமை சிவபதமடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை இராசம்மா தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்ற இளையதம்பி பாக்கியம் தம்பதிகளின் அன்பு மருமகளும், இளையதம்பி பொன்னுத்துரையின் பாசமிகு மனைவியும், மனோரதி (ஓய்வுபெற்ற பிரத்தியேக உதவியாளர் - ஸ்ரீலங்கா ரெலிகொம்), காலஞ்சென்ற சூரியதாசன் (ஜேர்மனி), ஜெயரதி (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும், பேராசிரியர், இ.நந்தகுமாரன் (முன்னாள் வவுனியா வளாக முதல்வர், யாழ் பல்கலைக்கழகம்), மாலதி (ஜேர்மனி), தட்சணாமூர்த்தி (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமியும், Dr.சந்தோஷ், Eng.விவேக் (ஜேர்மனி), சுவீற்றா (ஜேர்மனி), சூரியா (ஜேர்மனி), மேனுஜா (ஜேர்மனி), அபிஷேக் (ஆசிரியர், சுவிஸ்), Eng.சங்கீத் (சுவிஸ்), பிரியதர்சினி (அபிவிருத்தி உத்தியோகத்தர், பிரதேச செயலகம், யாழ்ப்பாணம்), Dr.யாழினி (ஜேர்மனி), நீல்ஸ் (ஜேர்மனி) ஆகியோரின் பேர்த்தியும், பிரியா மயூரா (ஜேர்மனி), யுவதேவ் (ஜேர்மனி) ஆகியோரின் பூட்டியும் காலஞ்சென்றவர்களான தங்கராசா, சோமசுந்தரம், கனகம்மா, நவரத்தினம், சிவபாக்கியம், செல்லம்மா, ஆகியோரின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.08.2020) பிற்பகல் 3.00 மணியளவில் கே.கே.எஸ் வீதியில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பையன்மணல் இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்
021 221 6244, 0776953077, 0776677840
சுவிஸ் - 41783212253, ஜேர்மனி - 4915758433498

## மரண அறிவித்தல்



| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 02.08.1931 | 04.08.2020 |

### வைரமுத்து கனகரட்ணம்

(ஓய்வுபெற்ற தொழில்நுட்ப உத்தியோகத்தர் - T.O - RDA)

ஊர்காவற்றுறை கரம்பன் மேற்கைப் பிறப்பிடமாகவும், கொக்குவில் கிழக்கு கோணாவளை ஒழுங்கையை வசிப்பிடமாகவும் கொண்ட வைரமுத்து கனகரட்ணம் நேற்று (04.08.2020) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் வைரமுத்து - நாகமுத்து தம்பதியினரின் மகனும், காரைநகர், மாப்பாணவூரி நல்லதம்பி பார்வதிப்பிள்ளை தம்பதியரின் மருமகனும் சிவபாக்கியத்தின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம், லீலாவதி மற்றும் சொர்ணம்மா, காலஞ்சென்றவர்களான இராமகிருஸ்ணன், பாலகிருஸ்ணன் ஆகியோரின் சகோதரரும் காலஞ்சென்றவர்களான திலகவதி, சிவலிங்கம், முத்தையா மற்றும் சரஸ்வதி (அவஸ்திரேலியா), காலஞ்சென்றவர்களான நேசம்மா, லீலாவதி, Dr. குணரட்ணம் (சிங்கப்பூர்), கமலாவதி, சிவராணி ஆகியோரின் மைத்துனரும் மனோகரன் (இந்தியா), கல்யாணி, குணசேகரன் (கனடா), ஞானசேகரன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் ரேணுகா (இந்தியா), உருத்திரேஸ்வரன் (ஆசிரியர்), பூர்வகல்யாணி (கனடா), சாவித்திரிதேவி (லண்டன்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் துளசிகா, சாம்பவி, சனாதனன், திவாகர் (லண்டன்), அபிநயா (லண்டன்) ஆகியோரின் அன்புப் பேரனு மாவார்.

அன்னாரின் பூதவுடலுக்கு நாளை (06.08.2020) வியாழக்கிழமை காலை 07.00 மணிக்கு இறுதிக்கிரியைகள் நடைபெற்று கொக்குவில் இந்துமயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

40, கோணாவளை லேன்,
கொக்குவில் கிழக்கு, கொக்குவில்

தகவல்:
குடும்பத்தினர்

## பதினைந்தாம் ஆண்டு நினைவஞ்சலி

### திருமதி அருந்தவஈஸ்வரி இரகுநாதன்



பூவுலகில்
07.04.1919

மோட்சத்தில்
22.07.2005

திதி : ஆடிமாத அபரபக்க துதியை
05.08.2020

பதினைந்து ஆண்டுகள் பறந்துவிட்டது
சீராட்டி தாலாட்டி, வளர்த்து, கல்வி ஊட்டி என்னை ஆளாக்கிய
அம்மாவே உங்கள் அன்பு முகம் காணாது
நித்தமும் தவிக்கும் அன்பு மகள்

செல்வி செந்திற்செல்வம் இரகுநாதன்
(இளைப்பாறிய அதிபர்)

உடையார் வீடு,
சாங்கரத்தை,
வட்டுக்கோட்டை.

உற்றார், உறவினர்,
நண்பர்கள்

## மரண அறிவித்தல்

### அருட்சகோதரி மேரி இயுஜின் சோசை தி.கு



வங்காலையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், யாழ். திருக்குடும்ப சபையைச் சேர்ந்தவருமான அருட்சகோதரி மேரி இயுஜின் சோசை தி.கு (04.08.2020) செவ்வாய்க்கிழமை இறைபதம் இணைந்து விட்டார்.

அன்னாரின் இறுதிப்பயணத் திருப்பலி (04.08.2020) செவ்வாய்க்கிழமை பி.ப. 04.30 மணிக்கு பாஷையூர் திருக்குடும்ப கன்னியர் இல்லத்தில் நடைப்பெற்று பின்னர், யாழ். கொஞ்சேஞ்சி மாதா சேமக் காலையில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

121,பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல் :
அருட்சகோதரி தியோவ்வின் குருஸ்
மாகாணத் தலைவி.

ES Printers
357, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
021 492 7471, 021 492 7472
esprintersjaffna@gmail.com

## 3ஆம் ஆண்டு நினைவில்...



### விஜயரட்ணம் சுதாகரன்

தோற்றம்
12.08.1967

மறைவு
09.08.2017

திதி: ஆடித் தேய்பிறை துதியை


ஈன்றவள் மடியில் தனியே உதித்து
ஈசன் அடியை விரைந்தே பிடித்த
நேசன் நினைவில் இறையைத்
- துதித்தோம்
சிவமே சேர்ந்தோனுக்கு
- அகமுருக அஞ்சலிகள்

பழைய வீதி,
கோப்பாய்.

தாய், மனைவி,
பிள்ளைகள்

## மரண அறிவித்தல்

### சபாபதி யோகராசா



| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 23.01.1950 | 04.08.2020 |

வேலணை வடக்கு 5ஆம் வட்டாரம் ஆரவ்யலை பிறப்பிடமாகவும், சோழாவத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட சபாபதி யோகராசா நேற்று (04.08.2020) செவ்வாய்க்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் பாக்கியலெட்சுமியின் அன்புக் கணவரும், வானதி காலஞ்சென்ற சங்கீதா மற்றும் லிதீபன், சிந்துஜா (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்ற சபாபதி - அன்னம் தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற பழனியப்பா - மீனாட்சி தம்பதிகளின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற கமலநாதன், சண்முகராசா, பவராசா, வரதராசா மற்றும் கமலகுமாரி, கௌசலா, பகீரதன் ஆகியோரின் அன்புச் சகோதரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.08.2020) புதன்கிழமை காலை 08.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக 10.00 மணியளவில் சாட்டி இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப் படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.

# மருந்துப் பொருள்களின் விலை குறைப்புக்கு மருந்தாக்கல் நிறுவனங்கள் இணக்கம்

**கொழும்பு, ஓக. 5**

**மருந்துப்பொருள்களின் சில்லறை விலையை அதிகரித்து விற்பனைசெய்த குற்றச்சாட்டுக்காக இறக்குமதி அனுமதிப்பத்திரங்கள் ரத்துச் செய்யப்படும் கடிதம் அனுப்பப்பட்டுள்ள ஐந்து மருந்தாக்கல் நிறுவனங்களும் இம்மாதம் முதலாம் திகதியில் இருந்து மருந்துப் பொருள்களின் விலையைக் குறைத்து விற்பனை செய்ய முன்வந்துள்ளன.**

இதன்படி கல்சிவிட்டா 50இன் விலை 800 ரூபாவில் இருந்து 661 ரூபா 30சதமாகவும், ரிவோட்ரில்(2 மில்லிகிராம்) 1801 ரூபாவில் இருந்து 1608 ரூபா 75 சதமாகவும் விற்பனை செய்யப்படவுள்ளன. இந்த நிலையில் இந்த நிறுவனங்களுக்கு அனுப்பப்பட்டுள்ள அனுமதியை ரத்துச்செய்யும் கடிதங்கள் திரும்பப் பெறப்படாது. ஏற்கனவே முன்னெடுக்கப்பட்டுள்ள சட்ட நடவடிக்கைகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படும். இந்த நிறுவனங்கள் கூறியுள்ளமையைப் போன்று மருந்துப் பொருள்களின் விலை யைக் குறைத்து விற்பனை செய்கின்றனவா என்பதைப் பரீட்சிக்க வேண்டியுள்ளது என தேசிய மருந்தாக்கல் ஒழுங்கமைப்பு அதிகார சபையின் தலைவர் அசித்த டி சில்வா தெரிவித்துள்ளார். (ரி3)

## கொழும்பில் மற்றொரு புதிய துறைமுக நகரம்

கொழும்பு, ஓக.5

கொழும்பு துறைமுக நகரத்துக்கு அருகிலுள்ள கடற்பரப்பில் மண்மேட்டை உருவாக்கி மற்றொரு புதிய துறைமுக நகரத்தை நிர்மானிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

துறைமுக நகரத்தின் பணிகளை இவ்வருடத்தின் இறுதிக்குள் நிறைவுசெய்வதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளதாக நகர அபிவிருத்தி அமைச்சு தெரிவித்துள்ளது.

ஆகவே, புதிதாக நிர்மாணிக்கப்படவுள்ள துறைமுக நகரத்தின் பணிகளைத் துரிதப்படுத்துவதற்கான ஆரம்பகட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இதனால், கொழும்பில் புதிதாக ஒரு நிலப்பரப்பு தோற்றம் பெறுவதோடு துறைமுக நகரம் மற்றும் புதிய துறைமுக நகர அபிவிருத்தி ஊடாக அதிக தொழில் வாய்ப்புக்களைப் பெற்றுக் கொள்ள முடியும் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது. அத்துடன் வெள்ளவத்தை தொடக்கம் பத்தரமுல்லை வரையிலான படகு ஊடான போக்குவரத்து சேவையை நவீனமயப்படுத்தவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (ரி2)

## கைக்குண்டு மீட்பு

கம்பஹா, ஓக.5

கம்பஹா ஒருதொட்ட பகுதியில் தனியார் காணி ஒன்றில் கைக்குண்டு ஒன்று மீட்கப்பட்டுள்ளது. மீட்கப்பட்ட கைக்குண்டு பொலிஸ் விசேட அதிரடிப் படையினரால் செயலிழக்கச் செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை கிரிபத்கொடை பெரேரா மாவத்தையில் அமைந்துள்ள வீடொன்றின் முற்றத்தில் காணப்பட்ட குப்பையில் பயிற்சிக்கு பயன்படுத்தப்படும் மோட்டார் குண்டுகள் மீட்கப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ரி1)

## ஐம்பொன் முருகன் சிலையை கடத்தி விற்க முற்பட்டவர் கைது



மட்டக்களப்பு, ஓக.5

திருகோணமலையிலிருந்து மட்டக்களப்புக்கு சட்டவிரோதமாக முருகன் சிலை ஒன்றைக் கடத்தி விற்பனை செய்ய முயற்சித்த, பதவியில் இருந்து இடைநிறுத்தப்பட்ட பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்றுள்ளது என்று மட்டக்களப்பு பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

பொலிஸாருக்குக் கிடைத்த இரகசிய தகவல் ஒன்றுக்கமைய சம்பவதினமான நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை இரவு திருகோணமலையில் இருந்து மட்டக்களப்புக்கு சட்டவிரோதமாக ஐம்பொன்னிலான முருகன் சிலையைக் கடத்தி வந்து விற்க முயன்றபோது சந்தேகநபரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கைதுசெய்யப்பட்டவர் பொலிஸ் உத்தியோகத்தில் இருந்து இடைநிறுத்தப்பட்ட திருகோணமலை முள்ளிப்பொத்தானையைச் சேர்ந்த 54 வயதுடையவர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கைப்பற்றப்பட்ட சிலை புதையலில் இருந்து கிடைத்தது எனவும் அதனை நண்பர் ஒருவர் தந்தார் எனவும் சிலையை விற்பதற்காக மட்டக்களப்புக்கு வந்தார் எனவும் கைதுசெய்யப்பட்ட நபர் பொலிஸாரிடம் தெரிவித்துள்ளார். அவரை நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ரி1)

## வாகன விபத்தில் இருவர் உயிரிழப்பு

மாத்தறை, ஓக.5

மாத்தறை பகுதியில் இடம்பெற்ற வாகன விபத்தில், பெண்கள் இருவர் உயிரிழந்துள்ளனர். மாத்தறையில், அப்பரெக்க பகுதியில், ஆடைத்தொழிற்சாலைக்குச் சொந்தமான பஸ் ஒன்றுடன் கார் மோதியதாலேயே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ரி1)

## இலங்கையர்களை அழைத்து வருவது தற்காலிகமாக இடைநிறுத்தம்

கொழும்பு, ஓக.5

வெளிநாடுகளிலுள்ள இலங்கையர்களை நாட்டுக்கு அழைத்துவரும் நடவடிக்கைகள் மீண்டும் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளன. இன்று நடைபெறவுள்ள பொதுத் தேர்தலை முன்னிட்டு இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. (ரி2)



## இன்றைய நாள்

**மேடம்:** பேச்சினால் சில விஷயங்களை முடிக்கும் நாள். உழைப்பிற்குப் பாராட்டு கிடைக்கும். ஒற்றுமையால் வீடு களை கட்டும். வியாபாரத்தில் வாடிக்கையாளர்களின் திருப்தியைப் பெறுவீர்கள்.

**இடபம்:** கடந்த நாள்களின் வருத்தங்கள் மறையும் நாள். குடும்பத்தினருடன் சுபநிகழ்ச்சி பற்றி பேசுவீர்கள். புதியவரின் நட்பால் உற்சாகம் வரும். செலவுகளைக் குறைக்க திட்டமிடுவீர்கள். பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பீர்கள்.

**மிதுனம்:** செலவினங்கள் அதிகரிக்கும் நாள். மற்றவர்கள் உங்களைத் தவறாகப் புரிந்து கொள்ளக்கூடும். லேசான வருத்தமளிக்கும் செய்தி வரும். பணிகளில் மிகுந்த கவனம் தேவை.

**கடகம்:** திட்டமிடாத செலவுகள் வரும் நாள். பிறரிடம் வாக்குவாதம் செய்ய வேண்டாம். மேலதிகாரி உங்களை தவறாக புரிந்து கொள்ள வாய்ப்புண்டு. கடவுள் நம்பிக்கை அதிகரிக்கும். சிலருக்குப் பிரச்சினைகள் தீரும்.

**சிம்மம்:** மாறுபட்ட நாள். உங்களுக்கு கீழே பணிபுரிபவர்கள் மதிப்பார்கள். அலுவ லகத்தில் இழந்த உரிமைகள் மீளும். தொழிலில் சிறு மாற்றம் உண்டாகும். மனக்கலக்கங்கள் தீரும்.

**கன்னி:** பிரச்சினைகளை சாமர்த்தியமாகச் சமாளிக்கும் நாள். முயற்சியால் சில விஷயங்கள் வெற்றியாகும். பிள்ளைகளின் எதிர்காலம் குறித்து தேவையின்றி கவலைப்படுவீர்கள்.

**துலாம்:** அதிகம் உழைக்க வேண்டியிருக்கும் நாள். நிலுவைத் தொகைகள் வசூலாகும். அலுவலகத்தில் உங்களின் புகழ் கூடும். திட்டமிட்ட செயலை வெற்றிகரமாக முடிப்பீர்கள்.

**விருச்சிகம்:** தம்பதி இடையே கருத்து வேறுபாடு வந்து நீங்கும் நாள். பழைய கடனை நினைத்து கவலை ஏற்படும். வியாபாரத்தில் போட்டிகளைச் சுலபமாகச் சமாளிப்பீர்கள்.

**தனுசு:** பணியில் விழிப்புடன் செயல்பட வேண்டிய நாள். குடும்பத்தாரின் ஒத்துழைப்பு கிடைக்கும். நண்பர்களுக்காக விட்டுக் கொடுப்பீர்கள். தைரியமாக முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள்.


**மகரம்:** புதியவர்களின் நட்பு கிடைக்கும் நாள். வியாபாரத்தில் எதிர்பார்த்த லாபம் வரும். பணியாளர்கள் சிறு ஏமாற்றத்தைச் சந்திப்பர். வெளியூரிலிருந்து சுபச்செய்தி செய்தி வரும்.

**கும்பம்:** குடும்பத்தினரின் தேவைகளை நிறைவேற்றும் நாள். பணவரவு திருப்தி தரும். பெண்கள் பாடுபட்டு இலட்சியத்தை அடைவர்.

**மீனம்:** எதிர்பார்ப்புகள் நிறைவேறும் நாள். உடன்பிறந்தவர்கள் உதவுவார்கள். விசேஷங்களை முன்னின்று நடத்துவீர்கள். வியாபாரத்தில் பழைய வாடிக்கையாளர்கள் நாடி வருவார்கள்.

## முல்லைத்தீவு






முல்லைத்தீவு மாவட்டத்துக்கான வாக்குப்பெட்டிகள் முள்ளிய வளை வித்தியானந்தா கல்லூரியில் இருந்து வாக்குச்சாவடிகளுக்கு நேற்று காலை எடுத்துச் செல்லப்பட்டன. (ஐ)

## மன்னார்







மன்னார் மாவட்டத்துக்கான வாக்குப்பெட்டிகள் மன்னார் புனித சவேரியார் ஆண்கள் தேசிய கல்லூரியிலிருந்து வாக்குச்சாவடிகளுக்கு நேற்றுக் காலை எடுத்துச் செல்லப்பட்டன. (ஐ-60,213)

# விடுமுறை வழங்காத நிறுவனங்களுக்கு எதிராக துரித நடவடிக்கை

## *தாமதிக்காது முறைப்பாடு வழங்குமாறு மஹிந்த தேசப்பிரிய கோரிக்கை*

கொழும்பு, ஓக 5

வாக்களிக்கச் செல்வதற்கு விடுமுறை வழங்காத நிறுவன அதிகாரிகள் மற்றும் கடை உரிமையாளர்களுக்கு எதிராக கடுமையான நடவடிக்கைகள் விரைவாக எடுக்கப்படும் என தேர்தல்கள் ஆணைக் குழுவின் தலைவர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.



இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்;

புறக்கோட்டை பகுதியில் சிறுகடைகளில் தொழில்புரியும் ஊழியர்கள் இன்று இடம்பெறும் பொதுத்தேர்தலுக்கு வாக்களிக்கச் செல்வதற்கு விடுமுறை வழங்கப்படவில்லை என்ற முறைப்பாடு முன்வைக்கப்பட்டுள்ளது. இவ்வாறான செயற்பாடு ஜனநாயகத்துக்கும் தேர்தல் சட்டத்திற்கும் முரணானது.

தனியார் நிறுவனங்களுக்கு வாக்களிப்பு தினத்தில் விடுமுறை வழங்குவது தொடர்பில் உள்ள சிக்கல் நிலையைக் கருத்திற்கொண்டு தூர அடிப்படையில் வாக்களிப்பதற்கு விடுமுறை வழங்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டது. இவ்விடயம் தொடர்பில் ஊடகங்கள் வாயிலாகவும் தெளிவுபடுத்தப்பட்டது.

இதுவரை விடுமுறை கிடைக்கப் பெறாத ஊழியர்கள் தேர்தல்கள் ஆணைக்குழுவிலோ அல்லது தொழிற்றுறை ஆணைக்குழுவிலோ விரைவாக முறைப்பாடு செய்யுங்கள். இவ்வாறான நிறுவன அதிகாரிகள் மற்றும் கடை உரிமையாளர்களுக்கு எதிராக கடுமையான நடவடிக்கை விரைவாக எடுக்கப்படும் - என்றார். (ரி3)

# வாக்குப்பெட்டிகள் விநியோகம்

## யாழ்ப்பாணம்







யாழ்ப்பாண மாவட்டத்துக்கான வாக்குப்பெட்டிகள் யாழ். மத்திய கல்லூரியில் இருந்து வாக்குச் சாவடிகளுக்கு நேற்றுக் காலை எடுத்துச்செல்லப்பட்டன. நெடுந்தீவுக்கான வாக்குப்பெட்டிகள் கடற்படையின் உதவியுடன் ஹெலிகொப்டர் மூலம் எடுத்துச் செல்லப்பட்டன. (ஐ-106-111)

## கிளிநொச்சி











கிளிநொச்சி மாவட்டத்துக்கான வாக்குப்பெட்டிகள் நேற்றுக் காலை கிளிநொச்சி பழைய கச்சேரியிலிருந்து வாக்குச்சாவடிகளுக்கு எடுத்துச் செல்லப்பட்டன. (ஐ-6-214)

## வவுனியா



வவுனியா மாவட்டத்துக்கான வாக்குப்பெட்டிகள் வவுனியா மாவட்டச் செயலகத்தில் இருந்து வாக்குச்சாவடிகளுக்கு நேற்றுக் காலை எடுத்துச்செல்லப்பட்டன. (ஐ-110)





# இம்முறையே தேர்தல் காலத்தில் வன்முறைகள் குறைவு

## மஞ்சுள கஜநாயக்க தெரிவிப்பு

**கொழும்பு, ஓக.5**

**இன்று நடைபெறவுள்ள பொதுத்தேர்தலுக்காக மேற்கொள்ளப்பட்ட இதுவரையான பிரசாரக் காலத்தில், ஜனாதிபதி, பிரதமர், எதிர்க்கட்சித் தலைவர் ஆகியோர் எந்த சந்தர்ப்பத்திலும் பொலிஸாருக்கோ, தேர்தல் ஆணைக்குழுவுக்கோ, அரச அதிகாரிகளுக்கோ அழுத்தங்களைக் கொடுக்கவில்லை என்று தேர்தல் வன்முறை கண்காணிப்பு மத்திய நிலையத்தின் தேசிய ஒருங்கிணைப்பாளர் மஞ்சுள கஜநாயக்க தெரிவித்துள்ளார்.**

கொழும்பில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது; இந்த நிலைமையானது 5 ஆண்டுகளுக்கு முன்னர் காணப்பட்ட நிலைமையைவிட முற்றிலும் மாறுபட்டது. கடந்த காலங்களில் நடைபெற்ற தேர்தல்களின் போது இவர்கள் மூவர் மாத்திரமல்ல, உயர்மட்ட அரசியல்வாதிகளும் அதிகாரிகளுக்கு அழுத்தங்களை கொடுத்தனர். தெற்காசிய நாடு என்ற வகையில் அதிகாரிகளுக்கு அழுத்தங்கள் இல்லாது அதிகாரிகள் தேர்தலை முன்னெடுத்துச் செல்ல இம்முறை தேர்தலில் இடமளிக்கப்பட்டது. இதனடிப்படையில், வாக்காளர்கள் தமது விருப்பத்தைத் தெரிவு செய்ய சந்தர்ப்பம் கிடைத்துள்ளது. அத்துடன், தேர்தல் கடந்த தேர்தல் காலங்களுடன் ஒப்பிடும் போது இம்முறை வன்முறைகள் குறைவாகக் காணப்படுகின்றன - என்றார். (ரி2)

# அங்கொட லொக்கா உயிரிழப்பு உறுதிப்படுத்தப்படவில்லை

## இலங்கையிலுள்ள இந்திய தூதரகம் அறிவிப்பு

திட்டமிட்ட குற்றச்செயல்களுடன் தொடர்புடைய அங்கொட லொக்கா என்ற மத்துமகே லசந்த சந்தன பெரேரா இந்தியாவில் உயிரிழந்துள்ளார் என அந்த நாட்டு ஊடகங்கள் செய்திகளை வெளியிட்டுள்ளபோதிலும், அந்த நாட்டின் அரசாங்க நிறுவனங்கள் ஊடாக அது தொடர்பில் இதுவரை உத்தியோகபூர்வமாக உறுதிப்படுத்தப்படவில்லை என்று இலங்கையிலுள்ள இந்திய தூதரகம் தெரிவித்துள்ளது.

அங்கொட லொக்கா கோயம்புத்தூரில் கடந்த மாதம் 3 ஆம் திகதி உயிரிழந்தார் என அந்த மாவட்டத்தின் பொலிஸார் நேற்று உறுதிப்படுத்தியுள்ளதாக இந்திய ஊடகங்கள் செய்திகளை வெளியிட்டுள்ளன. சம்பவம் தொடர்பில் இலங்கை பெண்ணொருவர் உள்ளிட்ட இரண்டு பெண்களும், ஆண் ஒருவரும் மதுரையில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளனர் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

பெயர் மாற்றம் செய்யப்பட்டு தலைமறைவாகியுள்ளமை தொடர்பான தகவல்களும் தமக்கு கிடைக்கப்பெறவில்லை என்று அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். இவ்வாறான தகவல்கள் தங்களுக்கு கிடைக்கப்பெறும் பட்சத்தில் அந்த தகவல்கள் ஊடாக அடுத்த கட்ட சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றார். (ரி2)

(தொடர்புடைய செய்தி 14 ஆம் பக்கம்)

# விபத்தில் இரு பெண்கள் சாவு

மாத்தறை மாவட்டம், திஹகொட பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அபரெக்க பிரதேசத்தில் நேற்றுக் காலை இடம்பெற்ற வாகன விபத்தில் பெண்கள் இருவர் உயிரிழந்துள்ளனர்.

மாத்தறையிலிருந்து யட்டியன பிரதேசம் நோக்கிப் பயணித்துக்கொண்டிருந்த ஆடைத்தொழிற்சாலை ஊழியர்களை ஏற்றிய வானும், எதிர்த்திசையில் பயணித்த ஆடைத்தொழிற்சாலை ஊழியர்களை ஏற்றிய தனியார் பஸ்ஸும் நேருக்குநேர் மோதி இவ்விபத்து ஏற்பட்டுள்ளது எனப் பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. விபத்தில் வானில் பயணித்த ஆடைத் தொழிற்சாலை ஊழியர்கள் 5 பேரும், பஸ்ஸில் பயணித்த ஆடைத் தொழிற்சாலை ஊழியர்கள் 2 பேரும் படுகாயங்களுடன் மாத்தறை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர். இவர்களில் வானில் பயணித்த இருவர் உயிரிழந்துள்ளனர். 35, 43 வயதுடைய பெண்களே இவ்வாறு உயிரிழந்துள்ளனர். விபத்துச் சம்பவம் தொடர்பில், வான் மற்றும் பஸ் சாரதிகள் இருவரும் கைதுசெய்யப்பட்டுள்ளனர். சம்பவம் தொடர்பில் திஹகொட பொலிஸார் விரிவான விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-22)

# இலங்கையில்....

(தொடர்ச்சி)





7. ஆன்மீக முகாம்கள் வெளி உலகங்களைக் கைவிட்டு தினசரி பிரச்சனைகளிலிருந்து விடுதலை பெற்று படிப்பு, தியானம் மற்றும் ஆழ்ந்த சிந்தனையில் மட்டும் கவனம் செலுத்த நடாத்தப்படுபவை ஆன்மீக முகாம்களாகும்.
8. ஞான யக்னம் சின்மயா மிஷன் சுவாமிகள் மற்றும் பிரம்மச்சாரிகளால் ஐந்து தொடக்கம் ஏழு நாட்கள் வரை நடாத்தப்படும் வேதாந்த போதனைகள் ஞானயக்னம் எனப்படும்.
9. பாடசாலைகள் தோறும் விழுமியக்கல்வி நிகழ்ச்சித் திட்டம் என்பவற்றை நடைமுறைப்படுத்துதல்.
10. ஸ்வராஞ்சலி சின்மய ஸ்வராஞ்சலி என்பது சின்மயா மிஷனின் இசைப்பிரிவாகும். இந்திய மரபு சார் பக்தி இசையின் உன்னதத்தை ஆராய்வதும், ஸ்வராஞ்சலி குழுவின் செயற்பாடுகளாகும்.
11. இவை தவிர பூசைகள் , பஜனைகள், இல்லம் தோறும் மஹாலக்ஷ்மி பூசை வேத மந்திர உச்சாடனம் போன்ற செயற்பாடுகளும் சின்மயா மிஷனால் நடாத்தப்படுகின்றன இவ்வாறு தொட்டிலிலிருந்து முதுமைவரை ஒருவரின் வாழ்வின் அனைத்து பருவங்களிலும் ஆன்மிக மறுமலர்ச்சிக்குத் துணை நிற்கின்றது சின்மயா மிஷன்.

உலகம் முழுவதிலுமுள்ள தனிமனிதர்களின் அகமாற்றத்தை வேதாந்த ஞானம், ஆன்மிகப்பயிற்சி, தன்னலமற்ற சேவை என்பவற்றின் மூலம் ஏற்படுத்தி அவர்களை சமூகத்திற்கு ஆக்கபூர்வமான, செயற்திறனுடையவர்களாக மாற்றியமைத்து "அதிகமானவர்களுக்கு அதிகமான நேரம் அதிக சந்தோஷத்தைத் தருவது" என்கின்ற மிஷனின் கொள்கையை மெய்ப்பித்து நிற்கின்றது சின்மயா மிஷன். சின்மய மிஷனின் ஸ்ரீ பக்த ஹனுமான் ஆலயம் உலகப் புகழ் பெற்றதாக விளங்கு கின்றது.

எழில் கொஞ்சும் பசுமைகள் சூழ்ந்தி ருக்க மலைக்குன்றின் உச்சியில் ஸ்ரீ ஹனுமான் கூப்பிய கரங்களோடு நம்மை வரவேற்று நிற்கும் அற்புதத் தோற்றம் பார்வையிட வருவோரைப் பணிந்திட வைக்குமெனில் பக்தர்களின் நிலை எம்மாத்திரம்? பல ஏக்கர் நிலப்பரப்பில் ஆச்சிரமம், சின்மயா வாணி புத்தக சாலை, அன்னபூரணி உணவகம், முந்நூறு பேர்வரை அமர்ந்து ஆன்மீக நிகழ்வுகளில் பங்குபெறும் கேட்போர் கூடம், விருந்தினர் தங்கிச்செல்லும் விடுதி ஆகியன ஆலயத்துக்கு அணி சேர்த்து பக்தர்கள் அதை நாடிவர வழியமைக்கின்றன.

ஸ்ரீ பக்த ஹனுமான் ஆலயத்தில் பிரதி ஞாயிற்றுக்கிழமைகளில் சின்மயா மிஷனின் பாலவிஹார் செயற்பாடான அறநெறிப் பாடசாலை நடாத்தப்படுகிறது. இதில் 80 முதல் 120 மாணவர்கள் வரை கல்வி பயின்று வருகின்றார்கள். அம்மாணவர்களுக்குச் சீருடை, காலைச் சிற்றுண்டி, தேனீர், மதிய உணவு , அப்பியாசப் புத்தகங்கள் என்பன இலவசமாக வழங்கப்படுகிறது.

அத்துடன் வாராந்த ஆன்மீக வகுப்புகளும் இங்கு இடம் பெற்று வருகிறது. இதுதவிர இங்கு சமூகப் பணிகளையும் இலங்கை சின்மயா மிஷன் ஆற்றி வருகின்றது. இராம்போத சின்மயா மிஷனில் இயங்கி வரும் முன்பள்ளிச் செயற்பாடான எமது சின்மயா பாலர் பாடசாலையில் 50 முதல் 60 மாணவர்கள் வரை கல்வி பயின்று வருகின்றார்கள். இவர்களுக்கு மாதாந்த கட்டணமாக ரூ 200 மாத்திரமே அறவிடப்படுகின்றது. மாணவர்களுக்கான சீருடை, பசும்பால், ஆரோக்கியமான உணவு ஒவ்வொரு மாதமும் போக்குவரத்திற்காக ரூபா 1000 இலவசமாக சின்மயா மிஷனால் வழங்கப்படுகிறது. மேலும் முதலாம் தரத்திற்கு செல்லும் மாணவர்களுக்கு புத்தகப்பை, பாதணி என்பன இலவசமாக வழங்கப்படுகிறது.

புலமைப்பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள்கள் கொத்மலை மற்றும் நுவரெலியா கல்வி வலயங்களைச் சேர்ந்த பாடசாலைகளுக்கு வழங்கப்படுகிறது. ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமை மற்றும் பௌர்ணமி தினங்களில் ஆலயத்திற்கு வரும் பக்தர்கள் அனைவருக்கும் அன்னதானம் வழங்கப்படுகிறது. மேலும் மலையக மக்களின் நலன் கருதி பற்சிகிச்சை முகாம், இலவச மருத்துவ முகாம் என்பன சின்மயா மிஷனால் அவ்வப்போது நடத்தப்பட்டு வருகிறது. இவ்வாறு ஆன்மீக மற்றும் சமுதாய பணிகளை அமைதியான முறையில் ஆற்றிவரும் சின்மயா மிஷன் பணிகள் மேன்மேலும் சிறந்து விளங்க இறைவனைப் பிரார்த்தித்து நிற்கின்றோம். "மக்களுக்கு சேவை புரிவதே அதி உயர்ந்த பிரார்த்தனையாகும்"


### கொரோனா வைரஸால் உயிரிழப்புகள்;


# உண்மையை மறைக்கும் ஈரான் ஆய்வில் கசிந்தது உண்மை

**தெஹ்ரான், ஓக.5**

**ஈரானில் வைரஸ் காரணமாக உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை அரசு தெரிவிக்கும் எண்ணிக்கையை விட 3 மடங்கு அதிகம் என பி.பி.சி. செய்தி நிறுவனம் நடத்திய ஆய்வில் தெரியவந்துள்ளது.**

பி.பி.சி செய்தி நிறுவனத்திடம் ஈரான் அரசின் கொரோனா வைரஸ் தொடர்பான இரகசிய ஆவணங்கள் கிடைத்துள்ளன. அந்த ஆவணங்களின்படி கொரோனா வைரஸ் பரவத்தொடங்கிய நாள் முதல் ஜுலை 20 வரை ஈரானில் 4 லட்சத்து 51 ஆயிரத்து 24 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. ஆனால் அதே நாள் கணக்கீட்டின் படி 2 லட்சத்து 78 ஆயிரத்து 827 பேருக்குத் தொற்று பரவியுள்ளது என ஈரான் அரசு தெரிவித்துள்ளது. கொரோனா வைரஸ் காரணமாக ஜுலை 20 கணக்கீட்டின் படி 14 ஆயிரத்து 405 பேர் உயிரிழந்துள்ளனர் என்று சுகாதாரத்துறை மக்களிடம் தெரிவித்துள்ளது. ஆனால் அரசின் இரகசிய ஆவணங்களில் வைரஸ் தாக்குதலுக்கு இதுவரை 42 ஆயிரத்துக்கும் அதிகமானோர் உயிரிழந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதாவது அரசு மக்களிடம் தெரிவிக்கும் உயிரிழப்பு எண்ணிக்கையை விட ரகசிய ஆவணங்களில் தெரிவிக்கப்பட்டுள்ள உயிரிழப்புகளின் எண்ணிக்கை 3 மடங்கு அதிகம் ஆகும். தேர்தல், அரசியல் குழப்பம், மக்கள் போராட்டம் உள்ளிட்ட பல்வேறு காரணங்களை கருத்திற்கொண்டு ஈரான் அரசு கொரோனா வைரஸ் தொடர்பான உண்மைத் தகவல்களைத் தெரிவிக்காமல் மறைப்பதாக குற்றச்சாட்டு கள் எழுந்துள்ளன. (ரி1)



# நிறைவடைந்தது ஹஜ் யாத்திரை

ரியாத், ஓக.5

கொரோனாக் கட்டுப்பாடுகளுடன் இடம்பெற்ற ஹஜ் யாத்திரையின் இறுதி வழிபாடு கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றதையடுத்து இவ் வருட ஹஜ் யாத்திரை நிறைவுக்கு வந்தது. ஆண்டு தோறும் இடம்பெறும் ஹஜ் கடமையில் கடந்த ஆண்டில் 25 லட்சம் யாத்திரிகர்கள் பங்கேற்ற நிலையில் இந்த ஆண்டு 10,000 முஸ்லிம்கள் வரையே கலந்து கொண்டனர். முகக்கவசம் அணிந்த யாத்திரிகர்கள் ஹஜ்ஜின் இறுதி நாளில் மக்கா நகருக்கு அருகில் இருக்கும் மினாவில் சாத்தானுக்கு கல்லெறியும் வழிபாட்டில் ஈடுபட்டனர். எனினும் வழக்கம் போலன்றி கிருமி நீக்கம் செய்யப்பட்ட கற்களையே யாத்திரிகர்கள் பயன்படுத்தினர். ஞாயிறு மாலை மக்கா பெரிய பள்ளிவாசலை அடைந்த யாத்திரிகர்கள் இறுதியாக தவாப் எனப்படும் கஃபாவை வலம் வந்தனர். ஹஜ் வழிபாட்டுக் காலத்தில் புனித தலங்களில் எந்த கொரோனாத் தொற்று சம்பவமும் பதிவாகவில்லை என்று சவூதி அரேபிய சுகாதார அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர். கலந்து கொண்ட யாத்திரிர்கள் ஹஜ்ஜுக்கு பின்னர் கட்டாய சுயதனிமைப்படுத்தலை கடைப்பிடிக்க வேண்டும் என நிர்வாகம் சுட்டிக்காட்டியுள்ளது. (ரி1)



# சிரியாவில் துப்பாக்கிச் சண்டை 18 பேர் உயிரிழப்பு

டமாஸ்கஸ், ஓக.5

சிரியாவில் லடஹியா மாகாணத்தில் அரசு ஆதரவு படையினருக்கும் கிளர்ச்சியாளர்களுக்கும் இடையே நேற்று இடம்பெற்ற துப்பாக்கிச் சண்டையில் அரசு ஆதரவு படையினர் 12 பேர், கிளர்ச்சியாளர்கள் 6 பேர் என மொத்தம் 18 பேர் உயிரிழந்தனர்.

மேலும், இரு தரப்பிலும் 20க்கும் அதிகமானோர் படுகாயமடைந்துள்ளனர். சிரியாவில் 2011ஆம் ஆண்டு தொடக்கம் உள்நாட்டுப் போர் நடைபெற்று வருகிறது. இந்தப் போரில் சிரிய அரசுக்கு ரஷ்யா ஆதரவு அளித்து வருகிறது. அதேபோல் கிளர்ச்சியாளர்களுக்கு துருக்கி ஆதரவு அளித்து வருகிறது. இதற்கிடையில் கிளர்ச்சியாளர்கள் கட்டுப்பாட்டில் இருக்கும் இட்லிப், அலிப்போ, ஹமா உள்ளிட்ட பகுதிகளை கைப்பற்றும் நோக்கில் சிரிய அரசு ஆதரவுப் படைகள் தீவிர முயற்சி மேற்கொண்டு வருகின்றன.

இதனால் அரசு ஆதரவு படைகளுக்கும் கிளர்ச்சியாளர்களுக்கும் இடையே அவ்வப்போது மோதல் இடம்பெற்று வருகின்றது. (ரி1)

# நோர்வே பயணிகள் கப்பலில் 41 பேருக்கு கொரோனா

ஒஸ்லோ, ஓக.5

நோர்வே கப்பலொன்றில் குறைந்தது பயணிகள் மற்றும் பணியாளர்கள் உட்பட 41 பேர் கொரோனாத் தொற்றுக்குள்ளாகியுள்ளனர் என்று அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

'எம்.எஸ். ரோல்ட் அமுண்ட்சன்' என்ற இந்தக் கப்பலில் பயணித்த மேலும் நூற்றுக் கணக்கான பயணிகள் தனிமைப்படுத்தப்பட்டு சோதனை முடிவுகளுக்காக காத்திருக்கின்றனர் என்றும் கப்பலை வைத்திருக்கும் நிறுவனம் தெரிவித்துள்ளது.

நோர்வே நிறுவனமான ஹர்டிகுரூட்டனுக்குச் சொந்தமான இந்தக் கப்பல் வெள்ளிக்கிழமை வடக்கு நோர்வேயில் உள்ள டிராம்சோ துறைமுகத்தை வந்தடைந்தது. கொரோனா வைரஸ் பரவல் காரணமாக கப்பலின் அனைத்துப் பயணங்களையும் ஹர்டிகுரூட்டன் நிறுவனம் நிறுத்தி வைத்துள்ளது. 530 பயணிகளை ஏற்றுச்செல்லும் திறன் கொண்ட இந்தக் கப்பலில் தற்போது 160 பணியாளர்களும் 177 பயணிகளும் உள்ளனர் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன. அதேநேரம் கப்பலில் பயணித்த பயணிகளுக்கும் 14 நாள்களுக்குள் தரையிறங்குவதற்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது. கப்பலில் கொரோனாத் தொற்று ஆரம்பமாவதற்கு முன்னர் ஏதேனும் சுகாதார ஆலோசனை சட்டங்கள் மீறப்பட்டுள்ளனவா? என்பதை விசாரிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ரி1)






### ஊழல் குற்றச்சாட்டுகளால்

# நாட்டை விட்டு வெளியேறும் ஸ்பெயின் முன்னாள் மன்னர்

மாட்ரிட், ஓக.5

கடும் ஊழல் குற்றச்சாட்டுக்களை அடுத்து ஸ்பெயினின் முன்னாள் மன்னர் ஜுவான் கார்லஸ் நாட்டை விட்டு வெளியேறுவதற்குத் தீர்மானித்துள்ளார். சவூதி அரேபியாவுடனான விரைவு ரயில் போக்குவரத்து திட்டத்தில் 100 மில்லியன் டொலர் ஊழல் மோசடியில் ஈடுபட்டார் என்று தெரிவித்து முன்னாள் மன்னர் ஜுவான் கார்லஸ் மீது குற்றஞ்சாட்டப்பட்டது.

இது தொடர்பான வழக்கு விசாரணைகள் ஸ்பெயின் உயர்நீதிமன்றத்தில் கடந்த ஜுன் மாதம் பகிரங்க விசாரணை நடந்தது. குற்றச்சாட்டுகளை 82 வயதான ஜுவான் கார்லஸ் மறுத்துவந்தார். 1975இல் ஜெனரல் பிரான்சிஸ்கோ பிராங்கோ மரணமடைந்த பிறகு ஆட்சியைப் பிடித்த கார்லஸ், ஸ்பெயினை எதேச்சதிகாரப் பிடியிலிருந்து ஜனநாயகப் பாதைக்கு திருப்பியவர் என்ற அளவில் மிகவும் மதிக்கப்பட்டார். ஆனால் ஊழல் குற்றச்சாட்டுக்களினால் அவருக்கு எதிராக மக்கள் கிளர்ந்தெழத் தொடங்கினர். இந் நிலையில் மன்னர் கார்லஸ் நாட்டை விட்டு வெளியேறும் முடிவை எடுத்துள்ளார். இது தொடர்பாக ஸ்பெயின் மன்னர் மாளிகை வெளியிட்ட செய்தியில் மன்னர் ஜுவான் கார்லஸ் தன் மகன் பிலிப்பிற்கு எழுதிய கடிதத்தை மேற்கோள்காட்டி நான் ஸ்பெயினை விட்டு வெளியேறுகிறேன் என்று கூறியுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனாலும் அவர் திங்கள் அறிவிப்புக்கு முன்னரே நாட்டை விட்டு வெளியேறிவிட்டார் என உள்நாட்டு ஊடகம் ஒன்று தெரிவித்துள்ளது. (ரி1)

# இருமினால் தண்டனை

லண்டன், ஓக.5

காற்பந்தாட்டத்தின்போது எதிரணி வீரர்களின் அருகிலோ அல்லது நடுவரின் முகத்துக்கு அருகிலோ சென்று வேண்டுமென இருமினால், அந்த வீரர்களுக்கு விளையாடத் தடை விதிக்கப்படும் என்று இங்கிலாந்து கால்பந்தாட்டச் சங்கம் அறிவித்துள்ளது.

அத்துடன் கால்பந்தாட்ட வீரர்களிடையே கொரொனா வைரஸ் பரவலைத் தடுக்க பல்வேறு அறிவுறுத்தல்களையும் அந்தச் சங்கம் வெளியிட்டுள்ளது. மைதானங்களில் உமிழ்நீர் துப்பக் கூடாது, வீரர்கள் ஒருவரை ஒருவர் கட்டி அணைத்துக் கொள்ளக் கூடாது, முடிந்தளவு சமூக இடைவெளி பேணப்பட வேண்டும் என்ற அறிவுறுத்தல்களை அந்தச் சங்கம் வழங்கியுள்ளது.

வீரர் ஒருவர், வேண்டுமென்றே மற்றொரு வீரர் அருகே அல்லது நடுவர் முகத்துக்கு அருகே இருமினால் அவரை சிவப்பு அட்டை காட்டி ஆட்டத்திலிருந்து வெளியேற்றக் கூடிய வகையிலும், மஞ்சள் அட்டை காட்டித் தண்டிக்கக் கூடிய வகையிலும் இங்கிலாந்து கால்பந்தாட்டச் சங்கம் நெறிமுறைகளில் மாற்றம் செய்துள்ளது.

(ரி2)



# மகளிர் ரி-20 தொடர் நிச்சயம் நடைபெறும்

"மகளிர் ரி20 சலஞ்சர்ஸ்" கிரிக்கெட் தொடர் நிச்சயம் நடைபெறும் என்று இந்தியக் கிரிக்கெட் சபையின் தலைவர் சௌரவ் கங்குலி தெரிவித்துள்ளார்.

மகளிர் ஐ.பி.எல். தொடருக்கு முன்னதாக "மகளிர் ரி20 சலஞ்சர்ஸ்" கிரிக்கெட் தொடர் கடந்த இரு ஆண்டுகளாக நடத்தப்பட்டு வருகின்றது. தற்போது கொரோனா தொற்றுக் காரணமாக கிரிக்கெட் தொடர்கள் பல நிறுத்தப்பட் டுள்ள நிலையில், மகளிர் ஐ.பி.எல். தொடரை நடத்த வேண்டும் என்ற கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டுள் ளன. எனினும் "மகளிர் ரி-20 சலஞ்சர்ஸ்" கிரிக்கெட் தொடர் நடத்தப்படுமா என்பது உறுதிப்படுத்தப்படாதிருந்த நிலையில் இந்தியக் கிரிக்கெட் சபையின் தலைவர் கங்குலி மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் தெரிவித்துள்ளதாவது:

"மகளிர் ரி20 சலஞ்சர்ஸ்" கிரிக்கெட் தொடருக்கான ஏற்பாடுகள் தீவிரமாக நடைபெற்று வருகின்றன. இந்திய அணி வீராங்கனைகளுக்குப் பயற்சி முகாம் நடத்தப்படவுள்ளது-என்றார்.

அதேவேளை, 3 அணிகளுக்கு இடையே நடைபெறவுள்ள இந்தத் தொடர் எதிர்வரும் நவம்பர் மாதம் முதலாம் திகதி முதல் ஐக்கிய அரபு அமீரகத்தில் நடைபெறுவதற்கு வாய்ப்புள்ளது என்று இந்தியக் கிரிக்கெட் சபையின் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

(ரி2)

# வயதில் குளறுபடிகள் செய்தோருக்கு ஒரு வாய்ப்பு

உள்ளூர் கிரிக்கெட் ஆட்டங்களில் தத்தமது வயது குறித்து முறைகேடுகளில் ஈடுபட்ட கிரிக்கெட் வீரர்கள் தாமாகவே முன்வந்து குற்றத்தை ஒப்புக்கொண்டால் பொதுமன்னிப்பு அளிக்கப்படும் என்று இந்திய கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது.

இந்தியாவில் தேசிய, மாநில அளவுகளில் பல்வேறு வயதுப் பிரிவுகளில் கிரிக்கெட் அணிகள் உள்ளன. அந்த அணிகளில் விளையாடும் சில வீரர்கள் தங்களின் வயது தொடர்பில் பிழையான தகவல்களை வழங்கி விளையாடுகின்றனர் என்ற குற்றச்சாட்டு நீண்ட காலமாக உள்ளது.

தற்போது, அது தொடர்பில் கவனம் செலுத்தியுள்ள இந்திய கிரிக்கெட் சபை, அவ்வாறான குற்றத்தில் ஈடுபட்டவர்கள் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னர் தமது குற்றத்தை ஒப்புக்கொண்டால் அவர்களுக்குப் பொதுமன்னிப்பு அளிக்கப்படும் என்று தெரிவித்துள்ளது.


(ரி2)

**வேலையாள் தேவை**

யாழ். மாநகரசபைக்குட்பட்ட பகுதியிலுள்ள Food City ஒன்றில் Home Delivery செய்வதற்கு முச்சக்கர வண்டி அனுமதிப் பத்திரமுள்ள விநியோகத்தர் (வயது எல்லை 30 - 60 இற்கும் இடைப்பட்ட ஆண் வேலையாள் தேவை.

072 611 5335

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



தோற்றம்
18.05.1927

மறைவு
06.07.2020

கடந்த 06.07.2020 இறைபதமடைந்த எமது குடும்பத்தலைவர்

### அமரர் கிருஸ்ணர் இராஜரட்ணம்

(ஓய்வுபெற்ற பொறியியலாளர் – பரந்தன் இரசாயன கூட்டுத்தாபனம்)

அவர்களின் வீட்டுக்கிருத்தியகிரியைகள் அன்னாரது இல்லத்தில் இன்று (05.08.2020) புதன்கிழமை நடைபெற்று முற்பகல் 11.00 மணியளவில் TCT மண்டபத்தில் நடைபெறும் அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

123, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம். குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

பிறப்பு
15 . 06 . 1934



இறப்பு
04 . 08 . 2020

### செல்லத்துரை இராசரத்தினம்

செல்லியாதீவு.பூநகரியைப்பிறப்பிடமாகவும் ஆலங்கேணி பூநகரியை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லத்துரை இராசரத்தினம் 04.08.2020 செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை அன்னமுத்து தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான கதிர்காமநாதன், பாலசுப்பிரமணியம் மற்றும் திருநாவுக்கரசு, செல்வராணி, அற்புதசோதி, சிவயோகநாதன், உருத்திரா, யோகேஸ்வரி (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.08.2020) புதன்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குடையான் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

ஆலங்கேணி,
பூநகரி

தகவல்:
குடும்பத்தினர்

சிறி - 077 992 7566
யோகேஸ்வரி (ஜேர்மனி - 004917670743933)



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 05.08.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.